
செப்ரெம்பர் - 2014

# அகவிழி

மனித மேம்பாட்டின் உயிர்ப்பு மிகு கல்விக்காய்...

விழி 10 பார்வை 109

ISSN 1800-1246



மேற்கு நாடுகளில் மாறிவரும் பாடசாலைகள்

வகுப்பறைக் கற்பித்தலும் மாணவர் ஒழுங்கும்

ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் கற்பித்தல் பாங்குகள்

ஆசிரியர், உயர்வதற்கு கற்பித்தலோடு தொடர்ந்து கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும் சமூகத்தின் கொண்டாட்ட தினம்

மேலதிக மொழிகளைக் கற்பித்தல்

கல்வியின் மாறுபாடுகள் அனைத்துலக மனிதனை நோக்கி

இது ஆசிரியர்களுடையது அல்ல... நம் தலைமுறைகளின் பிரச்சினை

ஆசிரியர்களே, என்ன செய்யப்போகிறீர்கள்

பாடப்புத்தக ஆக்கத்தில் தமிழ்

சிறுவர் மேம்பாடு சார்ந்த சமுதாய ஆய்வு என்னும் எண்ணக்கரு

கற்றல் கற்பித்தலுக்கான கணினி அறிவும் அதன் அவசியமும்

பேராசிரியர் சோ. சந்திரசேரம் • பேராசிரியர் ப.கா. பக்கீர் ஜஃபார்
பேராசிரியர் ம. கருணாநிதி • கலாநிதி கோணமலை கோணேசப்பிள்ளை
எ.வி. வேணுகோபாலன் • சமஸ் • பி.ஏ. கிருஷ்ணன் • பேராசிரியர் ச. மாடசாமி

www.viluthu.org

விலை: 100/=



இலங்கை தமிழ் சஞ்சிகை வரலாற்றில் முதன் முறையாக தீபாவளி மலர்
ஒக்டோபர் மாத சஞ்சிகை இதோ வெளிவந்துவிட்டது
OLIARAZI
மாத சஞ்சிகை
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
ஒளி - 01 இதழ் - 11
ஒக்டோபர் 2014
பக்கங்கள் : 100
அன்பு + அறிவு + அழகு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு
100 பக்கங்கள்
விலை ரூபா 60 மட்டுமே!
இலவசம் O/L மாதிரி வினாத்தாள் கையேடு
ஜூனியர் சுப்பர் ஸ்டார் வைஷாலினி
நல்லதொரு குடும்ப இலக்குடன்
தீபாவளி மலர் 2014
ஆன்மிகம்
திருக்கோணேஸ்வரம்...
சூரிய பகவான்...
மாவிட்டபுரம் காங்கேயமூர்த்தி...
அனுமன் செய்த தியாகம்...
சிறுகதைகள்
பழிக்குப் பழி...
கல்யாணம்...
தாய்மைக்குத் தண்டனை...
ஓர் அபலையின் வாழ்க்கை...
கவிதைகள்
இருட்டுத் தேசம்...
தாயும் சேயும்...
ஏக்கம்...
மறக்க முடியா மழை நாள்...
கட்டுரைகள்
தெய்வத் திருமகள்...
ரொமான்ஸ் இரகசியம்...
சாமுத்திரிகா இலட்சணம்...
ஒழியட்டும் நரகாசுரர்கள்...
ஆண்களை வசப்படுத்துங்கள்...
சினிமா
மறக்கமுடியாத சித்திரம்...
சினிமா விமர்சனம்...
'ஐ' இன் பிரம்மாண்டம்...
சர்ச்சைக்குள்ளான 'கத்தி'...
கருத்துக்கணிப்பு
வன்முறைக்கு வன்முறை சரியாகுமா?...
மருத்துவம்
நீங்கள் நலமா?...
விக்கல் வருவது ஏன்?...
பெண்களைத் துரத்தும் மறைமுக வில்லன்...
நேர்காணல்கள்
நட்சத்திர இல்லத்தரசி...
ஜூனியர் சுப்பர் ஸ்டார்...
தரம் 04
பிரபலங்களின் நுட்பமான 20 வினா - விடைகள்
அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு
ஆசிரியர்கள் வாசித்து அறிய வேண்டிய பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்
உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோகத் தொடர்புகளுக்கு: யாழ். - 0776569617 / 077 1945812
கொழும்பு - 0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு: 078 8864730 / 0787 273035

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

# உள்ளே......

ISSN 1800-1246


| | | |
|---|---|---|
| 1. | மேற்கு நாடுகளில் மாறிவரும் பாடசாலைகள் | 4 |
| 2. | வகுப்பறைக் கற்பித்தலும் மாணவர் ஒழுங்கும் | 7 |
| 3. | ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் கற்பித்தல் பாங்குகள் | 15 |
| 4. | ஆசிரியர், உயர்வதற்கு கற்பித்தலோடு தொடர்ந்து கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும் | 19 |
| 5. | சமூகத்தின் கொண்டாட்ட தினம் | 22 |
| 6. | மேலதிக மொழிகளைக் கற்பித்தல் | 24 |
| 7. | கல்வியின் மாறுபாடுகள் அனைத்துலக மனிதனை நோக்கி | 28 |
| 8. | இது ஆசிரியர்களுடையது அல்ல... நம் தலைமுறைகளின் பிரச்சினை | 32 |
| 9. | ஆசிரியர்களே, என்ன செய்யப்போகிறீர்கள் | 34 |
| 10. | பாடப்புத்தக ஆக்கத்தில் தமிழ் | 36 |
| 11. | சிறுவர் மேம்பாடு சார்ந்த சமுதாய ஆய்வு என்னும் எண்ணக்கரு | 38 |
| 12. | கற்றல் கற்பித்தலுக்கான கணினி அறிவும் அதன் அவசியமும் | 41 |


AHAVILI
3, Torrington Avenue
Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com

அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர்
ச. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்
நிறைவேற்றுப் பணிப்பாளர்(விழுது)

ஆசிரியர் குழு
க. சண்முகலிங்கம்
பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் தை. தனராஜ்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

து. ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

லெனின் மதிவானம்
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி அமைச்சு

வீ. தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர்: கல்வி முகாமைத்துவம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் துரை மனோகரன்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு கல்வி வலயம்

எஸ்.கே. பிரபாகரன்
விரிவுரையாளர், வணிகக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

ஆசிரியரிடமிருந்து.....

கடந்த தலை முறைவரை வாசிப்புப்பழக்கம் என்பது உயர்ந்த, நடுத்தர வர்க்கத்துப் கற்றோரின் குடும்ப வழக்கமாக இருந்தது முற்றிலும் உண்மையாகும். தற்போது வெகுஜன ஊடகமாக விளங்கும் தொலைக்காட்சி மற்றும் பொழுதுபோக்குத் தொடர் அலைவரிசைகளும் நவீன செல்லிடதொலைபேசிகளும் அதிகம் புழங்காத அக்காலக்கட்டத்தில் பல்வேறுவகைப்பட்ட வார, மாத இதழ்கள் மக்களிடையே கோலோச்சிக் கிடந்தன. குறிப்பாக, இளைய தலைமுறையினர் கட்டிளமைப்பருவ உளச்சிக்கல்களுக்குத் தம்மை ஆட்படுத்திக்கொள்ளாமல் அவற்றிற்கு வடிகாலாக, புத்தகங்களைத் தேடி வாங்குவதும் அவை வெளியாகும் நாளுக்காகத் தவம் கிடப்பதும் மட்டுமல்லாமல் தொடர் வாசிப்பை அரும்பெரும் நன்னடத் தையாகக் கொண்டு தம்மைத்தாமே நல்வழிப்படுத்திக் கொண்டனர். அவ்வாசிப்புப் பழக்கம் பெருவாரியான பெண்களிடம் வழக்கமாயிருந்தது.

அறியாமையில் உழலும் மக்களை விழிப்படையச் செய்து அவர்களின் அறிவுப்பசியைப் போக்குவது ஒன்றையே தம் தலையாயக் குறிக்கோளாக எண்ணி அச்சு ஊடகங்கள் அறத்தோடு செயல்பட்டன. இன்று நிலைமை தலைகீழ். நவீனத்திற்குப் பிந்தைய இக்காலக் கட்டத்தில் தன்னலம், குறுகிய குழுமனப்பான்மை, வெற்றுப்புகழ்ச்சி, முழு பொழுதுபோக்கு, வியாபார நோக்கு போன்றவை மிகுந்து ஊடகமும் ஒரு பெருவணிகக் குழுமமாக மாறிவிட்டதுதான் துரதிஷ்டவசம். சினிமாத்துறை சார்ந்த செய்திகளுக்கும் கிசுகிசுக்களுக்கும் பெருவாரியாக முக்கியத்துவம் தந்து வணிக இதழ்கள் தம் நீடித்த நிலைப்பைப் பல்வேறு சமரசங்களுக்கிடையில் தொழில் தர்மத்தை ஓரளவு கடைப்பிடித்து வந்தாலும் பாரம்பரியமிக்க ஊடகங்கள் சில நெறிபிறழாமல் அத்தொழில் தர்மத்தைக் கட்டிக்காத்து வந்தன. அவையும் இன்றைய தனியார் போட்டிச்சந்தையில் தம் தொழில் தர்மத்தை இழந்து விட்டன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அதேசமயம், இலக்கியத்தைப் போற்றி வளர்ப்பதாகப் பரப்புரை செய்துகொள்ளும் சிற்றிதழ் உலகத்தின் போக்குகள் மிகவும் விசித்திரமானவை. வீண் தற்புகழ்ச்சிக்கும் தனிநபர் தாக்குதல் வழக்கத்தை பேரளவு ஊக்குவிக்கும் நிகழ்ச்சிக்கும் பொன்னான நேரத்தை மட்டுமல்லாமல் மதிப்புமிக்க பக்கங்களையும் வெறுமனே வீணடித்து வருவது கண்கூடு. தவிர, அவற்றிற்கிடையே காணப்படும் இனக்குழு அரசியலால் ஆக்கப்பூர்வமான மாற்றுக் கருத்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் வழிவிடாமல் இரும்புத்திரை போர்த்தி அந்நியப்பட்டு நின்று அரற்றுவதையும் பெருந்திரளான வாசகர் கூட்டத்தைப் பார்த்துத் தூற்றுவதையும் இவை வாடிக்கையாகக் கொண்டுள்ளன. சுருங்கச் சொன்னால் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் காணப்படும் நிலையக் கலைஞர்கள்போல் அண்மைக்க காலமாக, இருவேறு ஊடகங்களிலும் நிலைய இலக்கியப் படைப்பாளிகள் மட்டுமே அவற்றை ஆக்கிரமித்துக்கொண்டு புதுவரவுகளுக்கு முட்டுக்கட்டையாக விளங்குவது கூட வாசக மனநிலையில் ஒருவித சோர்வையும்அவநம்பிக்கை கயையும்ஏற்படுத்திவிடுகின்றன.

இத்தகு நோக்கும் போக்கும் ஓர் அறிமுக வாசகனை வாசிப்பிலிருந்து விலக்கிக் கவனத்தைச் சிதறடித்து வந்தாரையெல்லாம் வரவேற்று வாழவைக்கும் மேம்பட்ட தொழிட்நுட்பம் கொண்ட கருத்துக்கும் காட்சிக்கும் பெருவிருந்து படைக்கும் இணைய தளங்களின் மீது தீரா மோகத்தை அவனுக்குள் மூட்டிவிடுவது குறிப்பிடத்தக்கது. மேலும், சர்வதேச அளவில் உடனடியாகக் கிடைக்கப்பெறும் புதுநட்பும் அதனைப் பேணும் அரட்டைக் கச்சேரிகளும் அவ்வாசகனுக்குப் பெரும் ஊக்கமளிக்கின்றன. தொடர் கதைகள் பலவற்றில் மனத்தைப் பறிகொடுத்து அவற்றின் செவ்வியல் தன்மைகள், ஒழுக்கச்சீல குணங்கள், உயரிய வாழ்வியல் விழுமியப் பண்புகள் நிறைந்த கற்பனைக் கதைமாந்தர்கள்மேல் அளப்பரிய பற்று கொண்டிருந்த பெண்ணினத்தை இன்று நெடுந்தொடர்கள் அதிலிருந்து விலகமுடியாதபடி ஆட்டிப்படைக்கின்றன என்றால் மிகையன்று.

தனிக்குடும்பநெறி, தன்முனைப்பு, தற்சார்பின்மை போன்றவை தவறாகச் சித்திரிக்கப்பட்டதன் விளைவும் தனிமனித நுகர்வுக் கலாச்சாரப் பண்பும் வாசிப்பைச் சுமையாக்கிவிட்டன. இயந்திர மயமாகிப் போன மனித வாழ்க்கையில் நல்ல நூல்களை வாங்கியோ அல்லது அருகாமையிலுள்ள நூலகங்களுக்குச் சென்றோ வாசிப்பதைத் தவிர மனிதர்களுக்கு ஏனைய எல்லாவற்றிற்கும் போதிய நேரமிருக்கின்றது. ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. நல்ல நூல்களும் வாசிப்பும் மனித வாழ்வை மேம்படுத்த வல்லவை மானுடத்தைப்போதிப்பவை. வளரச்செய்பவை


கதைச்சொல்லி சமூகம் நம்முடையது. எல்லாவற்றிற்கும் இங்கு கதைகள் உண்டு. சாதாரண நிகழ்வுகூட நம்மிடையே கதையாக உருப்பெறுவதென்பது வழக்கமாகும். சில சமயங்களில் வேடிக்கையும்கூட. நன்னெறிக் கதைகளும் வீரதீரக் கதைகளும் முறையே மனிதனை மகாத்மாவாகவும் மாபெரும் வீரனாகவும் ஆக்கியுள்ளன. மனிதநேயமும் மன நல்லிணக்கமும் அவற்றின் அடித்தளங்களாவன. நடப்புச் சூழலில் சமுதாயத்தில் மலிந்து காணப்படும் பல்வேறு சமூகச்சிக்கல்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், பண்பாட்டு நசிவுகள், நாகரிகச் சீரழிவுகள், மனிதாபிமானமற்ற போக்குகள், ஒடுக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் முதலியன வெடித்துப்பெருகக் காரணம் வாசிப்புப்பண்பை தனிமனித அளவிலும் குடும்ப அளவிலும் கைவிடப்பட்டுப் புறந்தள்ளிய தெனலாம்

எனவே ஒவ்வொருவரும் புத்தக வாசிப்பை வீண் வேலைப்பளுவாகக் கருதுவதை விடுத்து மன அமைதிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உகந்த பொன்னான பொழுது என்றெண்ணி மகிழுதல் அவசியம். புத்தக வாசிப்புப் பழக்கத்தை மக்கள் இயக்கமாக வளர்த்தெடுப்பதில் ஒவ்வொருவருக்கும் கணிசமான பங்கிருப்பதை மறுப்பதற்கில்லை. அதற்கு குடும்பமே முதற்படி. இக்குறிக்கோள் ஈடேற வாசிப்பைத் தனிமனிதன் இன்றே, இப்போதே நேசிக்கத் தொடங்கிடுதல் நலம்.

ச. இந்திரகுமார்

# மேற்கு நாடுகளில் மாறிவரும் பாடசாலைகள்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்



இலங்கை, இந்தியா உட்பட உலக நாடுகளில் வீதிகள், கட்டடங்கள், கடைத் தொகுதிகள், விமான நிலையங்கள், வாழ்க்கை வசதிகள் எல்லாமே மாற்றம் பெற்று வருகின்றன. 35 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த ஒருவர் இந்தியா சென்றுவிட்டுத் தற்போது இலங்கை வந்தபோது இவ்வாறான மாற்றங்களை அவதானித்து ஆச்சரியம் தெரிவித்தார். இவ்வாறான மாற்றங்கள் பிற துறைகளில் நிகழ்ந்தாலும் 20ஆம் நூற்றாண்டு முழுவதும் பாடசாலைக் கல்வி முறையில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவில்லை. வளர்முக நாடுகளிலும் சரி வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி இதுவே நிகழ்ந்தது. சகல நாடுகளிலும் மாணவர் சேர்வு அதிகரித்து, சகல பின்தங்கிய பிரிவினரும் பாடசாலைகளில் உள்ளவாங்கப்பட்டமை ஒரு முக்கிய வளர்ச்சியாயினும் பாடசாலைக் கல்வி மாற்றம் பெறுவதில்லை.

முதலாம் வகுப்பு தொடக்கம் 12 ஆண்டுக்கல்வி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயா இடைநிலைக் கல்வி, பின்னர் உயர்கல்வி அறிவானது பல பாடங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், அப்பாடங்களை உள்ளடக்கிய பாட ஏற்பாடு, மாணவர் தேர்ச்சியை அறிய பாடசாலைப் பரீட்சைகள், தேசிய ரீதியிலான பொதுப் பரீட்சைகள் (க.பொ.த (சா/த), (உ/த) ஆசிரியர்களே கல்வி அறிவை வழங்குபவர்கள், அவர்களே அறிவுடையவர்கள், மாணவர்கள் எதுவும் அறியாதவர்கள், அவர்களுக்கு அறிவைக் கடத்துவதே ஆசிரியர் பணி, எனவே பாடசாலைகளின் பணி அறியாதவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட அறிவை முறையாக வழங்குவது.

மேலும், பாடசாலைக்கென்று ஒரு அமைவிடம் உண்டு. சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மதில் சுவருக்குள் அமைந்துள்ள பாடசாலை வளாகம் பல வசதிகளைக் கொண்ட நிறுவனம். வரிசையாக அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகள், மாணவர்களைக் கட்டுப்படுத்தவும் மேற்பார்வை செய்யவும் வசதியான பெருவழிகள், கட்டிட அமைப்பில் வேறுபாடுகள் இருந்தாலும் உலகளாவிய ரீதியில் பாடசாலைகளின் அமைப்பில் ஒரு ஒருமைப்பாட்டைக் காணலாம்.

சுருங்கக் கூறின் பாடசாலைகள் பெரிய அளவில் மாற்றங்களுக்குள்ளாவதில்லை. பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர் ஒருவர் 50 ஆண்டுகளுக்குப் பின் அதே பாடசாலைக்குள் சென்றால் ஒரு சில புதிய பட்டங்கள், திருத்தப்பட்ட கட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாற்றங்களைக் காண முடியாது. உலகிலும் சமூகத்திலும் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்தாலும் பாடசாலைகளில் அவை பொதுவாகப் பிரதிபலிப்பதில்லை. இதன் காரணமாகப் பாடசாலை முறையானது மாற்றத்தை விரும்பாத 'பழமை பேணும் நிறுவனம்' என்ற பெயரைப் பெற்றுள்ளது, பாடசாலைகள் ஒரே வகையான பணியை ஒரே வகையான முறையில் ஆற்றி ஒரே வகையான பெறுபேறுகளைப் பெற்று வருகின்றன என்று கூறுவதில் தவறில்லை. அமெரிக்கக் கல்விமுறை பற்றி ஓர் அறிஞர் கூறியது மனங்கொளத்தக்கது:

'அமெரிக்க சமூகத்தில் வேறு எந்தத் துறைக்கும் செய்யப்படாத செலவு கல்வித் துறைக்குச் செலவிடப்பட்டது. ஆனால் கல்வித்துறை எந்த வகையிலும் மாறவில்லை. காலை 9 மணி முதல் 3 மணி வரை கல்வியாண்டு, இம்மரபே இன்றுவரை நீடிக்கின்றது (Mann-1992).

அவருடைய கருத்தின்படி 17 ஆண்டு காலமாக 9, 13, 17 வயது அமெரிக்க மாணவர்களின் வாசிப்புத்திறன் அதிகரிக்கவேயில்லை.

அவர் கூறும் மற்றொரு கருத்து முக்கியமானது. '1950 தொடக்கம் கணினி பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அதே வேகத்தில் பாடசாலைக் கல்வியும் முன்னனேற்றம் கண்டிருந்தால் 1 - 12 ஆண்டுக்கல்வியை 10 நிமிடங்களில் மூன்று சதம் செலவில் மாணவர்களுக்கு வழங்கி விட முடியும்'.

எவ்வாறாயினும் பல மாற்றங்கள் கல்வித் துறையில் ஏற்பட்டு வருவதை மறுக்க முடியாது. வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் ஏற்பட்டுள்ள பாடசாலை மாற்றங்களை ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர். இவை வளர்முக நாடுகளில் உள்ள கல்வித்துறை ஆர்வலர்களுக்குப் (ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர்கள்) பயனுடையவையாகும். ஏனெனில் கடந்த காலங்களில்

மேலைநாட்டுக் கல்விச் சிந்தனைகளும் கல்வித்துறை மாற்றங்களும் கீழை நாடுகளில் கல்வித்துறைச் சீர்திருத்தச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன.

காலனித்துவ காலத்தில் அந்நிய ஆட்சியாளர்கள் கல்வித்துறை மாற்றங்களை ஏற்படுத்திய போதெல்லாம் தமது தாய்நாட்டின் கல்விச் சிந்தனைகளின் செல்வாக்குக்கு உள்ளாயினர். உள்ளூர் மக்களின் ஆலோசனையும் அனுமதியும் இன்றியே மேலை நாட்டுக் கல்வி ஏற்பாடுகள் இறக்குமதியாயின. ஆனால் இந்நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்னர் கல்வி முறையில் காணப்பட்ட பல காலனித்துவ அம்சங்கள் அகற்றப்படலாயின. எவ்வாறாயினும் அண்மைக் காலங்களில் இந்நாடுகளின் கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் மேலை நாடுகளின் கல்வித்துறையில் காணப்படும் 'மிகச் சிறந்த செயற்பாடுகளை' இனங்கண்டு, பொருத்தமானவற்றைச் செம்மைப்படுத்தி அறிமுகம் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பின்புலத்தில் சில மாற்றங்களை அறிந்து கொள்வது பயனுடையதாகும்.

★ பல மேலை நாடுகளில் பாடசாலைகள் சுய ஆட்சித்தன்மை உடையனவாய் மாறி வருகின்றன. அவை தமக்குத் தேவையான நிதியைத் தாமே திரட்டிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றன. உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் இன்று வளர்முக நாடுகளும் பாடசாலை மட்ட முகாமைத்துவம் அல்லது பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரில் சுய ஆட்சித் தன்மையுடைய பாடசாலைகளை விருத்தி செய்ய முற்பட்டுள்ளன.

★ பாடசாலைகள் அரசாங்கத்தின் பல மட்டங்களிலிருந்து நிதி உதவி பெறுகின்றன. அதற்குப் பிரதி உபகாரமாகப் பாடசாலைகள் சில முக்கியமான அறிவுத் தொகுதிகளையும் திறன்களையும் கற்பித்தாக வேண்டும். ஒரு பிள்ளையானது பாடசாலையில் சேரும்போது அப்பிள்ளைக்கான பண ஆளணி (Voucher) வழங்கப்படுகின்றது. பிள்ளையின் கல்வித் தேவைகளைக் கருத்திற் கொண்டு, பிள்ளைக்கான பணம் அல்லது கல்விக் கொள்வனவு சக்தி தீர்மானிக்கப்படுகின்றது.

★ பாடசாலைகள் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கட்டிடங்களில் நடாத்தப்படுகின்றன. தொழில் நிறுவனங்களால் கட்டப்பட்டு பாடசாலைக்குக் குத்தகைக்கு விடப்படும் கட்டிடங்கள் அதிகமாகி வருகின்றன.

★ அரசாங்கப் பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் தமக்குத் தேவையான அலுவலர்களைத் (ஆசிரியர் உட்பட) தாமே தெரிவு செய்து கொள்கின்றன. கல்வி போதனையிலும் கற்றல் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ள பலரும் ஆசிரியர்கள் என அழைக்கப்பட மாட்டார்கள். பெரும்பாலான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவர். ஒப்பந்தங்களின்படி குறித்த விலைக்கு அவர்கள் குறித்த சேவைகளை வழங்குவர். புதிய தொழில் வல்லுனர்கள் சம்பளம் பெறமாட்டார்கள். செயற்றிட்ட அடிப்படையிலேயே தொழில் புரிவர். பாடசாலையில் நிரந்தரமான தொழில்களைச் செய்யமாட்டார்கள்.

★ பாடசாலைகள் தனித்து இயங்காது பல்வேறு தொடர்புகள், இடைத்தாக்கங்களின் ஊடாக வலைத் தொகுதிகளை (Networking) ஏற்படுத்திக் கொள்ளும். ஏனைய பாடசாலைகளுடன் முறையான தொடர்புகளைக் கொள்ளும். இத் தொடர்புகள் பல்லூடகம் மூலமானதாக அமையும். பாடசாலைகள் மாணவர்களைப் பெற்றுக்கொள்ளப் பயனற்ற போட்டிகளில் ஈடுபடாது, தமக்குள் ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும்.

★ மேலை நாடுகளில் உள்ள அதி சிறந்த பாடசாலைகள், உலகளாவிய ரீதியில் பாடசாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும். அப்பாடசாலைகள் வெளிநாடுகளில் வளாகங்களையும் ஏற்படுத்தி உள்ளன.

★ எவ்வாறு உலகளாவிய பல்கலைக்கழகங்கள் 'உலகில் சிறந்த பல்கலைக்கழகங்களாக' வளர்ச்சியுற முயற்சிப்பது போல் மேலை நாடுகளின் சிறந்த பாடசாலைகள் 'உலகில் சிறந்த பாடசாலைகளாக' வளர்ச்சியுறும் எண்ணத்தையும் முன்வைத்துள்ளன.

★ மேலை நாடுகளில் பிள்ளைகளின் இல்லங்களும் பாடசாலைகளாக மாறி வருகின்றன. பல்வேறு காரணங்களுக்காகப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப விரும்பாத பெற்றோர்கள் தமது வீடுகளில் வைத்து அவர்களுக்குக் கல்வி வழங்குகின்றனர். அதற்குப் பாடசாலைப் பாடத்திட்டத்தையும் போதனாசிரியர்களையும் பயன்படுத்தகின்றனர்.

★ கேம்பிரிஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ஓர் அதிர்ச்சியான எதிர்வு கூறலை முன்வைக்கின்றார் (David Hargreaves என்பார்). அவர் மேலை நாடுகளின் கல்வி முறைகளின் போக்குகளை ஆராய்ந்த விடத்து (1997) பின்வரும் முடிவுக்கு வருகின்றார்.

அடுத்த 25 ஆண்டுகளில் நம் 'கல்விமுறை' என்ற ஒன்றைப் பற்றிப் பேசமுடியாது இருக்கும். ஒருமைப்பாடான கல்வி முறையானது சிதைந்து போய்விடும். அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் முறையான கலிவிமுறை என்ற ஒன்று

இருக்காது. பல்வகையான கல்வி முறைகள், கற்றல் கற்பித்தல் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்துவிடும்.

மேற்கூறப்பட்ட மாற்றங்கள் சற்று தீவிரமானவையாக இருந்தபோதிலும் அவை இன்றைய கல்வி முறைகளில் ஏற்கனவே வந்து படிந்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவை யாவும் முற்றாகவே இலங்கைக்குப் பொருத்தமற்றவை என்று கூறமுடியாது. இவற்றின் சில அம்சங்களாவது குறைந்தபட்ச அளவில் இலங்கையின் கல்வி ஏற்பாடுகளில் படிந்துள்ளமை பற்றி சுட்டிக்காட்ட முடியும். எனினும் இவ்விடயம் தனியாக ஆராயப்பட வேண்டியதொன்று.

மேலை நாடுகளின் தகவல் தொழில்நுட்பப் புரட்சி, இணைய தளவசதிகள் என்பவற்றோடு, ஆசிரியர்களுக்கான சம்பளச் செலவின் மிகையான அதிகரிப்பு போன்ற காரணங்களால் எழுந்துள்ள ஒரு புதிய சிந்தனை ஆசிரியர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதாகும். இதனால் ஆசிரியர் தொகையையும் அதனால் ஏற்படக் கூடிய செலவுகளையும் குறைத்து விடலாம் என்று கருதப்படுகின்றது.

இது ஒரு வகையில் ஆசிரியர் தொழிலை ஊழியச் செறிவிலிருந்து தகவல் தொழில்நுட்பச் செறிவுள்ளதாக மாற்றும் ஒரு முயற்சியாகும். மாணவர்கள் சுயமாகக் கல்வி பெறுவோராக மாற்றம் பெற்று ஆசிரியர் உதவியின்றியும் அவர்களில் தங்கியிராமலும் இணையதள கற்றல் சாதனங்களையும் கற்றல் பொதிகளையும் பயன்படுத்திக் கற்பதையும் இது குறிக்கும்.

மேலைநாடுகளில் 1960கள் தொடக்கம் அரசாங்கக் கல்விச் செலவில் அதிக மாற்றங்கள் ஏற்படவில்லை. பணவீக்கத்துக்கு ஏற்ப ஆசிரியர் சம்பளங்கள் மட்டும் அதிகரிக்கப்பட்டன. கல்விச் செலவுகள் பெரும்பாலும் ஆசிரியர் சம்பளங்களை உள்ளடக்குவன. தகவல் தொழல்நுட்பத்தின் பெரு வளர்ச்சியின் காரணமாக வழமையான வகுப்பறை கற்பித்தலைக் குறைத்து ஆசிரியர்களுக்கான தேவையையும் குறைக்கும் சிந்தனை மேலைநாட்டுக் கலவிமுறைகளில் உருவாகியுள்ளது.

மாணவர்களின் சுயகற்றல் திறன்களை வளர்த்து அவர்கள் தரமாக வாழ்க்கை நீடித்த கல்வியை பெற உதவ அவர்கள் பயன்படுத்தக் கூடியதகவல் தொழில்நுட்பக் கற்றல் பொதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஆசிரியர்களின் தேவை குறைய வாய்ப்புண்டு என்பது எதிர்காலவியலாளர் கருத்து.

பாடசாலைகளில் ஆசிரியரல்லாத புதுமுறையான கல்வியாளர்கள் புதுப்புதுக் கடமைகளுடன் உருவாகுவர். இவர்களுடைய சம்பளங்களும் அதிகமாக இருக்கும்.

பாடசாலைகள் 'முழுமையான' பிள்ளைகளை உருவாக்குவதை விடுத்த குறிப்பான, தெளிவான வாழ்க்கைப் பயனுடைய குறிக்கோள்களுடன் பணியாற்ற வேண்டும். என்றும் விஞ்ஞானம், கணிதம் போன்ற முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும் என்பது எதிர்காலவியலாளர் கருத்து. சர்வதேச ரீதியாகப் பாடசாலைகளும் ஒழுக்கப்பாங்கான பிள்ளைகளைவிட அறிவாற்றல் மிக்க பிள்ளைகளையே உருவாக்க விரும்புவதாகத் தெரிகின்றது. இவ்வாறான கல்விக் கொள்கைகள் பிடிக்காமல் போனதால்தான் ஐக்கிய நாடுகள் சபை 1995ஆம் ஆண்டை 'சகிப்புத்தன்மை ஆண்டாகப்' பிரகடனம் செய்ய நேர்ந்ததாகக் கூறுவர்.

மேல்நாட்டுக் கல்விமுறைகள், கல்வித்திட்டங்கள் என்பன மீண்டும் புலமைப் பாங்கான (Academic) மரபுவழியான பாட அடிப்படையிலான கலைத்திட்டத்தை மீள் அறிமுகம் செய்வதாகத் தெரிகின்றது. இவற்றில் கணிதமும் விஞ்ஞானமும் முக்கிய இடம் பெறுகின்றன. இன்று எல்லா அரசாங்கங்களுமே எழுத்தறிவு, எண்ணறிவு, பாடசாலைகளுக்கிடையிலான போட்டி, சிறந்த பாடசாலை களுக்குச் சன்மானங்கள், தேர்ச்சிகளுக்கான சான்றிதழ், கல்வியை வணிகமயமாக்கல், தொழிற் சந்தைக்குத் தேவையான திறன்கள் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

இந்நாடுகளின் கல்விக்கொள்கைகள் மனிதநேயம், இன, சமய வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளல், ஒவ்வொரு மனிதனையும் கௌரவித்தல், புவியைப் பாதுகாத்தல், உலகப் பிரசையாக விருத்தியுறுதல் போன்ற உயர்நிலைக் (High Order) குறிக்கோள்களை உற்சாகத்துடன் ஆதரிப்பதாயில்லை என்ற விமர்சனமும் உண்டு. இவை முக்கியமானவையாயினும் இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாராட்டப்படுவதில்லை. பாட ஏற்பாடானது உடனடியாகப் பயன்தருவதாய் இருந்தால் மட்டுமே பெறுமதிமிக்கது என்ற கருத்து வளர்ச்சி பெற்று வருகின்றது. பாடசாலை மாணவர் மத்தியில் ஒழுக்க விழுமியங்களின் வீழ்ச்சி, அதன் காரணமாக வன்முறைக் கலாசாரத்தின் வளர்ச்சி, கலாசார சீர்கேடு என்பன மிகுந்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# வகுப்பறைக் கற்பித்தலும் மாணவர் ஒழுங்கும்

பேராசிரியர் ப.கா. பக்கீர் ஜஃபார்



கற்றல் கற்பித்தல் செயற்பாடு ஆதிகாலத்தில் இருந்தே ஆரம்பித்து விட்டது. ஆதி மனிதன் ஆதம் (அலை) அவர்களைப் படைத்த அல்லாஹ் அவர்களுக்குப் பொருட் களின் பெயர்களையும் அவைகளின் தாற்பரியங்களையும் கற்பித்துக் கொடுத்தான். அதன்பின்பு மலக்குமார்களை அழைத்து அவை பற்றி அவர்கள் யாதும் அறிவார்களா என வினா எழுப்பினான். தமது அறியாமையை அவர்கள் ஏற்றுக் கொண்டதும் நபி ஆதம் (அலை) அவர்களிடம் அவைகள் பற்றிக் கற்றுக் கொள்ள அவர்களுக்குக் கட்டளையிட்டான். அதாவது, முதல் மனிதன் படைக்கப் பட்டதும் முதலில் இடம் பெற்ற செயற்பாடு கற்றல் கற்பித்தலாகும். அன்றிலிருந்து மனித இனம் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டே வருகின்றது. ஆயினும், கற்றல்-கற்பித்தல் பற்றிய கருத்துக்கள் மனித நாகரிகம் மேம்பட்டுக் கொண்டு செல்லச் செல்ல மாறுபட்டுச் சென்றிருப்பதை நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம்.

கல்வி கேள்விகளில் அக்காலத்தில் கிரேக்க நாடு சிறப்புற்றிருந்தது. விஞ்ஞானம் என்ற சொல் நடைமுறையில் இல்லாத அக்காலத்தில் தத்துவமும் தத்துவவாதிகளும் அறிஞர்களாக, கல்வியில் மேம்பட்டவர்களாக மதிக்கப்பட்டனர். அவர்களுள் கல்விசார்ந்த கருத்துக்களை முன்வைத்த சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் கற்பித்தல்-கற்பித்தல் தொடர்பாகப பல வரைவிலக் கணங்களை முன்வைத்தனர். அவர்களின் கருத்துக்கள் பாட மையமானவையாக அமைந்திருந்ததைக் காண்கின்றோம். தனது அகடமி என்ற கல்வி நிறுவனத்தின் முன்பாக 'கேத்திர கணிதம் அறியாதவன் இதற்குள் நுழையாதிருப்பானாக' என பிளாட்டோ அறிவித்தல் பலகையொன்றை வைத்த சம்பவம் இதற்கு நல்லதொரு அத்தாட்சியாகும். இந்தியாவில் பிராமண இனத்தவருக்குச் சார்பான கல்வி முறையொன்று அக்காலத்தில் இருந்ததைக் காண்கின்றோம். அத்துடன் அங்கு குறைந்த சாதியில் பிறந்த பிள்ளைகளுக்கு கல்வி மறுக்கப்பட்டது. அவர்கள் கல்வி கற்பது பாவம் என்ற கருத்து பரப்பப்பட்டிருந்தது. இதைத் தவிர, குருகுலக் கல்வி முறைகள் அங்கு நடை முறையில் இருந்ததையும் அறிய முடிகின்றது.

'கல்வியென்பது எல்லோராலும் கற்க முடியாதது. கல்வி கற்கும் ஆற்றல் ஒரு சிலருக்கு மட்டும் பிறப்புரிமையாகக் கிடைக்கின்றது.' என்ற கருத்து ரூஸோவின் 'பிள்ளை மையக்கல்வி' பற்றிய கோட்பாட்டின் செல்வாக்கின் காரணமாகச் செயலிழந்தது. காலம் செல்லச் செல்ல கல்வித் துறையில் வாழ்க்கை நீடித்த கல்வி, மீளநிகழ் கல்வி, வளர்ந்தோர் கல்வி, திறந்த கல்வி, அனைவருக்கும் பல்கலைக்கழகக் கல்வி போன்ற அமிசங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன. 'ஆசிரியன் பிறக்கின்றான்' என்ற நம்பிக்கையின் ஆதிக்கம் குறைந்து ஆசிரிய பயிற்சியின் அவசியம் வலியுறுத்தப்படும் கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலைமையில், நாம் பெறும் ஆசிரியர் பயிற்சி கற்பனையில் நாம் காணும் இலட்சிய மாணவனுக்கு மட்டும் கற்பிக்கக் கூடியதாக அமையாமல் யதார்த்தமாக நமது நாட்டின் பாடசாலையில் கற்கும் நமது நாட்டு மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வோம். ஆயினும், பல ஆசிரியர்கள் இன்றைய மாணவர்கள் அவர்களின் கற்பித்தல் முறைக்கு இயைந்தவர்களாக இல்லை என்று கூறிக் குறைபட்டுக் கொள்கின்றனரேயன்றி அம்மாணவர்களுக்கேற்ற வகையில் எப்படிக் கற்பிக்கலாம் என்பதை அறியாதவர்களாகவுள்ளனர்.

ஆதிகாலத்தில் இருந்த குரு-சிஷ்ய உறவின்படி, ஆசிரியர் சொல்வதெல்லாம் வேத வாக்காகவும் செய்வதெல்லாம் கல்வியின் அமிசங்களாகவும் கருதப் பட்டன. மாணவன் அடங்கி ஒடுங்கி பயபக்தியுடன் வகுப்பில் இருந்தான். தமது கல்விக்காக குருவின் குடும்பத்தினரின் வீட்டு வேலைகளையெல்லாம் செய்து கொடுத்தான். இவையெல்லாம் கல்விகற்கும் தொடர் செயற்பாட்டில் அத்தியாவசியமான அமிசங்களாகக் கருதப்பட்டு சமூகத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டது. ஆசிரியர் மாணவனுக்குத் தான் விரும்பியபடி தண்டனை வழங்குவதற்கான பூரண அதிகாரம் கொண்டவராக இருந்தார். அவரின் கற்பித்தலில் வெகுமதியைவிட தண்டனை அதிகமாக ஆதிக்கம் செலுத்தியது. மாணவர்கள்



குருபக்தியை முதன்மைப்படுத்தினர். குரு சாபத்தைப் பயந்தனர்.

ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை என்பதை ஆசிரியர்கள் மனத்தில் கொள்ளல் அவசியம். அன்றைய சமூகத்தை ஒத்ததாக இன்றைய சமூகம் இல்லை. சமூக வாழ்க்கை பாரிய மாற்றம் கண்டுள்ளது. மக்களின் மனப்பான்மைகள் மாறி விட்டன. நவீன தொழினுட்பங்களின் செல்வாக்கும் கருத்துக்களின் செல்வாக்கும் மக்கள் மத்தியில் வேரூன்றி விட்டன. கல்வி பற்றிய உலகளாவி கருத்துக்களின் மாற்றமும் உலகம் கிராமமாகச் சுருங்கிவிட்ட போக்கும் நமது நாட்டுக் கல்வியிலும் கல்வி பற்றிய மக்களின் மனப்பான்மையிலும் பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றன. இந்நிலைமையில் அக்காலத்தில் மாணவர்களின் கற்பித்தலுக்காக ஆசிரியர்கள் கையாண்ட பெரும்பாலான முறைகள் செல்வாக்கிழந்துவிட்டன. ஆசிரியர் - மாணவர் உறவும் முன்பு போன்றில்லை. மாணவரிடம் வகுப்பறைக் கற்பித்தலும் மாணவர் ஒழுங்கும் ஆசிரியரின் எதிர்பார்க்கையும் ஆசிரியரிடம் மாணவர்களின் எதிர்பார்க்கைகளும் மாறிவிட்டன. பழைய தண்டனை முறை இன்று பாரிய விமர்சனத்திறகுள்ளாக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கெல்லாம் பிரதான காரணம் சமூக மாற்றமேயாகும். சமூகத்தின் மையநிலையமாக அமைந்துள்ள பாடசாலையில் சமூக மாற்றத்தின் பிரதிபலிப்புக்கள் இருக்கத்தானே செய்யும்.

இவ்வாறான சூழ்நிலையில், அக்கால ஆசிரியர்கள் எதிர் நோக்காத பாரிய பிரச்சினைகளுக்கு இன்றைய ஆசிரியர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, வகுப்பறையில் மாணவர் ஒழுங்கும் கற்பித்தலும் பின்னிப்பிணைந்து காணப்படுவதினால் மாணவர்களை நெறிப்படுத்துவதில் பெரும்பாலான ஆசிரியர்களின் பலவீனம் காரணமாகக் கற்பித்தலை அவர்களினால் வெற்றிகரமாக நிறைவேற்ற இயலாமல் உள்ளது. இதன் பேறாக, பல ஆசிரியர்கள் தனது பலவீனத்தை உணராது தனது கற்பித்தல் தோல்விக்காக மாணவர்ளின்மீது கோபம் கொண்டு சில வேளைகளில் அளவு கடந்து தண்டித்தல், பழிவாங்கல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். இது துரதிஷ்டவசமானதாகும். அத்துடன் மாணவர்களின் கற்றல் தேல்விகளுக்கெல்லாம் முழுப்பொறுப்பையும் மாணவர் தலையிலும் பெற்றோரின் தலையிலும் கட்டி விடுகின்றனர். இப்போதெல்லாம் அதிகமான பாடசாலைகளில் மாணவர்களுக்கான தவணைப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றோரை அழைத்துக் கொடுக்கும் வழக்கம் காணப் படுகின்றது. அப்போது, மாணவரின் பெறுபேறு குறைவாயின் பெற்றோர்கள் தம்மீது குற்றம் சொல்வார்களோ என ஆசிரியர் கவலைப்படும் நிலை இன்றில்லை. மாறாக, ஆசிரியர்கள் பெற்றோரின் முன்னிலையில் மாணவர்களைக் கடுமையாக விமர்சித்து மாணவர்களின் கற்றல் நிலைமைக்கான முழுக்காரணமும் பெற்றோர் என்றே கூறி பெற்றோரைக் குற்றவாளிகளாக்குகின்றனர்.

வகுப்பறை ஒழுங்கு, கட்டுப்பாடு என்னும்போது யாது கருதப்படுகின்றது? இதைப் பல ஆசிரியர்கள் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளனர். மாணவர்களைக் கொண்ட, தமது கட்டளைகளை ஏற்று நடக்கக் கூடிய அமைப்பொன்றை ஏற்படுத்துதல் என்பது இதன் கருத்தல்ல. மாறாக, மாணவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் தமது கற்றல் குறிக்கோள்களை அடைவதற்குமான ஆற்றலை மேம்படுத்தச்செய்யும் ஒரு முறையையும் சூழலையும் அமைக்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். இதற்காக, ஆசிரியர் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் இன்று எம்முன்னுள்ள கேள்வியாகும். இதற்கான விரிவான விளக்கங்களையும் நுட்பங்களையும் எனது 'வகுப்பறை முகாமைத்துவம்' என்ற நூலில் விரிவாகத் தந்துள்ளேன். இங்கு சில தேர்ந்தெடுத்த நுட்பங்களை மாத்திரம் கலந்துரையாடவுள்ளேன்.

வகுப்பறை ஒழுங்கின் ஒரு முக்கிய அமிசமாக வகுப்பறையில் மாணவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதைக் குறிப்பிடலாம். இதற்காக ஆசிரியர்கள் மாணவர்களின் தேவைகள் என்ன என்ற விரிவான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவைகளையெல்லாம் பட்டியற்படுத்தும்போது பின்வரும் பொதுவான வகைப்படுத்தலுக்குள் உட்படுகின்றனவா எனவும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். மனித தேவைகளை ஆராய்ந்து முதன் முதலில் வகைப்படுத்திக் கூறியவராக W. I. தோமஸ் என்பவர் கருதப்படுகின்றார். அவரின் வகைப்படுத்தல் பின்வருமாறு இருந்தது:

1. காப்பு
2. புது அனுபவம்
3. பொறுப்பு
4. கணிப்பு

பிள்ளை தாம் வாழும் சூழலில் எவ்வித இடையூறும் இன்றி தன் சொந்த வீட்டில் நடந்துகொள்வது போன்ற சுதந்திரமான உணர்வே காப்பு என்பதாகும். அத்துடன் புது அனுபவங்கள் பெற்றுக் கொள்வதில் எல்லா மாணவர்களும் ஆர்வம் உடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்தம் வயதுக்கேற்றவாறு பல்வேறு துணிகரச் செயல்களைச் செய்யவும் புதிய திறமைகள் பெறவும் பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெறவும் விரும்புகின்றனர். எனவே பாடசாலையில் அவர்களில் ஒருவித சுதந்திர உணர்வை ஏற்படுத்தி அதே நேரம் அவர்களின் திறமைகளுக்கேற்ற பணிகளைக் கொடுத்து வெற்றி உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் புது அனுபவத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். இவ்வாறு ஆசிரியர் செய்யாத நிலைமையில் இத் தேவைகளை மாணவர்கள் பிழையான வழிமுறைகளில் நிறைவு செய்ய முயற்சிக்கின்றனர். பரீட்சைகளில் பார்த்தெழுதவும் புது அனுபவங்களுக்குத் தேவையான உபகரணங்களைத் திருடவும் இன்னும் பல்வேறு நெறி பிறழ்ந்த செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தவும் முற்படுவர். அதாவது, சமூகம் அனுமதிக்காத வழிமுறைகளைப் பின்பற்றி தமது புது அனுபவத் தேவையை நிறைவு செய்ய முற்பட்டு நெறிபிறழ்வுக்குள்ளாவர்.

மேலும் மாணவர்கள் பொறுப்புக்களை ஏற்க விரும்புகின்றனர். வகுப்பறையில் மாணவர் தலைவர்களாகச் சிலரை நியமிக்கலாம். வகுப்பறையின் ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொருவரைப் பொறுப்பாக்கலாம். விடுதி வசதிகளையுடைய பாடசாலைகளில் விடுதி நிர்வாகத்தைப் பாராளுமன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தி மாணவர்களிடமே விடலாம். இவ்வாறு பொறுப்புணர்வுடன் கூடிய, பொறுப்புக்களை ஏற்க விரும்புகின்ற மாணவர்களுக்கு பொறுப்புக்கள் போதிய அளவில் அளிக்கப்படாவிட்டால் தாழ்வுணர்ச்சி, தாழ்வுச்சிக்கல் போன்றனவற்றிற்கு அவர்கள் உள்ளாவதுடன் வகுப்பறையில் பிரச்சினைக்குரிய மாணவர்களாகவும் மாறிவிடுவர். இவர்களே வகுப்பறையின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன குறைவதற்குக் காரணமாகவும் அமையலாம்.

பொதுவாக எல்லோருமே தம்மைப் பிறர் புகழவேண்டும், மெச்ச வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான கணிப்பைப் பெற மாணவர்களும் முயல்வது இயற்கையானது. வளர்ந்த மாணவர்கள் தாம் செய்யும் தீரச் செயல்களையோ கெட்டித்தனங்களையோ ஏனையோர் புகழுமாறு வாயாற் கேட்காவிட்டாலும் உள்ளத்தால் பெரிதும் விரும்புகின்றனர். விஷேடமாகப் பெற்றார் மற்றும் ஆசிரியர்களின் கணிப்பை அவர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள். இதையுணர்ந்து புகழுரைகள், பரிசுகள் போன்றனவற்றை அளிப்பதன் மூலம் குறித்த மாணவர்கள் மட்டுமின்றி ஏனைய மாணவர்களும் தம்மிடையே மறைந்துகிடக்கும் கணிப்புத் தேவைகளால் உந்தப்பட்டு கல்வியில் முன்னேற்றம் அடைய முயற்சிப்பர். அத்துடன் நன்னடத்தை பெற்று தம்மைச் சீராக்கிக் கொள்ளவும் முயல்வர். சிறுவர்களாயின் தம்மைப் புகழுமாறு சில நேரங்களில் வாய்விட்டு கேட்பார்கள். இவ்விடயத்தில் பெற்றார், ஆசிரியர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ளல் வேண்டும்.

சில வேளைகளில் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியர்களின் கணிப்பைப் பெற்றுக் கொள்ளாத சில மாணவர்கள் வேறு முறைகள் மூலம் ஆசிரியரினதும் சக மாணவர்களினதும் கணிப்பைப் பெற முயல்வர். உதாரணமாக, தேவையின்றி அளவுக் கதிகமாக ஆசிரியருக்கு உதவ முன்வருதல், கரும்பலகையை அழிக்க எழுந்து ஓடுதல், அடிக்கடி எழுந்து நிற்றல்

இன்னோரன்ன செயற்பாடுகளை அவர்களிடம் காணலாம். இன்னும் சில கணிப்புக் குறைந்த மாணவர்கள் மற்ற மாணவர்களைத் தாக்கி அதன் மூலம் வகுப்பில் குழப்ப நிலைமையை உண்டாக்கி கணிப்பைப் பெற முயல்வர். அது மட்டுமன்றி கணிப்பு இல்லாத காரணத்தால் சில

மாணவர்கள் தாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற விரக்தி நிலைக்கும் மனமுறிவுக்கும் உட்பட்டு அதன்காரணமாக அவர்களிடம் பல பிழையான விரும்பத்தகாத துலங்கல்கள் ஏற்படலாம். இத்தகைய நிலைமைக்கு தனியாள் உளவியலாளர்கள் இன்னுமொரு விதமான விளக்கத்தினை அளிக்கின்றார்கள். பொதுவாக மனிதர்களுக்கு 'உடைமையாயிருத்தல்' என்றதொரு அத்தியாவசிய தேவை இருக்கின்றது. உதாரணமாக தான் சார்ந்திருக்கும் குடும்பம், சமூகம், பாடசாலை, வகுப்பறை போன்றனவற்றின் உடைமையாகத் தான் இருக்க வேண்டும் என இவர்கள் விரும்புகின்றனர். இந்த உடைமை என்ற உணர்வு மற்றவர்களின் கணிப்பையும் கவனத்தையும் பெறும் போதே கிடைப்பதாக இவர்கள் உணர்கின்றனர். இல்லா விட்டால் தான் வேண்டப்படாதவன் என்ற எதிரான உணர்வு இவர்களை வாட்டி வதைக்கின்றது. குடும்பமாக இருந்தால் பெற்றாரினதும் சகோதரர்களினதும் கவனத்தை தம்பக்கம் ஈர்க்க விரும்புகின்றனர். தம்மை விட தமது சகோதரர்கள் மேம்பட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களில் தான் இவ்வுடைமை நிலைமை இழப்பதாக உணர்வடைகின்றனர். இதனால் போட்டி, பொறாமை என்ற நிலைமைகளும் உண்டாகின்றன. வகுப்பறை நிலைமையில் ஆசிரியர்களின் கவன ஈர்ப்பைப் பெற மாணவர்கள் இதனாலேயே பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர்.

ஆம்! எல்லா மாணவர்களும் ஆசிரியரின் கணிப்பு வேண்டி தம்மாலான எல்லாப் பிரயத்தனங்களையும் மேற்கொள்கின்றனர். எனவே ஆசிரியர்கள் பாடத்தில் கெட்டித்தனம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு கணிப்பைக் கொடுக்க முற்படாமல் மாணவர் களிடையே பொதிந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களை இனம் கண்டு எல்லா மாணவர்களும் கணிப்பைப் பெறத்தக்கதாகக் கொடுக்க வேண்டும். நேரம் தவறாமை, தூய்மை, அழகான உறுப்பமைந்த எழுத்து, ஒழுக்கம், கலை இலக்கிய வெளிப்பாடுகள், விளையாட்டுத் திறன், மார்க்க ஈடுபாடு என்றவாறு ஏதோ ஒரு திறன் மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் என்பதை ஆசிரியர் மறக்கலாகாது. மேலும் கெட்டித்தனமான மாணவர்களுக்கு மட்டுமே ஆசிரியர் கணிப்பைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தால் காலக் கிரமத்தில் குறித்த மாணவனும் ஆசிரியரின் கணிப்பை ஒரு பொருட்டாகக் கருதவும் மாட்டான். தோமஸ் தேவைக் கொள்கையை வெளியிட்ட பின்பு W.C. Trow, H.A. Murray, L.J. Croback போன்ற உளவியலாளர்களும் மனிதத் தேவைகளைப் பட்டியற் படுத்தினார்கள். எனினும் தேவைகளை ஆற்றலுக்கேற்ப வகைப்படுத்தி ஏறுவரிசைப்படுத்தியவர் A.H. மாஸ்லோ என்பவராவர். அவரின் வகைப்படுத்தல் பின்வருமாறு:

1. உடலியற் தேவைகள்
2. காப்புத் தேவைகள்
3. அன்புத் தேவைகள்
4. கணிப்புத் தேவைகள்
5. தன்னடைவுத் தேவைகள்

எனவே இதன்படி உடலியற் தேவைகள் உள்ள மனிதனிடம் ஏனைய தேவைகள் எழக்கூடிய சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகும். இதில் சில விதிவிலக்குகளும் இருக்கலாம். வகுப்பறையில் மாணவன் தன் திறமைகளை வெளியிட்டு நிறைவு பெறவும் அதில் மற்றவர்களின் கணிப்பைப் பெறவுமான தேவை மாஸ்லோவின் பட்டியலில் இறுதியானதாகவே இருக்கின்றது. எனவே மாணவனின் உடலியல், காப்பு, அன்பு, கணிப்புத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலைமையில் அவனில் பொதிந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர எடுக்கும் முயற்சிகள் பலனற்றவையாகவே முடிவடையும். அத்துடன் மாணவனும் கலவியில் வெறுப்படைந்து வகுப்பறை வேலைகளை உதாசீனம் செய்யத் தொடங்குவதினால் வகுப்பறை நிர்வாகத்தில் ஒழக்கமும் கட்டுக்கோப்பும் சீர்குலையத் தொடங்குகின்றது. மாணவர் பசி, தாகம், தூக்கத்துடன் இருக்கும் போதும் தமது குடும்பத்தினர், ஆசிரியர்கள், நண்பர்களின் அன்பை இழந்த நிலைமையிலும் வீட்டிலும் பாடசாலையிலும் கணிப்பைப் பெறாத நிலைமையிலும் மாணவன் தனது திறமைகளை வெளியிட்டு நிறைவு கொள்வான் என எதிர்பார்க்க முடியாது.

பாடசாலைச் சட்டதிட்டங்கள் மற்றும் பாடசாலை வேலைகள் காரணமாக மாணவனுக்கு ஏற்படும் களைப்பைச் சமப்படுத்தும் இடமாக வகுப்பறை அமைந்துள்ளது. இந்நிலைமையில் வகுப்பறையில் மாணவரிடையே ஒற்றுமையின்மை காரணமாக எழும் வாதவிவாதங்களும் கோஷ்ட்டிச் சண்டைகளும் வகுப்பறை ஒழுங்கைப் பாதிக்கின்றன. அத்துடன் வகுப்பறையில் நேர அட்டவணையின்படி வேலைகள் நடைபெறாமை, வகுப்பறையில் இருந்து மாணவர் அடிக்கடி வெளியே செல்லுதல், வகுப்பறையில் தனி மாணவன் ஒருவன் ஒன்று அல்லது பல மாணவர்களுக்கு எதிராக வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டல், தேவையற்றபோது கதைத்தல், வகுப்பறை வேலைகளைக் குழப்பும்படியான வேண்டத்தகாத கேளிக்கைகளில் ஈடுபடல், பதட்டம் கவலை போன்றன வற்றால் ஏற்படும் குழப்பமான நடத்தை, சத்தம் போடுதல், சட்டத்தை மீறல், சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு

இசைந்து செல்ல முடியாமை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் காரணமாக வகுப்பறை ஒழுங்கு குறைய ஏதுவாகின்றது.

அதிகமான மாணவர்கள் சட்டவிதிமுறைகள் தொடர்பான தெளிவான விளக்கமின்மை காரணமாகவே சட்ட விதிகளை மீறி நடக்கின்றனர். அதுமட்டுமின்றி அவர்களின் வீட்டில் பெற்றார் விதித்துள்ள விதிமுறைகள் சில வேளைகளில் சில பாடசாலை விதிமுறைகளுக்கு முரணாக இருப்பதினாலும் சில மாணவர்கள் பாடசாலை விதிமுறைகளை மீற வேண்டியேற்படுகின்றது.

மாணவர்களின் நடத்தையைத் தீர்மானிக்கக்கூடிய மற்றுமொரு பிரதான காரணியாக அவர்களின் மனவெழுச்சி அமைகின்றது. அவர்தம் பருவமாறுதல்களுடன் மனவெழுச்சிகளும் மாற்றம் அடைகின்றன. உதாரணமாக ஒரு ஐந்து வயதுப் பிள்ளை கடும் கோபம் காரணமாக மற்றொரு பிள்ளையுடன் கட்டிப்பிடித்துச் சண்டையிட்டு, தள்ளிவிட்டு, விளையாட்டுப் பொருட்களை வீசியெறிந்து உடைத்து அட்டகாசம் செய்யும் அதேவேளை ஒருசில நிமிடங்களில் எதிர்ப்புக்காட்டப்பட்ட பிள்ளையுடன் மகிழ்ச்சியாகக் கதைத்துக்கொண்டு ஒன்றிணைந்து விளையாடும் இயல்பைப் பெற்றிருக்கின்றது. இவ்வியல்பை வளர்ந்தோரில் காணமுடியாது. இதை உணராத சில பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் சண்டையைத் தொடர்ந்து தம்மிடையேயும் சண்டையிட்டுக் கொள்வர். ஆனால், பெற்றோர் தமது வித்தியாசமான மனவெழுச்சிச் சூழல் காரணமாகத் தீராத பகையுடன் விரோதமாகிவிடுவர்.

ஆறு வயதின் பின்பு மேற்கூறிய ஐந்து வயதுப் பிள்ளையின் பண்புகளும் படிப்படியாக மாற்றம் அடையத் தொடங்குகின்றன. ஆறு வயதில் இருந்துதான் மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மைகளும் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்குகின்றன. இவ்வாறாகக் கட்டிளமைப் பருவத்தை அடையும்போது அவர்களின் நடத்தையில் சுய கௌரவம், வரட்டு கௌரவம், வெட்கம், சந்தேகம், எதிர்ப்பாற் கவர்ச்சி போன்றன செல்வாக்குச் செலுத்தத் தொடங்குகின்றன. இவ்வயது மாணவன் தமது சகபாடிகளின் உதவியுடன் தனது தேவைகளை நிறைவு செய்ய முயல்வான். வீரச்செயல், ஆய்வு, விவாதம், கேலிசெய்தல், பொழுதுபோக்கு அமிசங்களில் ஈடுபாடு என்பன இப்பருவத்தில் கூடுதலாக இருக்கும். இவர்களின் சுதந்திரத்தை விரும்பும் போக்கு, பாலியல் கவர்ச்சி இன்னோரன்ன மனஎழுச்சிகள் காரணமாக வகுப்பறை ஒழுங்கு, கட்டுப்பாடு என்பனவற்றில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றனர்.

மனவெழுச்சி நடத்தைகளைத் தீர்மானிப்பதாகக் கூறினாலும் ஒருவன் தனது மனவிருப்பப்படி மனவெழுச்சிகளுக்கு இடம் கொடுக்க இயலாதவனாக இருக்கின்றான். தனது அந்தஸ்த்து, அறிவு, நல்லது கூடாதது என்ற பகுத்தறிவு, மனச்சாட்சி, வளர்ந்தவர்கள் மற்றும் பெரியவர்களின் கருத்துக்கள், சம்பிரதாயங்கள், சட்டதிட்டங்கள், சமயம் போன்றன அவனது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. இக்கட்டுப்பாட்டின் காரணமாக ஏற்படும் பின்வாங்கல் காரணமாக மனமுறிவு, மனமுரண்பாடு என்பன ஏற்பட்டு, இதற்கான சீராக்கலில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் மாணவர்களுக்கு உண்டாகின்றது. இதன் காரணமாக அவர்களது நடத்தைகளில் பல்வேறு விதமான மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இச்சீராக்க நடவடிக்கைகள் சமூகம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பின் நல்ல சீராக்கமாக அமையும். இல்லா விட்டால் பிழையாகச் சீராக்கமுற்று வகுப்பறையில் பிரச்சினைக்குரிய மாணவனாகின்றான். மனமுறிவு காரணமாகச் சில பிள்ளைகள் தளர்ந்து விடுவதினால் தமது முயற்சியில் மீண்டும் ஈடுபட விருப்பமும் சக்தியும் அவர்களுக்கு இருப்பதில்லை. ஆயினும் சில மாணவர்கள் தமது முயற்சியில் தோல்வி ஏற்பட்டாலும் மனமுறிவு அடையாமல் கடுமையாக மேலும் முயற்சிப்பர். கஷ்டப்பட்டு இலக்கொன்றை அடையும்போதுதான் பிறரின் கணிப்பு தனக்குக் கிடைக்கும் என்று மாணவர் எண்ணுவது இதற்கு உந்தலாக அமைகின்றது. எனவே, மனமுறிவுகள் மாணவரின் கௌரவத்தையும் திறமையையும் பேண ஒருவகையில் உதவுகின்றன எனலாம். மாணவர்களின் பணிகளுக்கு ஏற்படும் சிறு தடைகள் பெரியனவாகவும் அடிக்கடி ஏற்படுபனவாகவும் இருத்தல் உகந்ததல்ல.

மனமுறிவு அடைந்த பிள்ளைக்கு அமைதியின்மை, அழுகை, உச்ச உணர்ச்சி நிலையில் தாக்குதலில் ஈடுபடல், சுடு சொற் பிரயோகம், இன்னோரன்ன நடத்தைகள் ஏற்படலாம். பிள்ளைகளுக்கு அங்கவீனம், அழகுக் குறைவு, தாழ்ந்த சாதியில் பிறந்திருத்தல், பஞ்சம், தமது பழக்க வழக்கங்களுக்கு விரோதமான கலாசார பண்பாடுள்ள பாடசாலையில் கற்றல், வீட்டிலும் பாடசாலையிலும் கணிப்பு இல்லாமற் போதல் போன்றன அவர்களுக்கு மனமுறிவை ஏற்படுத்தும் காரணிகளாக அமைகின்றன. இதைத்தவிர மாணவர்களிடம் மன முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. இந்நிலைமையில் போரிடுதல், நியாயம் காணல், ஏற்றிக் காணல், பிரதியீடு செய்தல், நன்னெறிப்படுத்தல், எதிர்த்தாக்கம் உண்டு பண்ணல், ஒன்றித்தல், பிறர்கவனத்தை ஈர்த்தல், கெட்ட நடத்தைகளில் ஈடுபடல், தனிமை விரும்பல், குழந்தை போன்று நடித்தல், பகற்கனவு காணல், தற்கொலைக்கு எத்தனித்தல், உள-உடற் கோளாறுகளுக்கு உட்படல், உளப்பிணியாளராக மாறுதல் போன்ற சீராக்க நுட்பங்களில் ஒன்றோ அல்லது பலவோ மாணவரில் ஏற்படலாம்.

போரிடுதல் என்னும்போது தம்மிலும் வலிமை குறைந்தவருடன் நேரடியாகச் சண்டை பிடிப்பான். வலிமை கூடியோருடன் சண்டை பிடித்தால் தோல்வியடைய நேரிடும் என்பதினால் அவர்களைப் பற்றிப் புறம் பேசல், படுதூறு பேசல், குறை கூறல் போன்ற வழிமுறைகளைக் கையாள்வான் அல்லது ஓரவரில் கொண்டுள்ள கோபத்தை தம்மிலும் குறைந்த ஒருவரிடம் தீர்க்க முயல்வான். நியாயம் காணல் மூலம் தமது தோல்விக்கான சீராக்க முயற்சியின்போது தமது இயலாமையை மறைக்க 'சீச்சி! இந்தப் பழம் புளிக்கும்' என்ற நரியின் கதையில் நரியின் நிலைக்குத் தம்மை ஒப்பாக்கி மன நிம்மதி அடைவான். இம்முறையைப் 'புளித்திராட்சை' முறை என்பர். சில வேளைகளில் தமது இயலாமையில் ஒரு நிறைவைக்கண்டு அதுவே இனிப்பதாக எண்ணி மனத்தைச் சீராக்குவான். இது 'புளிப்பு எலுமிச்சை' முறைச் சீராக்கல் என அழைக்கப்படும். ஏற்றிக்காணல் மூலம் சீராக்கம் அடையும் ஒருவன் தன்னிடம் உள்ள குறைகளை இன்னொருவரிலும் உண்டு எனக் கூறி திருப்திப்படுவான். பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவன் ஒருவன் தன்னைப் போன்றே பல மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டதாக பெற்றோரிடம் கூறும்போது இம்முறையையே கையாளுகின்றான். இவ்வாறாக மாணவர் சீராக்கல் முறைகள் மூலம் தன்னைத் திருப்திப்படுத்த முயலும்போது சில சீராக்க முறைகள் வகுப்பறையின் ஒழுக்கக் குறைவுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. இவ்விடயத்தில் ஆசிரியர் மிகவும் கவனமாகவும் அவதான மாகவும் நடந்து கொள்ளல் மிகவும் முக்கியமானதாகும். பாலுணர்வு உந்தக்கூடிய மாணவர்களை ஓவியம், இலக்கியம் போன்ற துறைகளுக்கு நன்னெறிப்படுத்தி நல்ல சீராக்கத்தை ஆசிரியர் செய்தல் வேண்டும்.

பிற்போக்கான மாணவர்கள் பிறர் கவனத்தை ஈர்ப்பதற்காக வகுப்பில் சடுதியான ஒலிகளை ஏற்படுத்தியும் கொட்டாவி விட்டும் பல்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபடுவர். மாணவர்களின் குறைகளை அறிந்து நிவர்த்திப்பதன் மூலம் இவ்வாறான குழப்ப நிலைகளை நீக்கலாம். தமது தேவைகள் நிறைவேறாத மாணவர்கள் கடைசி ஆசனங்களில் அமர்ந்துகொண்டு தனிமை விரும்பும் சீராக்க முறைகளைக் கையாள்கின்றனர். தமது மன முறிவுகளை எதிர்க்க முடியாது பின்வாங்குகின்றனர். 'தம்மால் முடியாது,' 'தமக்குத் தெரியாது' போன்ற எண்ணங்களுடன் இத்தகையவர்கள் ஒதுங்கி விட முயல்கின்றனர். இன்னும் சில மாணவர்கள் தமது தோல்வியில் பிறர் அனுதாபத்தைப் பெறுவதற்காகக் குழந்தைபோல் நடிக்கின்றனர். அழுதல், பிடிவாதம் பிடித்து எழுத விளையாடத் தெரியாது என்று கூறல், படுக்கையில் சிறுநீர் விடல் போன்ற சில தன்மைகள் இப்பிள்ளைகளிடம் காணப்படும். இன்னும் சில மாணவர்களிடம் பகல் கனவு காணும் பழக்கம் காணப்படும்.

இதன் மூலம் தனது நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றனர். பகல் கனவு அதிக சாதனைகள் புரியும் வகையில் ஒருவனுக்கு உந்துதலாக அமையலாம். மேலும் உள்ளத்து உணர்ச்சி முனைப்புக்களைப் பகற் கனவு குறைப்பதினால் இச்சீராக்கல் முறை ஓரளவு நன்மையே ஆயினும் வகுப்பறையில் மாணவர் பகற்கனவு காண்பதற்கு இடமளிக்காத வகையில் ஆசிரியர் பணிகளை அளித்தல் வேண்டும். பரீட்சையில் தோல்வி, காதல் தோல்வி போன்றனவற்றிற்கான கோழைத்தனமான ஒரு பின்வாங்கல் நுட்ப முறையே தற்கொலையாகும். இவற்றைத் தவிர உள-உடல் பிணிகள்கூட தோல்விகள் காரணமாக மாணவரில் ஏற்படலாம். உடறப்பணி எனனும் போது தலையிடி, வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுப் புண், மயக்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உளப்பிணி மிகக் குறைந்த அளவில் இருந்து மிகக் கூடிய அளவு வரை மாறுபடலாம். சில மாணவர்கள் தெருவிலுள்ள எல்லாக் கதவுகளையும் தொட்டுக் கொண்டு செல்வர். சிலருக்கு எல்லாப் பொருட்களையும் முகர வேண்டும் என்ற உணர்வு இருக்கும். அடிக்கடி கை கழுவுதல் போன்ற நரம்புப் பிணியுடன் தொடர்புடைய சில நடத்தைகளும் எல்லோரிடமும் சந்தேகம், உயரமான இடத்துக்குச் செல்லப் பயம், போன்ற தன்மைகளும் ஏற்படலாம். உளப்பிணியின் உயர்ந்த கட்டமாக பயித்தியம், உணர்ச்சியற்ற நிலை போன்றனவற்றைக் குறிப்பிடலாம். மேலே விளக்கியவற்றில் இருந்து மனவெழுச்சிச் சிக்கலின் செல்வாக்கினால் மாணவன் ஒருத்தன் வகுப்பறையில் பண்பாடற்றவனாக நடந்து கொள்ள முடியும் என்பது விளங்குகின்றது. எனவே மாணவரின் மனமுறிவு மற்றும் முரண்பாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து அதை நீக்க உதவுவதன் மூலம் வகுப்பறையில் மாணவனின் நடத்தையில் நல்ல சீராக்கத்தை ஆசிரியர் ஏற்படுத்தலாம். வகுப்பறைக்கு வெளியில் உள்ள நடத்தைகள் வகுப்பில் செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதினால் வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளப் பழக்கல் வேண்டும். நன்னடத்தை தொடர்பாக வகுப்பறையில் மாணவர் பெறும் பயிற்சியும் வகுப்பறைக்கு வெளியில் செல்வாக்கைச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. வகுப்பறையில் ஒழுங்கை நிலை நாட்டுவதில் தண்டனையின் பங்கு பற்றி பல்வேறு அபிப்பிராய பேதங்கள் நிலவுகின்றன. வேண்டத்தகாத நடத்தையை நிறுத்த மட்டுமே தண்டனையினால் முடியும். ஆனால் நாம் விரும்பும் நடத்தையைத் தண்டனையினால் உருவாக்க முடியாது. அதற்கு வெகுமதிகளையே பயன்படுத்த வேண்டியிருக்கும். பொருத்தமற்ற தண்டனையைக் கட்டுப்

படுத்த தண்டனையைப் பயன்படுத்த முன்பாக பின்வரும் வினாக்களுக்கு முதலில் விடை காணவேண்டும்.

1. இந்த நடத்தையுள்ள மாணவனுக்கும் வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களுக்கும் உள்ள தொடர்பில் தான் எடுக்கும் நடவடிக்கை எவ்வாறு செல்வாக்கு செலுத்தும்?

2. பொதுவான ஆசிரியர்-மாணவர் தொடர்பில் தமது நடவடிக்கை எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும்? இவ்வினாக்களுக்குக் கிடைக்கும் விடைகளின் அடிப்படையிலேயே தமது நடவடிக்கைகளை ஆசிரியர் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால்

அவரின் நடவடிக்கைகள் வகுப்பில் தற்காலிக ஒழுங்கை ஏற்படுத்தினாலும் நிரந்தரமான ஒழுங்கீனத்தையும் ஏற்படுத்திவிடலாம். சகபாடிகள் முன்னிலையில், எதிர்பாலார் முன்னிலையில் வழங்கப்படும் கணிப்பு, தண்டனை இரண்டுமே பெரும் செல்வாக்கை மாணவரில் ஏற்படுத்தும். தண்டனை அவனின் எதிர்கால வாழ்க்கையையே சீரழித்து விடக்கூடும். பிரச்சினைகளைத் தீர்க்கும்போது பின்பற்றப்படும் நேர்மையீனம், கடும் தண்டனை முறைகள் என்பன ஆசிரியர்-மாணவர் இடையேயான நல்லெண்ணத்தைப் பெரிதும் பாதிக்கும். மாணவன் ஒருவனுடன் ஆசிரியர் சர்வாதிகாரியைப் போன்று நடந்துகொள்ளும் போது ஏனைய மாணவர்களும் இந் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை மறக்கக்கூடாது. ஆசிரியரின் நடவடிக்கை திருப்தியீனமாக இருந்தால் குறித்த மாணவன் மட்டுமின்றி வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களும் மேற்படி ஆசிரியர் தொடர்பாக பிழையான அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்வதினால் எதிர்காலத்தில் அவ்வாசிரியரினால் மேற்கொள்ளப்படும் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளும் இதனால் பாதிக்கப்படலாம். சீரற்ற நடத்தைகளுக்கு மனமுறிவு முக்கிய காரணம் என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளளேன். இதில் ஆசிரியர்களுக்குத் தலையிடி கொடுக்கும் கோஷ்டியினர் பின்வாங்கில் இருப்போராவர். இவர்களுக்கு ஆசிரியர்கள் முதலில் வெற்றியுணர்வைக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்களும் வகுப்பில் வெற்றி பெறக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். பரீட்சை வினாக்களில் இலகுவான வினாக்களும் சேர்க்கப்படல் வேண்டும். வகுப்பறை வேலைகளிலும் இத்தகைய மாணவர்களும் இலகுவாக விடையளிக்கக் கூடியதாக வினாக்கள் சேர்க்கப்படல் வேண்டும்.

நிரலித்த கற்றல் (Programme Learning) முறை இத்தகைய மாணவர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும். மனச்சிக்கலுக்குள்ளான மாணவர்களின் உணர்வுகளைக் கவனத்தில் எடுத்து வகுப்பில் அவர்களுக்கு மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்த வேண்டும். பாடம் கவர்ச்சி அற்றதாகக் கண்டால் மீண்டும் மாணவர்களுக்கு பாடத்தின் நோக்கத்தினை நினைவூட்டி கவர்ச்சி ஆக்குதல் வேண்டும். அத்துடன் வகுப்பறையில் மாணவர்கள் தவறு செய்யத் தூண்டும் சூழலைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். சில வேளைகளில் மாணவர் தவறு செய்யும்போது தாம் அதை அவதானிப்பதாக ஆசிரியர் காட்டிக்கொண்டால் மாணவர்கள் அவற்றைத் தொடர்ந்து செய்யாமல் விடச்செய்யலாம். மாணவர் பாடசாலைச் சட்டதிட்டங்கை சரியாக அறியாமையினால் தவறு செய்யலாம் என்பதினால் அவர்களுக்கு இவைபற்றிய போதிய விளக்கம் அளித்தல் வேண்டும். அத்துடன் இச்சட்டங்களின் அவசியத்தையும் மாணவர் உணரச் செய்தல் வேண்டும். மாணவர் தவறு விடும்போது அதன் விளைவுகள் எவ்வாறு அமையும் என்பதை மாணவர்களுக்கு விளக்குதல் வேண்டும். மாணவருக்கு வழங்கும் தண்டனை முறையில் மாணவர் செய்த பிழையைத் திருத்துவதற்காக அவர்களைக் கொண்டு சிலவற்றைச் செய்வித்தல் பயனுள்ள முறை யாகும். இதைத் தண்டனை என்று நாம் அழைப்பதில்லை. மாறாக, வருமுறை விளைவு எனக் கூறலாம். உதாரணமாக, வகுப்பறை வேலைகளை ஒழுங்காகச் செய்யாத மாணவனைக் கொண்டு பாடசாலை நேரத்தின் பின் அவனை நிறுத்தி அவ்வேலைகளைச் செய்வித்தல், அவனால் உடைக்கப்பட்ட பொருட்களுக்கு நஷ்ட ஈடு கட்டச் செய்தல், கூடாத சொற் பிரயோகம் செய்தவனை பலர் மத்தியில் அதனை நல்ல முறையில் திருத்திச் சொல்லச் செய்தல் போன்றன இவ்வாறான சில நுட்பங்களாகும். ஆசிரியர் அறிவில் ஒரு நிபுணர், பிள்ளைகளோடு அன்புடையவர் போன்ற உணர்வுகள் மாணவர்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பின் ஆசிரியரோடு மேலும் நெருங்கி தமது பிரச்சினைகளைத் தீர்க்க மாணவர் முற்படுவர். பாடசாலை நிர்வாகம் மாணவர்களின் நலனுக்கே சட்டதிட்டங்களை வகுத்துள்ளது என்பதை உணரச் செய்தால் தவறிழைக்கும்போது கொடுக்கும் தண்டனையைக் கூட ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை அவர்களுக்கு உண்டாகும். முதலில் தன்னைப்பற்றிய விருப்பபை மாணவரில் ஏற்படுத்திக் கொள்வதுடன் சீரிய கற்பித்தல் முறைகளைக் கையாண்டு தம்மை ஒரு சிறந்த ஆசிரியர் என்பதை மாணவர் இனம் காணச் செய்தால் வகுப்பறையில் ஆசிரியர் இலகுவாக ஒழுங்கை நிலை நாட்டலாம். மேலும், அதிகாரம் என்பது தனது தனியுரிமை எனக் கருதாது எல்லோருக்கும் நியாயமான தீர்வை எடுக்க வேண்டும். குறித்த பிரச்சினை தொடர்பாகத் தீர்வை எடுக்கு முன்பாக இது தொடர்பாகக் குறித்த மாணவன் எவ்வாறு அணுகுகின்றான் என்பதை முதலில் தீர விசாரிக்க வேண்டும். அவசரத் தீர்மானமோ அளவை மீறிய கடும் நடவடிக்கைகளோ எடுத்தல் கூடாது. கடும் தண்டனை வழங்கும் ஓர் ஆசிரியர் மாணவர்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதினால் பல எதிர்ப்புக்களை

எதிர்நோக்க வேண்டியிருப்பார். மாணவர்கள் எத்தகைய ஒழுக்க விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று விளக்கும் ஒரு ஒழுக்கக் கோவையை மணவர்களின் கலந்தாலோசனையுடன் தயாரித்து வகுப்பறையில் தொங்க விடுவதும், இது தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கம் அளித்தலும் கூடிய பயனை அளிக்கும். மாணவர்களின் நடத்தை தொடர்பான ஒழுங்கு விதிகளை ஆக்குவதில் அவர்களே பங்கு கொள்வதினால் அந்நெறிகளை ஏற்று நடக்க அவர்கள் தூண்டப்படுவர்.

இவ்விடயங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் எனது 'வெற்றிகரமான கற்பித்தல் - வகுப்பறை முகாமைத்துவம்' என்ற நூலை வாசிக்கவும். வகுப்பறை நிர்வாகத்தில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்வது மிகவும் அவசியம் என்று ஏற்கனவே இங்கு எடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு ஆசிரியரின் அனுமதியுடன் வகுப்பறை நிருவாகத்தில் பங்கு கொள்ளும் முறைமை சார்ந்த அமைப்பைவிட வகுப்பறை நிருவாகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மேலதிக முறைமைசாரா குழு அமைப்புக்கள் வகுப்பறையில் தோன்றலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வமைப்பு தெளிவாகத் தெரியாது. பொது இலக்குகள், விருப்புக்கள், பிரச்சினைகள் என்பனவற்றின் அடிப்படையில் இவ்வமைப்புக்கள் தோன்றலாம். உறுதியான உளவியற் தேவையின் அடிப்படையில் இணையும் இக்குழுவிற்கு மாணவரில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஆளுமை மிக்க ஒருவர் தலைவராக அங்கீகரிக்கப் பட்டிருப்பார். இக்குழுக்களின் செயற்பாடுகள் எப்படி இருக்கும் என நிச்சயமாகச் சொல்ல இயலாவிட்டாலும் எவ்வாறேனும் வகுப்பறை ஒழுக்கக் கட்டுப்பாட்டில் இக்குழு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறலாம். நெறிபிறழ்வு, கற்றலில் பின்னடைவு இன்னோரன்ன காரணங்களினால் பாதிப்புள்ளான பல மாணவர்கள் இக்குழுக்களில் இணைவர். இந் அமைப்பின் செயறப் பாடடினால் முறைமைசார் அமைப்புக்குப் பல பிரச்சினைகள் ஏற்படலாம். நிருவாகத் திறமை இல்லாத, ஆளுமை அமிசங்கள் குறைந்த மாணவரின் ஆதரவு அற்ற ஆசிரியரினால் நிருவகிக்கப்படும் வகுப்பில் இத்தகைய முறைமைசாரா அமைப்பு மிக இலகுவில் உருவாகும். எனினும் திறமை வாய்ந்த ஆசிரியர் ஒருவரின் வகுப்பிற்கூட இத்தகைய அமைப்பு உருவாகலாம்.

இத்தகைய குழு அமைப்பின் முரட்டுத்தனத்தினால் ஆசிரியரும் சில வேளைகளில் அவமதிப்புக்குள்ளாகக் கூடும். ஆசிரியரின் ஆளுமை குறைவானதாயின் இம்முறை சாரா அமைப்பின் கை ஓங்குவதுடன் முறைமை சார்ந்த மாணவர் தலைமைத்துவ அமைப்பும்கூட இம்முறைமைசாரா குழுக்களுக்கு விளைந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகும். இவைகளைக் கவனத்திற் கொண்டு இத்தகைய முறைமைசாரா குழு அமைப்பு முறை முறைமையான அமைப்பு முறைக்குச் சவாலாக அமையாத படி பார்த்துக்கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும். முறைமைசாரா அமைப்பின் தலைமைத்துவத்தை இனங் கண்டு முறைமை சார்ந்த பொறுப்புக்களை அளிப்பதன் மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். இத்தகைய குழுக்களை உதாசீனம் செய்யும்போதுதான் மாணவர் பிரச்சினை, வகுப்பு பகிஷ்கரிப்பு, சத்தமிடல், சுவரொட்டிகள் ஒட்டுதல், ஒழுங்கு விதிகளை மீறல் இன்னோரன்ன தீய செயல்களில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். மேலும் மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறைகளில் செல்வாக்குச் செலுத்தும் மற்றுமொரு காரணி வகுப்பறைச் சமூகச் சூழலாகும். சர்வாதிகாரத் தலைமைத்துவமுடைய ஆசிரியரின் வகுப்பையும் ஜனநாயகத் தலைமைத்துவம் உடைய ஆசிரியரின் வகுப்பையும் ஒப்பு நோக்கினால் எத்தகைய சூழல் விரும்பத்தக்க மாணவர் நடத்தையை ஒழுங்கமைப்பதற்குப் பொருத்தமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஜனநாயகச் சூழலில் மாணவர் சுதந்திரமாக இயங்குவதினால் அவர்களில் கற்றலின் ஈடுபாடு அதிகரிக்கும். பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படுவதினால் பொறுப்பேற்றுக் கடமையை நிறைவேற்றிப் பழகிக் கொள்கின்றனர். மேலும் சர்வாதிகாரம் என்பது மாணவர்மீது வலிந்து புகுத்தப்படும் ஒன்று ஆகையினால் ஆசிரியர்மீது மாணவர் மதிப்பு, நட்பு, நல்லெண்ணம் என்பனவற்றைக் கொண்டிருக்க நியாயம் இல்லை. இங்கு மாணவர் ஆசிரியர் மீதுள்ள பயத்தின் காரணமாகவே கற்கின்றனர். மேலும் ஜனநாயகச் சூழலில் என்றால் ஆசிரியர் மீதுள்ள விருப்பின் காரணமாக அவர் கற்பிப்பவை மாணவர் மனத்தில் நிலைத்திருக்கும். சர்வாதிகார அமைப்பில் ஆசிரியர் மீதுள்ள பயத்தின் காரணத்தினால் அவர் இருக்கும்போது மட்டுமே வகுப்பறை ஒழுங்கும் கட்டுப்பாடும் காணப்படும். ஆசிரியர் வகுப்பறையை விட்டு நகர்ந்ததும் மாணவர்கள் மீண்டும் ஒழுங்கீனமாக நடக்கத் தொடங்குவர். ஆயினும், ஜனநாயகச் சூழலில் தமது ஒழுக்க நெறியைத் தாமே ஏற்றுக்கொண்டு மாணவர் உணர்ந்து செயற்படு வதினால் ஆசிரியர் வகுப்பறையில் இல்லாதபோதும் அவர் இருக்கும்போது நடந்துகொள்வது போன்றே நடந்துகொள்வர். இவ்வாறாக வகுப்பறை நிருவாகத்தை ஆசிரியர் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி நடத்தும்போது வகுப்பறையில் ஒழுக்கக் குறைவு, கட்டுப்பாடு சீர்குலைவு என்பன ஏற்பட இடமில்லை. வகுப்பறை ஒழுங்கில் இறுதியா ஒன்றைக் கூற வேண்டியுள்ளது. தமது கற்பித்தலைச் செவ்வனே நிகழ்த்தி மாணவர்களின் திருப்தியைப் பெற்றுக் கொள்ளும் அதே வேளையில் தன் நன்நடத்தையிலும் முன் மாதிரி காட்டும் ஆசிரியர் ஒருவருக்கு வகுப்பறை ஒழுங்கை நிலை நாட்டுதல் மிக மிக இலகுவாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் கற்பித்தல் பாங்குகள்

பேராசிரியர் ம. கருணாநிதி



"ஓர் ஆசிரியர் சாத்தியமற்ற பணியிலக்கு ஒன்றிற்காக தன்னை அர்ப்பணிக்க வேண்டியவராகின்றார். மாணவராலும் பெற்றோராலும் சமூகத்தாலும் அரசினாலும் சுமத்தப்பட்டுள்ள சிக்கலான தேவைகளை திருப்திப்படுத்த முற்படுதல் ஆசிரியரின் சிந்தனைக்கும் செயலுக்கும் அப்பாற்படுகிறது. அத்தகைய தேவைகள் தீர்க்கப்படக்கூடியவை அல்லது நெகிழ்ச்சியானவையாக இருந்தாலும் அவற்றை அடைந்து கொள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும். சில தேவைகளை அடைந்து கொள்ள முயற்சிகள் எடுக்கப்படுவதற்கு முன்னரே சமூகமாற்றம் காரணமாக தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதநில ஏற்பட்டுவிடும் இவற்றிக்கு மத்தியிலும் ஆசிரியர் தொழில்வழியே பெற்றுக்கொள்ளும் திருப்தி அளவற்றது. அளவுகடந்த மகிழ்ச்சியை ஏனைய தொழில்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள முடியாது. பிள்ளைகள் புதிய விடயங்களைக் கற்றல், அவர்களுடைய தேவைகளை நிறைவுசெய்தல். பிள்ளைகளின் ஆர்வம் மற்றும் ஈடுபாடு என்பவற்றைப் பார்க்கின்ற பொழுது ஆசிரியர் அடைந்து கொள்கின்ற மகிழ்ச்சியைப் போல ஏனைய தொழில்களில் காணமுடியாது."

- (ஏக்லெஸ்ரன் 1992)

மேற்கூறிய வாசகத்திலிருந்து ஆசிரியர் தொழிலின் இயல்பு சிக்கலானது எனினும் அத்தொழிலில் அர்ப்பணிப்புடன் ஈடுபடும்பொழுது கிடைக்கும் மகிழ்ச்சி எல்லையற்றது என்பது வெளிப்படையானது. பிள்ளைகளின் எதிர்காலக் கல்விசார்ந்த முன்னேற்றங்களுக்கு ஆரம்பக்கல்வி அடித்தளம் என்பதனை நாம் எல்லோரும் அறிந்திருந்தும் அவ்வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடுதல் மதிப்பைக் குறைக்கும் எனப் ஆசிரியர்கள் பலர் கருதுகின்றனர். இந்தக் கருத்துத் தவறானது மட்டுமன்றி ஆசிரியர் தொழிலுக்கே இழுக்கானது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் மாணவரின் பிற்கால வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய பொறுப்பை ஏற்கின்றனர். சமகால ஆரம்ப வகுப்புக் கற்பித்தல் மற்றும் கற்றலில் துரித மாற்றங்கள் இடம்பெறும் பொழுது ஆரம்ப வகுப்பு ஆசிரியர் மத்தியில் பல தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன.

அவர்கள் தமது கற்பித்தலை நிதானமாக முன்னெடுப் பதற்கு கவனத்தில் கொள்ளக்கூடிய சில வழிமுறைகள் அவர்கள் உயர்தொழில்சார் திறன்களைச் சரிவரப்பெற்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும் என்பதற்கான கருத்துகளை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது

ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன்கள் பல உள்ளன.

1. பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் ஆற்றல்களைக் கண்டறிதல்
2. பிள்ளைகளிடத்தில் காணப்படும் எதிர்மறையான எதிர்பார்ப்புகளைத் தவிர்த்தலுடன் முக்கியமாக சமூக பொருளாதார மற்றும் பால்நிலையின் அடிப்படையில் வேறுபாடுகள் காட்டக்கூடாது.
3. பிள்ளைகள் ஏற்கனவே கொண்டிருக்கும் ஆற்றல் களிலிருந்து மேலும் ஆற்றலைக் கட்டியெழுப்புதல். அவர்களிடம் ஏற்கனவேயுள்ள ஆற்றல்கள் எவையும் பயனற்றவையெனக் கருதக்கூடாது.
4. பிள்ளைகள் மத்தியில் வேறுபாடுகளை உருவாக்குதல்.

அவ்வேறுபாடுகளை மேலும் விரிவாக்குதல் பிள்ளைகளின் எதிர்காலத்தினையும் எதிர்காலச் சமூக அமைப்பினையும் தீர்மானித்துவிடுகின்றன என்பதால் அவற்றின்மீது அவதானமாகச் செயற்படுதல்.

**கற்பித்தல் பாங்கு**

ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் பாங்குகள் ஆளுக்காள் வேறுபடுவதை நாம் அவதானிக் கலாம். அவர் கற்பித்தலை ஆரம்பிக்கின்ற பொழுதே தமக்கென ஒரு பாங்கினை உருவாக்க முற்படுகிறார். அப்பாங்கானது அவர் ஏற்கனவே அவதானித்த ஓர் ஆசிரியரின் பாங்காக இருக்கலாம் அல்லது மாணவராக இருந்த காலத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சியின் செல்வாக்காக இருக்கலாம் அல்லது அனுபவ முதிர்ச்சியினால் தாமாகவே மாற்றிக்கொண்ட பாங்காக

இருக்கலாம். எவ்வாறாக இருந்தாலும் ஓர் ஆசிரியர் விருத்திசெய்கின்ற கற்பித்தல் பாங்கானது அவருடைய ஆளுமையின் பகுதியாக மாறிவிடுகின்றது. ஒருவருடைய கற்பித்தல் பாங்கு என்பது ஆளுமை, அனுபவம் கோட்பாடு, பெறுமானங்கள், அவர் பணியில் ஈடுபடும் சூழமைவு முதலிய காரணிகளின் செல்வாக்குக்கு உள்ளாகின்றது.

ஆசிரியர்கள் பலர் ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல் பற்றிய பல்வேறு கருத்துக்களுடன் கூடியவர்களாக இருப்பதால் ஆரம்ப வகுப்புக் கற்பித்தல் முறைகளைப் பின்பற்றும் பொழுது அவர்களுடைய கற்பித்தல் முறைகள் பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்விடயத்தில் அந்த ஆசிரியர் பணியாற்றும் பாடசாலையின் செல்வாக்கும் கவனத்திற்குரியது. பாடசாலை முகாமைத்துவமும் ஏனைய ஆசிரியர்களும் மாணவரும் முறைசார் எதிர்பார்புகளுக்கு அமையப் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கும் பொழுது, அவற்றினின்றும் விலகிச் செயற்பட ஒருவர் விரும்புகின்ற பொழுது பல தடைகள் தோன்றலாம். ஓர் ஆசிரியர் வகுப்பில் எவ்வாறு நேரத்தை முகாமைத்துவம் செய்கின்றார், கற்பித்தலின்போது எத்தகைய பொருட்களை வழங்குகின்றார், பயன்படுத்துகின்றார் மற்றும் மாணவர்மீது கடைப்பிடிக்கும் நெகிழ்ச்சிப்போக்கு, வகுப்பறை வேலைகளை ஒழுங்கமைக்கும்விதம், ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையயிலான ஊடாட்டம், தொடர்பாடல் பிள்ளைகளுக்கு வழங்கும் சுதந்திரம் போன்றவை ஆசிரியரின் பாங்கினை எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய விடயங்களில் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்களாக இருந்தாலும் அரம்ப வகுப்பாசிரியர்கள் ஒவ்வொருவரும் இவ்வாறான விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது.

ஆரப்ப வகுப்புகளில் எவ்வாறு கற்பித்தல் வேண்டும் என்பதுபற்றிய பல ஆராய்ச்சிகள் உள்ளன. வகுப்பறையில் முறைசார் கற்பித்தலில் ஈடுபடும்பொழுது, பெரும்பாலான மாணவர்கள் தாம்செய்ய வேண்டிய விடயங்களில் ஈடுபட்டிருந்த வேளையில் குறைந்த அடைவுகளை வெளிப்படுத்தும் பிள்ளைகள் பெரும்பாலும் முறையில் கற்றலில் அவதானம் செலுத்தினர். இங்கு பிள்ளைகளின் கற்றல் தொடர்பான மூன்று விடயங்கள் அவதானத்துக் குள்ளாயின. ஆசிரியர்கள் சிலர் தனிப்பட்ட கற்றலில் அவதானம் செலுத்தினர். சிலர் குழுச் செயற்பாடுகளில் கவனஞ்செலுத்தினர். சிலர் விசாரணைகளில் ஈடுபட்டனர். ஆசிரியர்கள் சிலர் கலப்பு முறைகளை பின்பற்றி தமது பாங்குகளை மாற்றினர். ஆயினும் முறைசார் கற்பித்தல் பாங்கினைப் பின்பற்றியோருக்கும் முறையில் கற்பித்தல் பாங்கினைப் பின்பற்றியோருக்கும் இடையில் வேறுபாடுகள் நிலவின. முறைசார் பாங்கினைப் பின்பற்றியோரின் விளைவுகள் உயர்வாக இருந்தனவென ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

**ஆரம்ப வகுப்புகளில் கற்றல்**

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்தலில் காட்டும் அக்கறை போலவே அவர்கள் கற்கின்ற முறைகளிலும் அவதானமும் அக்கறையும் செலுத்துதல் முக்கியமானது. ஒரு பிள்ளை கற்கும்பொழுது அப்பிள்ளையின் அணுகு முறைகள் எவ்வாறு அமைகிறது என்பதனை எடுத்துக் காட்டுவது கற்றல்முறை எனப்படுகிறது. பிள்ளையின் அறிகையாற்றல் செயல்முறைகளுக்கும் அளுமைக்கும் ஏற்ற வகையில் கற்றல் முறையில் மாற்றங்கள் உண்டகலாம் ஆரம்ப வகுப்புகளிலே கற்கின்ற மாணவர்களில் 40 சதவீதமானவர்கள் சொல்சார் கற்றலிலும் பார்க்க காட்சிசார் கற்றலிலேயே ஈடுபடுவதாக ஆய்வு குறிப்பிடுகின்றது. ஆரம்வகுப்பு ஆசிரியர் என்றவகையில் மாணவர் ஈடுபாடுகாட்டும் செயற்பாடுகள் எவ்வாறானவை, அச்செயற்பாடுகளின் விளைவுகள் எத்தன்மையினவென அறிந்து கற்றலைக் கையாளவேண்டும்.

பொதுவாக பிள்ளைகள் நான்கு வகையான கற்றல் முறைகளில் ஈடுபடுவதை அவதானிக்கலாம்.

1) பிள்ளைகளில் சிலர் ஆசிரியரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் செயற்படுகின்றனர்.

2) சிலர் எவ்வித இடைத்தாக்கங்களுமின்றிச் செயற்படுவர். இவ்வாறான பிள்ளைகள் சில சமயங்களில் ஆசிரியரின் கவனத்தை திசைதிருப்புபவர்காக இருக்கலாம்

3) பிள்ளைகள் சிலர் ஆசிரியரின் கவனத்தை ஈர்க்காமல் இருக்கலாம். இத்தகையோர் ஏனைய பிள்ளைகளுடன் இடைத்தாக்கமின்றியும் இருப்பார்கள். வகுப்பறையில் இடம்பெறுகின்ற கலந்துரையாடலில் பங்கேற்காமலும் ஒதுங்கியிருப்பர்.

4) அமைதியான முறையில் கற்றல் கற்பித்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் குழுக்களுடனும் இடைத் தாக்கங்களில் ஈடுபடுவர்.

பிள்ளைகள் தொடர்பாக மேலே கூறிய பண்புகளை அறிந்து அவர்களுடைய கற்றலை வசதிப்படுத்துதல் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. பிள்ளைகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் பாங்குகளை இனங்காண்கின்ற வேளையில் ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் தமக்கெனத் தனியான முறைகளை உருவாக்கிக் கொள்ளுதலும் முக்கியமானது. ஒரு சிறப்பான முறையைக் கண்டுபிடித்தல் அவசியமென்பது இங்கு வலியுறுத்தப் படுகிறது. இது ஆசிரியரின் ஆளுமை, அனுபவம் கற்பித்தல் கோட்பாடுகள் பற்றிய தெளிவு, தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் ஆகிய பண்புகளில் தங்கியுள்ளது. பிள்ளைகளுக்கு ஆசிரியரால் வழங்கப்படும் வேவ்வேறு வகைப்பட்ட செயற்பாடுகள், அச்செயற்பாடுகளில் மாணவரின் ஈடுபாடு என்பன ஆசிரியரின் தனித்தன்மையைப் பொறுத்தது.

எமது படசாலைகளைப் பொறுத்த வரையில் கலைத்திட்டத்தைத் திட்மிடுவோர் தாம் திட்டமிட்டவற்றை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளையும் கூறுவதால் அவற்றினின்றும் விலகிச் செல்வதற்கு ஆசிரியர்கள் முற்படுவதில்லை. மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளதை உள்ளவாறே செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதனால் தனித்தன்மையுடன் செயற்படுகின்ற ஆசிரியர்களும் அவற்றை வெளிப்படுத்த விருப்பம் காட்டுவதில்லை. இவை ஆசிரியரின் ஆளுமை ஆற்றல் மற்றும் ஆக்கத்திறன் விருத்திக்குப் பெருந்தடையாக இருக்கின்றன. ஆயினும், பெரும்பாலான ஆசிரியர்கள் கட்டுப்படுத்தப்பட்ட முறையிலேயே செயல்ப்படுகின்றமை பிள்ளைகளின் ஆற்றல் விருத்தியில் வேறுபாடுகளை வெளிக்கொணர இடமளிப்பதில்லை. ஆயினும் ஆசிரியர்கள் தமக்கென்ற தனிப்பாங்கினை உருவாக்குதல் அத்தியாவசியமானது.

பொதுவாக ஓர் ஆசிரியரின் கற்பித்தலின் வெற்றி அவர் கற்பிக்கும் விடயங்களை முன்கூட்டியே திட்மிடுவதில் தங்கியுள்ளது என்பதும் அனைவரும் நன்கு அறிந்த விடயம். வகுப்பறையின் தேவைகளுக்கும் செயற்பாடு களுக்கும் ஏற்ற வகையில் ஏற்கனவே திட்டமிட்டவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய தேவையும் எழலாம். இத்தருணத்தில் ஆசிரியரின் நெகிழ்ச்சிப்போக்கு, பிள்ளைகளின் தேவைகளுக் கேற்ப செயற்பாடுகளை மாற்றுதல் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் செயற்படுதல், அவர்களை மகிழ்வூட்டுதல் ஆச்சரியப்படக்கூடிய வகையில் ஆர்வத்தத்தைத் தூண்டுதல் என்னும் விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் தகவல்களிலும் பார்க்க செயற் பாடுகளுடன் கூடிய கற்றலிலேயே நாட்டமுள்ளவர்கள் என்பதால் கற்றலில் விருப்பமும் ஆர்வமும் இணைக்கப் படுதல் வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளிலே சிறப்பான கற்றலை விருத்திசெய்யும் இன்னொரு வழிமுறையாக போட்டிச் சூழலை உருவாக்குவதும் அச்சூழலில் ஒற்றுமையுடன் செயற்படுமாறு பணித்தலும் அவசியமானது. பிள்ளைகள் இயல்பிலேயே போட்டி மனப்பான்மையுடன் கூடியவர்கள். வகுப்பறையில் போட்டித்தன்மையை உருவாக்கும்போது அதற்கான சூழமைவினையும் கவனத்தில் கொள்ளும்போதே பிள்ளைகள் வளம்பெறமுடியும். வகுப்பறையில் போட்டிச் சூழலை எதிர்கொள்ள முடியாத பிள்ளைகள் உற்சாகம் இழக்கலாம் என்பதால் போட்டிச் சூழலில் சமநிலை பேணுதல் வேண்டும். சில பிள்ளைகளுக்கு முதன்மை கொடுத்தல், சில பிள்ளைகளைத் தவிர்த்தல், வெகுமதி வழங்குவதில் பக்கச் சார்பாக நடந்துகொள்ளுதல் போன்ற நடைமுறைகள் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளில் எதிர்மறையான சிந்தனைகளை ஆழப் பதித்துவிடும் என்பதால் போட்டிச் சூழலை எதிர்கொள்ளக்கூடிய சமநிலையான அணுகுமுறைகளையும் பயிற்சியையும் வழங்குதல் வேண்டும். இவ்விடத்தில் ஆசிரியரின் மனப்பாங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆர்வமுள்ள ஆசிரியர் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு தூண்டுதலளிக்கும் செயற்பாடுகளை வழங்குவார் செயற்பாடுகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தால் பிள்ளைகளும் உற்சாகத்துடன் செயற்பாடுகளில் ஈடுபாடுகாட்டுவர்.

கற்பித்தல் பயனுள்ள வகையில் அமைவதற்கு ஆசிரியரின் அவதானம், திட்டமிடல் கற்கும் சூழலை ஒழுங்குபடுத்துதல், பிள்ளைகளின் வினையாற்றலை கண்காணித்தல் மற்றும் கணிப்பிடுதல் அவை தொடர்பான பதிவுகளை திருப்திகரமான முறையில் மேற்கொள்ளுதல் முதலிய விடயங்களிலும் கவனமெடுத்தல் வேண்டும்.

**ஆரம்ப வகுப்பு ஆசிரியருக்குத் தேவையான அறிவும் திறனும்**

ஆரம்ப வகுப்புகளிலே சிறந்த முறையில் செயற்பட விரும்பும் ஆசிரியர்கள் முதலில் சுய அறிவினை விருத்திசெய்தல் அவசியமானது. ஆசிரியர் தம்மிடம் காணப்படுகின்ற பலம் மற்றும் பலவீனங்களை அறியும் பொழுது சிறந்த முறையில் பணியாற்றமுடியும். தம்மில் காணப்படும் குறைபாடுகளை வெற்றிகொள்வதற்கான வழிமுறைகளைத் தேடியறிதல் வேண்டும். கற்பிக்கின்ற பாடவிடயங்களில் பரந்த, ஆழமான மற்றும் தெளிவான அறிவு இருத்தல் முக்கியமானது. இவ்விடத்தில் எண்ணக்கருக்கள் மற்றும் செயல்முறைகள் மட்டுமன்றி கற்பித்தலியலிலும் அறிவு இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் பிள்ளைகளை நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும். பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றனர், பிள்ளைகளைத் தனியாகவும் கூட்டாகவும் எவ்வாறு ஊக்கவிக்கலாம், சில சமயங்களில் பிள்ளைகளின் குடும்ப மற்றும் சமூக ஹொருளாதாரப் பின்னணி, ஆளுமை மற்றும் கற்றல் பாங்குகளை அறிந்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும். மேலும் பிள்ளைகள் பெற்றுள்ள அனுபவங்களின் இயல்பு, அவர்களுடைய அபிவிருத்தி நிலை, (development stage) விசேட ஆற்றல், ஆகியவற்றை அறிந்திருத்தலும் நன்மை பயக்கும். ஆசிரியர்கள் சிலர் கற்றலின் விளைதிறனுள்ள பகுதிகளுக்கு போதியளவில் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பிள்ளைகள் வெறுமனே அறிவுசார்ந்த விடயங்களைக் கற்கின்றனரே தவிர தூண்டுதலளிக்கும் விடயங்கள், சவாலுக்குரிய விடயங்கள் கற்கும் விடயங்களைப் புலக்காட்சிபெறும் தன்மை, கவனஞ் செலுத்துதல் முதலிய விடயங்களில் அக்கறை காட்டுவதில்லை. ஆசிரியர்கள் மேலே எடுத்துக்காட்டப்படும் விடயங்களில் கவனஞ் செலுத்துபவராக இருந்தால் பிள்ளைகள் கற்றலில் ஆர்வமுள்ளவராகவும் சமநிலை

விருத்திக்கு உட்படுபவர்களாகவும் கற்றலுக்கு ஆயத்தமாகவும் காணப்படுவர். ஆரம்ப வகுப்புகளில் பிள்ளைகளின் இயல்புக்கேற்ப இவை இடம்பெறும் பொழுது இசைவாக்கமுள்ள வளர்ச்சியும் இடம்பெறும்.

இளம்பிள்ளைகளை அளவுக்கு அதிகமாகச் விமர்சித்தல், பிள்ளைகளைக் குறைகூறுதல் மற்றும் பயனற்ற வார்த்தைகளைப் பிரயோகித்தல் வெற்றி தருவதில்லை. மறுபுறத்தில், கட்டாயம் விருத்தி செய்யப்பட வேண்டுமெனக் கருதும் விடயங்களுக்கு உடன்பாடான பின்னூட்டலை பக்கச்சார்பின்றி வழங்கி மாணவர் நடத்தையில் உடன்பாடான மாற்றங்களைக் கொண்டு வரலாம். மேலும் கற்ற விடயங்கள்பற்றி உடனடியாகப் பேசும்பொழுது, பொருத்தமான முறையில் வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்துப் பயன்படுத்தும் பொழுது, கற்றல் மேம்படும். இவ்விடயத்தில் பிள்ளைகள் குழுக்களாகச் செயற்படுவதை அல்லது குழுக்களாகக் கலந்துரையாடுவதை ஊக்கவிக்கலாம். முன்னைய அனுபவங்களையும் இணைத்து விளக்கலாம். பிள்ளைகளுடைய அனுபவங்கள் வளர்ந்தோரது அனுபவங்கள்போல இல்லையென்றாலும் அவர்களுடைய அனுபவங்களிலும் பொருளுண்டு எனக்கருதி அவற்றைக் கற்றல் கற்பித்தலுடன் இணைக்க முற்படுதல் நன்மை தரும்.

வகுப்றையில் கற்கும் சூழல் சிறப்பாக ஒழுங்கு செய்யப்படுதல் முக்கியமாகக் கற்கும் சூழலை உருவாக்குதல் பயன்தரும் ஆரம்பக் கல்விக்கான கலைத்திட்டத்தில் கூறப்பட்டவற்றைக் செய்படுத்த முற்பட்டாலும் பிள்ளைகளின் தேவைகள் விசேட ஆற்றல்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள், உருவாக்கப்ட்ட சூழலை சரிவரப் பயன்டுத்துவதற்குப் பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் மற்றும் கற்றல் கற்பித்தலின்போது பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

கற்றல் என்பது பிள்ளைகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல் எனக்கூறுகையில், பிள்ளைகளின் நடத்தை மாற்றம் பற்றியும் அதிகளவில் கவனம் கொள்ளுதல் அவசியமானது. நோக்கங்களைத் தெளிவாக வரையறை செய்து, அதனடிப்படையில் கற்பித்தல் இடம்பெறுமானால், பிள்ளைகளின் உடன்பாடான நடத்தைகளை வலியுறுத்தும் வகையில் செயற்பாடுகளும் இடம்பெறும். கற்றலுக்கான காலம் நீடிக்கையில் பிள்ளைகளின் ஆர்வமும் மகிழ்ச்சியும் குறைந்து செல்லும். வகுப்பில் குழப்பங்கள் தலையெடுக்கும். ஆசிரியர்கள் பின்ளைகளின் தவறான நடத்தைகளை கண்டுங் காணாமல் விடுவதால் வகுப்பறைச் சூழல் சாதகமற்றதாக மாறலாம். பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மீளவலியுறுத்தலைப் பிரயோகித்து நடத்தைகளைச் சாதகமான முறையில் சீராக்கம் செய்ய வேண்டும்.

ஆரம்பவகுப்புகளில் தொடர்பாடல் திறன்களில் கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியரின் பாட விடயங்களை பயனள்ளமுறையில் எடுத்துக்கூறும் திறன், விளக்கமளிக்கும் திறன், கலந்துரையாடலுக்கு இட்டுச்செல்லும் விதத்தில் வினாக்களைத் தொடுக்கும் திறன், பிள்ளைகள் கூறுபவற்றைச் செவிமடுக்கும் திறன், பிரச்சினைகளை ஆய்ந்தறியுந் திறன் முதலியன கற்பித்தலை மேம்படுத்தும்.

சமகாலப் பாடசாலைச் சூழமைவில் ஆசிரியரும் பிள்ளைகளும் பலவகைப்பட்ட அழுத்தங்களை எதிர் நோக்குகின்றனர்.

1. தமது வேலைகளில் உடன்பாடற்ற மனப்பாங்கும் ஊக்கமும் குறைந்த பிள்ளைகள்
2. கட்டுப்பாடின்றி தம்மையும் மற்றவரையும் தவறாக நடத்தும் பிள்ளைகள்
3. கலைத்திட்டத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களால் உண்டாகும் -விளக்கங் குறைந்த தன்மையும் ஒழுங்கமைப்புத் தேவைகளும் பிரச்சினைகளும்,
4. பொருத்தமற்ற வேலைச்சூழல் வசதிகளும் வளங்களும் போதியளவில் இல்லாமை
5. நேர அழுத்தமும் வேலைச் சுமையும்
6. உடன்பணிபுரிவோருடன் உள்ள முரண்பாடுகள்
7. உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத சமூகம்

விளைதிறனுள்ள கற்றலுக்கு மேலே எடுத்துக்காட்டப் பட்டுள்ள தடைகள் நீக்கப்படுதல் வேண்டும் ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவக்கூடிய விதத்தில் தமது தொழில்சார் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை விருத்திசெய்து அவற்றை நடைமுறையில் பிரயோகித்து வெற்றிகரமான பயனுள்ள ஆசிரியர்களாக மாறுதல் சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குதற்கு உதவும். கற்பித்தலைச் சிறுவயதிலிருந்தே விடயங்களைத் திணிக்கும் செயற்பாடாக இல்லாமல் பிள்ளைகள் சிந்தனை மற்றும் செயல்களைத் தூண்டும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வழிமுறையாக அமையச் செய்வது ஆரம்ப வகுபபு ஆசிரியர்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

# ஆசிரியர், உயர்வதற்கு கற்பித்தலோடு தொடர்ந்து கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும்

கலாநிதி கோணமலை கோணேசப்பிள்ளை



**மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியின் புதிய மாணவர்களை திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் தொடரில் உரையாற்றும்போது கலாநிதி கோணாமலை கோணே பிள்ளை ஆற்றிய உரையில் இருந்து.....**

தற்கால உலகில் புதுப் புது விடயங்கள் தோன்றிக்கொண்டே இருப்பதால் சகலரும் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டிய நிலை உருவாகிஉள்ளது. எல்லோருக்கும் மேலாக ஆசிரியர்கள் உன்னிப்பாகத் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருந்தாலேதான் சிறந்த ஆற்றல் மிக்க அறிவு நிறைந்த மாணவர் சமுதாயம் உருவாகும். தற்கால உலகில் ஆசிரியர்களின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டுள்ளது. மிகத் திறமைமிக்கவர்கள் ஆசிரியர்களாக பணியாற்றுவதிலேதான் ஜப்பான், சிங்கப்பூர், ஜேர்மனியாகிய நாடுகள் பல துறைகளிலும் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. தற்போது சகல நாடுகளும் தரமான ஆசிரியர்களை பணியிற் சேர்ப்பதில் கவனம் செலுத்தி வருகின்றன. நமது நாடும் தரமான ஆசிரியர்களை பணியில் இணைப்பதிலும் அவர்களுக்கு உரிய கற்றல் வாய்ப்புகளை ஏற்படுத்துவதிலும் நல்ல முயற்சி எடுத்து வருகிறது. தேசிய கல்வியியல் கல்லூரிகள் நிறுவப்பட்டமை ஆசிரியர் கல்வியில் ஏற்பட்டுவரும் முன்னேற்றத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இந்த வாய்ப்பை நீங்கள் ஏற்ற முறையில் பயன்படுத்தி உங்கள் முன்னேற்றதுக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் அயராது உழைத்தல் வேண்டும். நாட்டால் நாம் பயன்பெறுவதுபோல் நாடும் நம்மால் பயன்பெறல் வேண்டும்.

நமது நாட்டில் கல்வியைத் தொடர்வதற்கு பல வசதிகளை அரசும் தனியார் நிறுவகங்களும் செய்துள்ளன. செய்து வருகிறன. தொழிலில் இருந்துகொண்டே உயர் பட்டங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு நம் நாட்டில் உண்டு. இந்த வாய்ப்புகளை ஆசிரியர்கள் நன்கு பயன்படுத்தல் வேண்டும். ஆசிரியர்களாக ஆரம்பித்து பல துறைகளில் ஆழ்ந்த அறிவு பெற்று பேரறிஞர்களாக பிரகாசித்த பலர் நமது முன்னோடிகளாக அமைந்துள்ளார்கள். நமது நாட்டவரான பல்துறை அறிஞர் சுவாமி விபுலாநந்தர் நமக்குச் சிறந்த வழிகாட்டியாகும். அவர் தராதரமற்ற ஆசிரியராக ஆரம்பித்து, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக அடியெடுத்து வைத்து, சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், சிங்களம், பாலி, அரபிக் போன்ற மொழிகளையும் தமிழையும் மேலும் கற்று, மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராக பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்தார். கல்வி தொடர் கதையாகத் தொடர்ந்தது. இரசாயனவியல் கற்று அதில் டிப்புளோமா பட்டம் பெற்று தான் கற்ற தொழில்நுட்பக் கல்லூரியிலேயே பணியாற்றினார். அழைப்பின் நிமித்தம் அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஆங்கிலத்தில் விஞ்ஞானம் கற்பித்தார். தானாகவே தொடர்ந்து கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றைக் கற்று, லண்டன் பல்கலைகக் கழகம் நடத்திய விஞ்ஞான மாணிப் பரீட்டையில் சித்திடைந்து தமிழ்ப் பண்டிதர், ஆங்கில மொழியில் பரீட்சைக்குத் தோற்றி விஞ்ஞானப் பட்டதாரியாகக் கூடிய சாத்தியமும் உண்டு என்பதை நிருபித்தார். ஈற்றில் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் முதற் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்றுச் சாதனை மேல் சாதனை படைத்தார். இவரது பல்மொழி அறிவு மதங்கசூழாமணி என்னும் நாடகத் தமிழ் நூலாகவும் பல்மொழியறிவோடு கணிதம், விஞ்ஞானம், இசை இணைந்த அறிவு யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் ஆய்வு நூலாகவும் மலர்ந்தன.

இவருடைய முயற்சியை முன்மாதிரியாகக் கொண்டு சாதனை படைத்த இவரது மாணவர்களும் மற்றையவர்களும் பலர் உண்டு. மண்டூரில் ஆங்கில உதவி ஆசிரியராக ஆரம்பித்த திரு.வி. சதாசிவம், பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகி, புலமைப் பரிசில் பெற்று மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்று இலக்கிய முதுமாணிப் பட்டம் பெற்றார். பின்னர் பரீட்சைத் திணைக்களத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றார். பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் சிவாநந்த வித்தியாலயத்திலும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் சுவாமியிடம் படித்தவர். பல்கலைக்கழகப் பட்டம்பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்பின் கல்வி டிப்புளோமா பட்டம் பெற்று மீண்டும்



சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகி புலமைப் பரிசில் பெற்று மேற் படிப்புக்கு இந்தியா சென்றார். பின் யாழ்ப்பணத்தில் கந்தரோடையில் உள்ள ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி அங்கிருந்து லண்டன் சென்று லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப்பட்டம் பெற்றார். மீண்டு வந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் போது போராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்விப் பீடத்தில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அங்கிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்தில் சிரேஷட விரிவுரையாகப் பணியாற்றினார். அங்கிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு மாற்றப்பட்டு அங்கு முதலாவது கல்வி பேராசிரியராக பணியாற்றினார்.

சுவாமி விபுலாநந்தரின் ஆரம்ப ஆசிரியர் திரு.கே.எஸ். குஞ்சித்தம்பி. அவரது மகன் திரு. தருமரெத்தினம். திரு. தருமரெத்தினம் சுவாமியிடம் சிவாநந்த வித்தியாலயத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் படித்தவர். இவர் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்கு தமிழ், பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் தோற்றி சித்தியடைந்தவர். பல்கலைக் கழகத்தில் முதலாம் ஆண்டில் தமிழ், கணிதம், பொருளியல் ஆகிய பாடங்களைப் படித்து பின் பொருளியலில் சிறப்புப் பட்டம் பெற்றார். பட்டம் பெற்றபின் அரசாங்க சேவையில் புள்ளியியல் அதிகாரியாக பணியாற்றி, புலமைப் பரிசு பெற்று இங்கிலாந்துக்குச் சென்று அங்கு லீட்ஸ் பல்கலைக்கழத்தில் கணிதப்பொருளியலில் முதுமாணிப் பட்டம் பெற்று இலங்கைக்கு மீண்டார். இங்கு அரச பணியில் ஈடுபட்டு பின் ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகர்களில் ஒருவராக நியமனம் பெற்று, போட்சுவாணா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் புளிளியியல் ஆலோசகராக பணியாற்றினார்.

இவர்களைப்போல நீங்களும் கல்வியைத் தொடர் கதையாக ஆக்க வேண்டும். பல மொழிகளைக் கற்க வேணடும். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற வேண்டும். தற்கால உலகத்தில் ஆங்கிலம் மிக முக்கியமான மொழியாகும். தற்போது தரமான ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்திலேதான் வெளிவருகின்றன. இந்த மொழிகளோடு சமஸ்கிருத, ஹிந்தி, பிரஞ்சு, ஜேமன், அராபிய, சீன, ஜபபானிய, ரஷ்ய, கொறிய மொழி போன்றவற்றில் சில வற்றை சிறிதளவாவது தெரிந்திருப்பது நமது மனப்பான்மையை விரிவாக்கும். அண்மையில் செய்யப்பட்ட ஆய்வின்படி ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் அறிவு பெற்றவரின் மூளை களைப்பின்றி துல்லியமாக இயங்குகிறது என்று அறியக்கிடக்கின்றது.

மொழிகளோடு கணிதம், விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் ஆகியவற்றிலும் ஆசிரியர் தேர்ச்சி அடைதல் வேண்டும். இவற்றின் அறிவு தர்க்க ரீதியான சிந்தனை, திறனாய்வுத் திறன், விளக்கமான மொழி வெளிப்பாடு, சரியான செய்திகளை இனங்கண்டு அறிதல் ஆகிய வற்றுக்கு உறுதுணையாக அமைகின்றது. ஆசிரியர்கள்,

தாம் கையாளும் கைந்நூல்களும் பாடநூல்களும் உண்மையான செய்திகளை முன்வைக்கின்றனவா என்பதை பகுப்பாய்வு செய்யக்கூடிய திறனைப் பெற முயல வேண்டும். ஆசிரியர் கைந்நூல்களிலும் பாட நூல்களிலும் உள்ள பிழைகளை நானே சுட்டிக் காட்டியுள்ளேன்.

ஆசிரியர்கள் மாணவர்களை மாத்திரமல்ல மற்றை யோரையும் மதிப்பீடுசெய்வதில் மிகவும் கவனமாக செயற் படவேண்டும். பிழையான மதிப்பீட்டினால் சிலரது முன்னேற்றம் தடைப்படலாம். எனது அனுபவத்தில் பல்கலைக்கழகத்தால் அனுமதி மறுக்கப்பட்ட ஒருவர், மேல் முறையீடு செய்து பல்கலைக்கழக கற்கையில் சேர்ந்து முதலாம் வகுப்பில் சித்தியடைந்து மேலும் கல்வியைத் தொடர்ந்து உலகப் பிரசித்திபெற்ற தாபன மொன்றில் உயர்நிலையில் பணியாற்றுகிறார்.

பல சந்தர்ப்பங்களில் சிந்தனை, நிபந்தனைப்படுத்தலால் விரிவடையாது குறுகி விடுகிறது. உங்களை ஒரு கோடு வரையும்படி கேட்டபோது எல்லோரும் ஒரு நேர் கோட்டை அதுவும் கிடையான கோட்டை வரைந்துள்ளீர்கள். கோடு நேராக இருக்க வேண்டியதில்லை. கிடையாக இருக்க வேண்டியதும் இல்லை. ஒரு செவ்வகம் வரையும்படி கேட்டபோது எல்லோரும் கிடையான செவ்வகத்தை வரைந்தீர்கள். ஆனால் நமது அன்றாட வாழ்க்கையில் செங்குத்தாக அமைந்துள்ள செவ்வகங்களே அதிகம். நாம் உள்ளும் புறமுமாகச் செல்லும் கதவுகளைப் பாருங்கள். எனவே எந்த விடயத்தையும் பல கோணங்களில் இருந்து சிந்திக்கும் திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

என்னைப்பற்றி கூறும்படி கேட்டீர்கள். மூன்றாம் வகுப்பில் படிக்கும்போது சுவாமி விபுலாநந்தரின் ஆசீர்வாதம் கிடைத்தது. கிழக்குமாகாண புலமைப் பரிசு பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆங்கிலம், தமிழ், உயர்கணிதம், பௌதிகவியல், ரசாயனவியல் ஆகிய பாடங்கள் கற்க வாய்ப்புக்கிடைத்தது. தராதரமற்ற விஞ்ஞான ஆசிரியராக ஆரமபித்தேன். ஆங்கில மொழியில் கணித ஆசிரியராக பயிற்சி பெற்று திருகோணமலை இந்துக்கல்லூரியில் எனது குருவான அதிபர் திரு ச. அம்பலவாணரின் வழிகாட்டலில் கணிதம், விஞ்ஞானம, ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். பின் கண்டியில் அமைந்திருந்த முஸ்லிம் ஆசிரியர் கல்லூரியில் கணிதம் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரியிலும் மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியிலும் பணியாற்றினேன். கொழும்புத் திட்டத்தின் புலமைப் பரிசு பெற்று அவுஸ்திரேலி யாவில் உள்ள மக்குவாறி பல்கலைக்கழகத்தில் தற்காலச் சர்வதேச கணித கற்கை நெறியில் பங்கு பற்றினேன். இதைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரி பணிகளோடு கொழும்பு பாடவிதான அபிவிருத்தி நிலையப் பணிகளிலும் ஈடுபட்டேன். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விமாணி பட்டப்படிப்புக்கு வாய்ப்புக்கிடைத்தது. கல்விமாணி கறகை நெறியில் கணிதத்தை விசேட பாடமாகப் படித்து முதலாம் வகுப்பில் சித்தியடைந்தேன். சிறிதுகாலம் மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியில் அதிபராக பணியாற்றி பின் கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் விரிவுரையாளராகினேன். அங்கு தத்துவ முதுமாணிப் படிப்டை முடித்தேன் ஆனால் ஆராய்ச்சி கட்டுரை சமர்க்க முடியவில்லை. நாட்டின் நிலை வெளியில் சென்று ஆய்வுசெய்ய இடமளிக்கவில்லை. இந்தவேளையில் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஸிசின்னர், புளும் ஆகியோருடன் தொடர்பு கொண்டேன். அவர்களின் சிபார்சில் சில பல்கலைக்கழகங்கள் பட்டமேற்ப்படிப்புக்கு அனுமதி அளித்தன. ஆனால் கல்வியியல் கற்கைக்கு உலகப் பிரசித்தி பெற்ற கொலம்பியா பல்கலைக்கழகம் அனுமதியோடு புலமைப் பரிசும் தர முன்வந்தது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அங்கு சென்று கல்வியைத் தொடர்ந்து கலை முதுமாணி, விஞ்ஞான முதுமாணி, கல்வி கலாநிதி, தத்துவ கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றேன். சர்வதேச கணிதக் கல்வி மாநாடு, சர்வதேச ஆசிரியர் கல்வி மாநாடு, கணினிக் கல்வி மாநாடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆகியவற்றில் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகள் படிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. ஐக்கிய நாடுகள் சபை கொலம்பியா பல்கலைக்கழகத்தோடு இணைந்து நடத்தும் 'ஐக்கி நாடுகள் சபையும் சர்வதேசக் கல்வியும் என்னும் கற்கைநெறியிற் பங்கு பற்றி உச்ச மதிப்பீடு பெற்றமையும், அமெரிக்க பல்கலைக்கழகங்களின் சிறந்த மாணவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டமையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மில்வங் நூலகத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினராகப் பணியாற்றியமையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மூதவை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமையும், பட்டமேற்படிப்புக்கான களப்பணிக்காக ஆபிரிக்காவில் உள்ள பொட்ஸ்வாணா பல்கலைக்கழகத்தில் பணியாற்றியமையும் அங்குள்ள 'ஐடியெம்' என்னும் நிறுவகத்தின் ஆலோசகராக புள்ளியியல், ஆராய்ச்சி முறையியல், மதிப்பீடு, அளவீடு ஆகிய துறைகளில் விரிவுரையாற்றியதையும் குறிப்பிடலாம். இந்தக் குறிப்பு தங்களுக்கு ஊக்கமளிக்க உதவும் என நம்புகிறேன்.

*வெள்ளத் தனயதுமலர் நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனயது உயர்வு*

என்று கூறுகிறது திருக்குறள். திடமான நம்பிக்கையுடன் தூய உள்ளத்துடனும் ஆசிரியப் பணியில் அடி எடுத்து வையுங்கள். வெற்றிமேல் வெற்றி பெறுவீர்கள்.

# சமூகத்தின் கொண்டாட்ட தினம்

எ.வி. வேணுகோபாலன்

**லட்சியத் தேடலை விதைக்கும் பேராற்றல் ஆசிரியர்களிடம் மட்டுமே இருக்கிறது**



மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி வாசலில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றினார் என்னும் பெருமை உடைத்து' என்பதாக ஒரு வாசகம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. வரலாற்றில் பல உயர்ந்த மனிதர்கள் ஆசிரியராகப் பணியாற்றியவர்கள். மிகச் சிறந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள் பலர் ஆசிரியப் பணியில் இருந்தவர்கள். ஆசிரியராக வருவதற்கே நல்ல அருந்தவம் செய்திட வேண்டும் என்று சொல்லலாம். ஏனெனில், வாழ்வின் உன்னத நிலையை எட்டுகிற யாரும் தங்கள் ஆசிரியர்களை நினைவுகூராமல் இருப்பதில்லை.

அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் கற்பிக்கும் வாய்ப்பு பெற்றிருக்கும் ஆசிரியர்கள் பல நூறு இளம் உள்ளங்களோடு ஒரே நேரத்தில் ஊடாடும் மிகச் சிறந்த வரத்தைப் பெற்றிருப்பவர்கள். மாணவர்களுடைய கனவுகளை வருடிக் கொடுக்கும் கைகள் அவர்களுக்கு மட்டுமே வாய்த்திருக்கின்றன. குழந்தைகளின் இளம் நெஞ்சில் நீங்கா இடம் பிடிக்கும் தகுதி அவர்களுக்கே கிடைக்கிறது. லட்சியத் தேடலை விதைக்கும் பேராற்றல் ஆசிரியர்களிடம் மட்டுமே பொருந்தியிருக்கிறது.

**முதல் திறப்பு**

வகுப்பறை என்பது நீளமும் அகலமும் நிறைந்த பெரிய பொதுவெளி. வகுப்பறைக்குள் நுழையும்போது ஆசிரியர், மாணவர்களுடைய உள்ளங்களின் கதவைத் திறந்து கொண்டுதான் உள்ளே வருகிறார். முதல் திறப்பு அச்சத்தோடும், எதிர்பார்ப்போடும் அல்லது சுவாரசியமற்றும் நிகழ்ந்தாலும் ஆசிரியர் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் விதத்தில், பிறகு எப்போதும் விரும்பப்படும் மனிதராக அவரை அந்த வகுப்பறை உள்வாங்கிக்கொள்ளும் சாத்தியங்கள் உண்டு. பின் ஒருபோதும் அவரை இழப்பதற்கு அந்த வகுப்பு சம்மதிப்பதில்லை.

பேராசிரியர் ச. மாடசாமி, தன்னுடைய முதல் வகுப்பறை நுழைவு பற்றிச் சொல்வதுண்டு. கல்லூரியில் தமது முதல் வகுப்பில், ஒரு மக்குக்கு இன்று மகுடம் சூட்டப்பட்டு விட்டது என்று சொல்லி அவர் தொடங்கியிருக்கிறார். ஒரு மணி நேரத்துக்குப் பின் மாணவர்களின் உள்ளத்தை ஈர்த்தவராக வெளியே வந்தவரை, கல்லூரி முதல்வர் அழைத்திருக்கிறார். இவரும் முதல் வரைக் காணச் சென்றிருக்கிறார். உன் வகுப்பில்தான் கைத்தட்டல், சிரிப்பொலி எல்லாம் கேட்டதா? என்று கேட்டிருக்கிறார் முதல்வர். ஆமாம் என்றதும், போச்சு, எல்லாம் போச்சு. இந்தக் கல்லூரியின் பெருமையெல்லாம் ஒழிஞ்சது என்று பதறினாராம் அவர். ஒழுக்கம், கட்டுப்பாடு என்ற பெயரில் வகுப்பறையின் அதிகாரத்தை நிலைநாட்டாமல் மாணவரோடு எப்படித் தோழமையாக நெருங்கிப் பழகலாம்? என்பதுதான் அந்த முதல்வரின் கேள்வி.

**இரண்டு திசைகள்**

என்முன் இரண்டு திசைகள் இருந்தன. அடக்கி ஒடுக்கும் அதி காரத்தைக் கையில் எடுக்கக் கூடாதென நான் உறுதியாக இருந்தேன் என்பார் பேராசிரியர் ச. மாடசாமி. அதனால் தான் சந்தித்த பிரச்சினைகளையும் அவர் சொல்வதுண்டு. இந்தப் பின்புலத்தில் அவரது பணி தொடங்கியிருந்தாலும், மாணவர்களைப் பேச வைத்துக் கேட்க எனக்குச் சில ஆண்டுகள் ஆனது. என் குரல் ஒலிப்பதன் பெருமையிலேயே சில ஆண்டுகள் கடந்து போனது என்றும் அவர் குறிப்பிடுவார்.

வகுப்பறை என்பது 40 மாணவ ஆசிரியர்களையும், ஓர் ஆசிரிய மாணவரையும் கொண்டது என்பார் புதுவை

கல்வியாளர் ஜே. கிருஷ்ணமூர்த்தி. அமைதியான வகுப்பறை என்பது செயல்பாடற்ற ஓர் இருண்ட பகுதி என்பதை நமது ஒழுக்க விதிமுறை மேதாவிகள் அறிவதில்லை. சைலன்ஸ்' என்று குழந்தைகள் எதிரில் கையைக் காட்டி மிரட்டுவதை விஞ்சிய வன்முறை ஆயுதம் வேறொன்றில்லை.

**ஆசிரியர்களும் நானும்**

ஆசிரியர்கள் வசிக்கும் பகுதிக்குச் செல்ல நேரும் ஒவ்வொரு முறையும் சிலீர் என்ற ஓர் இன்ப அதிர்ச்சியை நான் உணர்ந்ததுண்டு. பெற்றோர் கையைப் பிடித்துக் கொண்டு நடந்த காலத்தில் எந்தக் கூச்சமுமின்றி அவர்களிடம் எனது ஆசிரியரை பரஸ்பரம் அறிமுகம் செய்விக்க முடிந்தது இயற்கையின் அருளன்றி வேறென்ன!

ஐந்தாம் வகுப்பு மனோ டீச்சரை எனது வீட்டில் எல்லோருக்கும் தெரியும். என் அப்பா டீச்சர் டீச்சர் மனோ டீச்சர் குண்டு டீச்சர்' என்று ராகம் போட்டுப் பாடினால், நான் கோபித்துக்கொண்டு சாப்பிட மாட்டேன் என்று ரகளைசெய்ததாகக் கூட நினைவில் இருக்கிறது. ஆறாம் வகுப்பு ஆங்கில ஆசிரியர் சீனிவாசன் என் வாழ்வுப் பாதையில் தடம் அமைத்துக்கொடுத்த அற்புத மனிதர். நான் எந்தெந்த ஊருக்கு மாற்றலில் செல்ல நேர்ந்தபோதும் அஞ்சல் அட்டையில் எனக்குக் கடிதம் எழுதுவார். அவருக்கு என்னை ஆங்கிலத்தில் பதில் போடச் சொல்வார். ஒரு பண்பாட்டு நடவடிக்கையை எனக்குள் தொடக்கி வைத்தவர் அவர்.

எனக்குப் பல ஆசிரியர்களோடு பிணக்கு இருந்தது. அவை நெருக்கத்தின் காரணமாக அவ்வப்போது பேசித் தீர்க்கப்பட்டவை. இது கல்லூரி நாட்களில் தமிழ் ஆசிரியர்களோடு தீவிர விவாதங்கள், சண்டைகள் போடுவது வரை தொடர்ந்தது. இப்போதும் ஆசிரியர் என்று யார் சொல்லிக்கொண்டாலும் அவர்களை உற்சாகத்தோடு பார்த்து நட்புறவுகொள்ள ஏங்கும் உள்ளம் அமைந்ததற்கு நான் கடந்து வந்த என் அருமையான ஆசிரியர்களே காரணம்.

**சமூகத்தின் கொடை**

மூன்று மாதங்கள் ஒரு பள்ளியில் தற்காலிகப் பணிக்குப் போன எனது தங்கை, அந்தப் பணி முற்றுப்பெற்ற நாளில் தாங்க மாட்டாத பரிசுப் பொருட்களால் சூழப்பட்டதற்கு முக்கியக் காரணம், பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டு வராத ஒருவராக அவர் அடையாளம் காணப்பட்டதுதான். அன்பின் அருளாசியை அள்ளி அள்ளி வழங்கும் ஆசிரியர்கள் எந்தக் காலத்திலும் கொண்டாடப்படுகின்றனர். தங்கள் சொந்த வலி, வேதனை, துயரங்களை மீறியும் இன்முகத்தோடு பள்ளிக்குள் நுழையும் ஆசிரியர்கள் எல்லாக் காலத்திலும் இருக்கின்றனர். அவர்கள் பேசப்பட வேண்டும். 80 வயதைக் கடந்த நிலையிலும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரான கல்வியாளர் ச.சீ. ராஜகோபாலன் வற்றாத நேயத்தோடு கல்விகுறித்து எழுதியும், பேசியும் வருவது சமூகத்தின் கொடை.

சென்னைக்கு அருகே உள்ள பள்ளி மாணவர் ஒருவரது கவிதையை நாளிதழ் ஒன்றின் மாணவர் பக்கத்தில் பார்த்துப் பாராட்டிக் கடிதம் எழுதியிருந்தேன். அந்த மாணவரின் பெயர் பாலாஜி. அவருடைய ஆசிரியை என்னை அழைத்து, அந்தச் சிறுவனை ஊக்குவித்ததற்காகத் தனது நன்றியை என்னிடம் தெரிவித்தபோது, மிகவும் சிலிர்ப்பாக இருந்தது. வளமான எதிர்காலத்தை இப்படியான ஆசிரியப் பெருமக்கள் தன்னியல்பாக உருவாக்கிக் கொடுக்கத்தான் செய்கின்றனர்.

சாதி, இனம், மதம்,மொழி... இன்ன பிற வேற்றுமைகளின் மடியில் ஒரே பள்ளியில் வந்து குழுமும் மாணவர்களைப் பேதமின்றிப் பார்க்கும் பொதுத் தன்மையும், அவர்களின் ஆற்றலைத் தனது அன்பின் அளவுகோல் கொண்டு மட்டுமே அளக்கத் தக்க பக்குவமும், எல்லோரையும் ஏற்றுப் பழகும் உளப்பாங்கும் ஆசிரியர் உலகின் அடிப்படை அம்சங்களாகத் திகழ்ந்தால், கொண்டாட்டமான கல்வி அரங்கேறுவதற்கு ஒரு தடையும் அங்கே இருப்ப தில்லை. சோர்வாக உள்ளே நுழையும் குழந்தைகூடப் புன்னகையோடு வீடு திரும்ப முடிகிறது.

செப்டம்பர்5: ஆசிரியர் தினம் என்பது உள்ளபடியே குழந்தைகளையும் பெற்றோரையும் சமூகத்தையும் சேர்த்துக் கொண்டாடும் தினம்தான். ஆசிரியர்களைக் கொண்டாடும் எந்தச் சமூகமும் தன்னைச் சிறப்பித்துக்கொண்டதாகிறது. அதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந்த தினத்துக்காகக் காத்திருக்கக்கூட வேண்டியதில்லை. அதேபோல், பள்ளி, கல்லூரி ஆசிரியர்களை மட்டுமல்ல, அடுத்தவருக்குக் கற்பிக்கும் ஆர்வமும், எப்போதும் கற்கத் துடிக்கும் பேரார்வமும் கொண்டிருக்கும் யாரையும் ஆசிரியர் என்று கொண்டாட முடியும்.

# மேலதிக மொழிகளைக் கற்பித்தல்

எலியட் எல். ஜீட் லிஹீவாடான்
ஹேர்பேர்ட் ஜே. வோல்பேர்க்
தமிழாக்கம்: புஸ்பா சிவகுமாரன்

**மொழிப்பயிற்சி**

உண்மையான தொடர்பாடல்களுக்கு மேலதிக மொழியைப் பயன்படுத்தும் வீதத்தில், வகுப்பறைச் செயற்பாடுகள் மாணாக்கர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்**

இயல்பான விதத்திலும் பொருத்தமான விதத்திலும் மேலதிக மொழியை வகுப்பறைக்கு வெளியில் மாணக்கர்கள் பயன்படுத்துவதற்கு, அவர்களை ஆயத்தப்படுத்தும் விதத்தில் அமையும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகத் தொடர்பாடல்சார்ந்த மொழி கற்பித்தல் அமைய வேண்டும். பயிற்சி மூலம் மனத்தில் பதிய வைக்கும் இலக்கணப் பயிற்சிகள், சொற்களை மனனஞ் செய்தல் என்பனவற்றிக்கும் அப்பாற்பட்டதாக மொழி நோக்கப்படுகின்றது. அவர்களுடைய ஆசிரியர்கள் இன்றி, தாமாகவே சுலபமாகச் செயற்படக்கூடிய மொழித் திறமைகளில் மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இலக்காகும். இயல்பான உரையாடலில் எத்தகைய மொழிப்பாங்கு பயனுறுதிவாய்ந்ததாகவும் பண்பாட்டு ரீதியாகப் பொருத்தமானதாகவும் இருக்கின்றதென்பதை மாணாக்கர்கள் கற்க வேண்டும். மேலதிக மொழி கற்றலின் போது பிழை விடுதல், கற்றலில் இயற்கையான ஒரு பகுதியாகும். ஆனால், இப்பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டு நேரகாலத்துடன் திருத்தப்படவேண்டும். தமது ஆசிரியர் களின் மேற்பார்வையின் கீழ், மாணாக்கர்கள் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து மொழியைப் பேசி, பயிற்சி செய்து, ஒருவர் மற்றவரது பிழைகளைக் கண்டறிந்து அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

வகுப்பைக் கட்டுப்படுத்துவதும் ஆதிக்கம் செலுத்து வதும் ஓர் ஆசிரியரின் வகிபங்கல்ல. அதற்குப் பதிலாக ஆசிரியர் யதார்த்த மொழி மாதிரிகளை விளங்கிக் கொள்ளக் கூடிய உள்ளீடுகளை மாணாக்கர்களுக்குச் சமர்ப்பிக்கலாம். தகவல்களை வழங்கி, கற்கப்படும் மொழி வடிவங்களின் மீது கவனஞ் செலுத்த வேண்டும் மாணாக்கர்கள் தன்னம்பிக்கையைப் பெறும் விதத்தில் வரையறைக்குட்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட பயிற்சிகளைப் பயன்படுத்த வேண்டும்; அதன் பின்னர் இயல்பான தொடர்பாடற் செயல்களுக்காக மொழியைப் பயன் படுத்துவதன் மூலம், மாணாக்கர்கள் ஒருவருடன் ஒருவர் இடைத்தாக்கம் புரிவதற்கு அனுமதிக்க வேண்டும். எனவே, வகுப்பறை முழுக்க முழுக்கக் கற்போர் மையப் படுத்தப பட்டதாகவோ, முழுக்க முழுக்க ஆசிரியரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகவோ இருத்தலாகாது; உண்மையில் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் என்ற இரு சாராரும் கற்றலுக்குப் பங்களிக்கின்றார்கள். கீழே தரப்பட்டுள்ள பொதுவான வகுப்பறை உட்கிடைகளுடன், தொடர்ந்து வரும் பகுதிகளில் நாம், மேலும் குறிப்பான கற்பித்தல் மூலோபாயங்களைச் சேர்த்திருக்கின்றோம்.

**வகுப்பறையில்**

ஆசிரியர்கள், வகுப்பறையில் மரபு வழிவந்த திரும்பத் திரும்பக் கூறும் மொழிப் பயிற்சிகளை மட்டுமே பயன் படுத்தக்கூடாது. அவர்கள் பின்வருவனவறறையும் பயன்படுத்த வேண்டும்:

சுயேச்சையான, கட்டுப்பாடற்ற முனையைக் கொண்ட செயற்பாடுகளை (இவை ஒன்றுக்கு மேற்பட்ட தீர்வுகளைக் கொண்டிருத்தல் வரவேற்கத்தக்கது) பிரயோகிக்க வேண்டும். மொழி சம்பந்தப்பட்ட பரிசோரனையில் ஈடுபடுவற்கு வாய்மொழி சார்ந்த சரளத் தன்மையையும் எழுத்தில் சரளத் தன்மையையும் விருத்தி செய்வதற்காக, இவை மாணாக்கர்களுக்கு இடமளிக்க வேண்டும்.

இயற்கையான நிலைமைகளில் பேசுபவர் ஒரு போதும் பயன்படுத்த மாட்டாத போலங்களை முன்வைக்கும் செயற்கையான தன்மையுடன் அமைக்கப்பட்ட பாட நூல் மொழியை அன்றி, யதார்த்தமான, இயற்கையான மொழியைப் பிரதி பலிக்கும் விஷய உள்ளடக்கங்களைப் பயன் படுத்த வெண்டும். ஆசிரியர் முன்வைக்கும் கற்றற் பயிற்சிகள், யதார்த்த வாழ்க்கையில் மொழியைப் பிரதிபலிக்க வேண்டும்.

தொடர்பாடற் செயற்பாடுகளை மாணாக்கார்கள் எவ்வாறு செய்துள்ளார்கள் என்பதைப் பற்றி அர்த்தபூர்வமான பின்னூட்டலை வழங்குவதுடன் மேலும் முன்னேறுவற்கான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். செயற்பாட்டின் தொடர்பாடல் அம்சங்கள் சம்பந்தமாக மாணாக்கர்கள்

எவ்வாறு செய்துள்ளார்கள் என்பதிலேயே பின்னூட்டல் முதலில் கவனஞ் செலுத்த வேண்டும்; அதன் பின்னர் மாணக்கர்கள் பயன்படுத்திய வடிவங்களில் கவனஞ் செலுத்தலாம்.

### கேட்டல் (செவிமடுத்தல்)

இயல்பாகப் பேசப்படும் மேலதிக மொழிகளை விளங்கிக் கொள்வதற்குப் மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

#### ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்

விரிவுரைகளில், ஊடகங்களில் (வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி), நேருக்கு நேரான உரையாடல்களில் இயல்பாகப் பேசப்படும் பேச்சு மொழியை மாணாக்கர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். மேலதிக மொழி ஒன்றைப் பேசுவதைவிட, அதை விளங்கிக் கொள்ளும் தேவை தான் பல மாணாக்கர்களுக்கு அவசியமாக இருக்கின்றது. கேட்டலானது 'விளங்கிக் கொள்ளக் கூடிய உள்ளீட்டை' (முன்னர் ஆராயப்பட்டுள்ளது) வழங்குவதால், கேட்டல், மொழித் திறனை ஈட்டுவதற்கு அத்தியாவசியமாகும்.

பேசப்படும் (பேச்சு) மொழியைக் கிரகிப்பது எவ்வாறு? இது தொடர்பான ஒரு மாதிரி, 'கீழிருந்து மேல்' செயன்முறை எனப்படுகின்றது. இக்கருத்தின் படி, முதலில், மொழியின் மிகச் சிறிய அலகுகளான ஒலிகளை விளங்கிகொள்வதன் மூலம், நாம் ஒரு செய்தியைத் துண்டு துண்டாக ஒன்று சேர்க்கின்றோம். அதன் பின்னர் சொற்களை ஆக்குவதற்காக அவ்வொலிகளை ஒன்றுடனொன்று இணைக்கின்றோம். சொற்களைப் பற்றிய நமது அறிவு, சொற்றொடர்களை விளங்கிக்கொள்வதற்கும் அதன் பின் வாக்கியங்களை விளங்கிக்கொள்வதற்கும் இறுதியில் முழுப்பந்தியையும் விளங்கிக் கொள்வதற்கும் நமக்கு உதவும். மற்றுமொரு மாற்றுக்கருத்து, 'மேலிருந்து கீழ்' அணுகுமுறை எனப்படுகின்றது. இம்மாதிரியின் பிரகாரம், விஷயத்தையும் சந்தர்ப்பத்தையும் பற்றிய நமது அறிவை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பிட்ட ஒரு பந்தியின் அர்த்தத்தை நாம் உய்த்தறிந்து கொள்ளலாம் அத்துடன் செய்தியை அமைக்கும் வாக்கியங்கள், சொற்றொடர்கள், சொற்கள் என்பவற்றின் அர்த்தத்தையும் உணர்ந்து கொள்ளலாம்.

தற்பொழுது நடப்பிலுள்ள ஒரு கோட்பாடு, 'இடைத் தாக்க' மாதிரி ஒன்றை முன்வைக்கின்றது. இம் மாதிரியில் கேட்போர் ஒரே நேரத்தில் 'கீழிருந்து மேல்', 'மேலிருந்த கீழ்' என்ற இரண்டு மூலோபாயங்களையும் பயன்படுத் தவார்கள். செய்தியை முழுமையாக வளங்கிக் கொள்ளும் வரை, ஒரு மூலோபாயம் மற்றைய மூலோபாயத்திலுள்ள இடைவெளிகளை ஈடுசெய்யும்.

பல வகைப்பட்ட கேட்டல்கள் உண்டு. சில சமயங்களில் ஒரு செய்தியின் பொதுவான அர்த்தத்தைக் கிரகித்துக்கொள்வதற்காக நாம் கேட்கின்றோம் வேறு சில சமயங்களில், குறிப்பிட்ட ஒரு தகவலுக்காகக் கேட்கின்றோம். சில வேளைகளில், கேட்டல் என்பது ஒரு வழிச் செயன்முறையாக இருக்கும். (உதாரணமாக, ஒரு விரிவுரை அல்லது ஒரு திரைப்படம்.) வேறு சில சந்தர்ப் பங்களில் கேட்டல் இரு வழிச் செயன்முறையாக அமைந்து, ஓர் உரையாடலில் இருப்பது போல், கேட்டல், பேசுதல் என்ற இரண்டையும் உள்ளடக்கும். கேட்டற் செயற்பாடுகள் சில, பிரதானமாக தகவற் பரிமாற்றத்தை உள்ளடக்கியனவாக இருக்கும் வேறு சில கேட்டற் செயற்பாடுகள் அதிக அளவில் சமூகச் சார்புடையவையாக அல்லது மனவெழுச்சி சார்ந்தவையாக இருக்கின்றன. இத்தகையவற்றில், உணர்ச்சிகள் மேலெழுந்து நிற்கும்.

#### வகுப்பறையில்

கேட்டற் கிரகிப்புச் சம்பந்தமாகப் பின்வரும் கற்பித்தல் மூலோபாயங்களைப் பின்பற்றலாமென விதந்துரைக்கப் படுகின்றது.

ஒரு பந்தியைக் கேட்பதற்கு முன்னர், மாணாக்கர்களின் முன் அறிவை ஞாபகப்படுத்துவதற்காகக் குறிப்பிட்ட பந்தியிலுள்ள விஷயம் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும் என்பதைப் பற்றிக் கேட்டறிந்து கொள்ளுங்கள். மாணாக்கர்களைச் செவிமடுக்கச் செய்வதற்கு முன், ஓர் ஆசிரியர், கடினமான சொற்களையும் கருத்துக்களையும் கவனத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

பந்தியைக் கேட்டபின், பந்தியிலுள்ள பொதுவான கருத்துக்களைப் பற்றி மாணாக்கர்களிடம் கேளுங்கள்.

விபரங்களை நினைவூட்ட வேண்டுமானால் குறிப்புக் களை எழுதுவதற்கு மாணவர்களை அனுமதியுங்கள்.

கேட்டற் பந்திகள் தொடர்பாக இயல்பான மொழியைப் பயன்படுத்த வேண்டும். ஆரம்ப கட்டங்களில் ஆசிரியர் உருவாக்கிய செயற்கையான மொழியை உபயோகிப்பதை விட, யதார்த்த மொழியைக் கொண்ட குறுகிய பந்திகளை உபயோகித்தல் சிறப்பாக அமையும்.


ஒரு வழி, இரு வழி, தகவல்சார்ந்தவை, மன வெழுச்சி சார்ந்தவை என்பன போன்ற பல்வேறுபட்ட கேட்டற் செயற்பாடுகளைப் பயன்படுத்துங்கள்.

### பேசுதல்

மற்றவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் மொழியைப் பேசுதற்கு மாணாக்கர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்

முன்னர், மேலதிக மொழி தொடர்பான அறிவுறுத்தல்கள், மாணாக்கர்கள் உரையாடல்களை மனனஞ் செய்வதையும் ஒரே கோலத்தில் அமைந்த இலக்கண வடிவங்களைத் தொடர்ச்சியாகத் தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் மனதில் பதிய வைக்கும் பயிற்சிகளையும் உள்ளடக்கி யனவாக இருந்தன. இன்றைய ஆராய்ச்சிகள் 'தொடர்பாடற் தேர்ச்சி' எனப்படும் மாதிரியை ஆதரிக்கின்றன. மாணாக்கர்கள், இலக்கணத்தையும் சொற்களையும் கற்க வேண்டும் எனினும் இவை மட்டும் தட்டுத்தடங்களற்ற பேச்சுக்கு (சரளமான பேச்சிற்கு) வழிவகுக்கமாட்டா. இயற்கையான மொழியை முன் கூட்டியே எதிர்வு கூற முடியாதிருத்தலாலும் பேச்சூக்கம் மிக்க உரையாடலிநூ டாகப் பேசுவோர் அர்த்தத்தை முடிவு செய்வதாலும், யதார்த்தமான உரையாடலை எவ்வாறு நடத்திச் செல்ல வேண்டுமென்பது மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். அதாவது, உரையாடல்களை எவ்வாறு ஆரம்பித்து எவ்வாறு முடித்தல், பொருத்தமாகத் துலங்குதல் எவ்வாறு, தமது நம்பிக்கைகள், அபிப்பிராயங்கள், உணர்வுகள் என்பவற்றை வெளிப்படுத்துதல் எவ்வாறு என்பன போன்றவை. கலாச்சார ரீதியாக எவை பொருத்தமானவை என்பதையும் நிலமைகளைப் பொறுத்து மொழி எவ்வாறு வேறுபடுகின்றதென்பதையும் மாணாக்கர்கள் கற்றல் அவசியம் சம்பந்தப்பட்டோரையும் அவர்களுடைய மனநிலைகளையும் வேறு சக, கலாச்சாரக் காரணிகளையும் மாணாக்கர்கள் கற்க வேண்டி ஏற்படலாம். தெளிவான, பயனுறுதிவாய்ந்த உரையாடலை உருவாக்குவதற்குக் கூற்றுக்களை எவ்வாறு இணைக்க வேண்டும் என்பதை, சரளமாகப் பேசும் ஒருவர் அறிந்து கொள்வார்.

தொடர்பாடலில் முறிவுகள் ஏற்படும் போது உரையாடல்களை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதையும் மாணாக்கர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இந்நவீன கருத்துக்கள், பேச்சைக் கற்பிப்பதில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. வழமையான, பேசும் முறைகள், இயல்பான மொழியைக் கொண்டவையாக இருப்பதால், மாணாக்கர்கள், 'எழுதப்படாத' அல்லது புறத் தூண்டலற்ற இயல்பான மொழியை உபயோகிக்க வேண்டும். அவசியப்படும் மொழிக் கோலங்களை வழங்குதல், இயல்பான (இயற்கையான) மொழியை எவ்வாறு அமைத்தல் என்பது பற்றி மாணாக்கர்களுக்கு வழிகாட்டுதல், பயில்வதற்கு வாய்ப்புக்களை (சந்தர்ப்பங்களை) உருவாக்குதல் என்பனவே ஆசிரியரின் பங்களிப்பாகும். மாணாக்கர்கள் செயலார்வத்துடன் பேசுவதற்குப் பயிலும் விதத்தில், ஆசிரியர்கள் விவேகமான பயிற்சியை வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும்.



வகுப்பறையில்

பேசுவதற்குக் கற்பிக்கும் போது, பின்வரும் அறிவுறுத்தல் மூலோபாயங்களைப் பின்பற்றலாமென விதந்துரைக்கப் படுகின்றது.

மொழிக் கோலங்களையும் சொற் கோலங்களையும் மாணாக்கர்களுக்கு எடுத்துக்காட்டி, அவை எவ்வாறு அமைக்கப்படுகின்றன, அவை எப்போது பயன்படுத்தப் படுகின்றன, அவற்றின் பண்பாட்டு ரீதியான உட்கிடைகள் யாவை என்பவற்றை மாணாக்கர்கள் விளங்கிக் கொண்டார்கள் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

பேச்சுடன் சம்பந்தப்பட்ட செயல்களையும் (இணங்குதல், உடன்பாடு இல்லையென்று கூறுதல், மன்னிப்புக் கோருதல், காரணங்களைக் கூறுதல் முதலியன), உரையாடல்களை நடத்திச் செல்வதற்கு வேண்டிய வடிவமைப்புக்களையும் (ஆரம்பித்தல், இடைநிறுத்துதல்கள், முடித்தல் முதலியன), குறிப்பிட்ட ஒரு சொல் தெரியாத சந்தர்ப்பத்தில் சுற்றி வளைத்துச் சொல்வது தொடர்பான மூலோபாயங்களையும் மாணாக்கர்களுக்குக் கற்பியுங்கள்.

கோலங்கள் தொடர்பாக சௌகரியமான உணர்வை மாணாக்கர்கள் பெறும் விதத்தில், கட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியை வழங்குங்கள்.

பேச்சுத் தேவைகளுக்குப் பொருத்தமான, இயல்பான மொழிக் கோலங்களை, மாணவர்களைப் பயன்படுத்தச் செய்யுங்கள். வழிகாட்டும்படி கேட்டல், விடுதியகத்தில் ஓர் அறையைத் தரும்படி கேட்டல் என்பன உதாரணங்கள்.

பிழைகளை விடுவதற்கு மாணாக்கர்களை அனுமதித்தல். ஆனால், எது சிறப்பாக அமைந்தது எது வெற்றி அளிக்கவில்லை என்பது பற்றிய பின்னூட்டலையும் வழங்குங்கள்.

**வாசித்தல்**

இயல்பான (இயற்கையான) பாடப்பகுதிகளை கிரகித்துக் கொள்வதற்கு மாணாக்களுக்குப் பயற்சி அளிக்கப்பட வேண்டும்.

**ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள்**

மேலதிக மொழியிலுள்ள சாதாரணமான பாடப் பகுதிகளை வாசிக்கும் வல்லமை, மாணாக்கர்கள் எய்த வேண்டிய மிக முக்கியமான ஒரு திறமையாகும். கேட்டலைப் போன்று வாசித்தல் ஓர் இடைத்தாக்கச் செயன்முறையாகும். 'கீழிருந்து மேல்' சம்பந்தப்பட்ட திறமைகளில் மாணாக்கர்கள் தேர்ச்சி பெறவேண்டும்: எழுத்துக்களை இனங்காணல், சொற்களையும் சொற்றொடர்களையும் விளங்கிக் கொள்ளுதல், வாக்கியங்களைக் கிரகித்துக் கொள்ளுதல் (5 ஆம் தத்துவத்தைப் பாருங்கள்.) அதேவேளை, வாசிப்புக் கிரகித்தலில் 'மேலிருந்து கீழ்' சம்பந்தப்பட்ட அறிவு முக்கியமாகும், ஒரு சொல் அல்லது சொற்றொடர் விளங்காத போது அதன் அர்த்தத்தை விவேகத்துடன் ஊகிப்பதற்கும் பின்னணி அறிவு அவர்களுக்கு உதவும். வினைத் திறமையுடைய மாணாக்கர்கள், 'மேலிருந்து கீழ்' 'கீழிருந்து மேல்' என்ற இரண்டு மூலோபாயங்களையும் பயன்படுத்துவார்கள் இவற்றுள் ஒன்றைப் பற்றிய அறிவின்மைக்கு ஈடுசெய்யும் விதத்தில் மற்றையதைப் பயன்படுத்துவார்கள். எனவே, அகல் விரிவானதொரு வாசித்தல் நிகழ்ச்சித் திட்டத்தில், ஆசிரியர்கள், இவ்விரு வகையான மூலோபாயங்கள் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

திறமைவாய்ந்த வாசகர்கள், தமது தேவைக்கும் பாடப்பகுதிக்கும் அமைய, தமது வேகத்தை இயைபாக்கிக் கொள்ளலாம். சில சமயங்களில், பிரதான கருத்துக்களையும் விபரமான தகவல்களையும் அனுமானங்களையும் உட்கிடைகளையும் கண்டறியும் விதத்தில் அவர்கள் ஒருமுழுப் பகுதியைக் கவனமாகவும் மெல்லவும் வாசிப்பார்க்ள. சில வேளைகளில், பிரதான விஷயங்கள் கற்பிக்கப்படவேண்டும். இத்திறமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மாணாக்கர்கள் பல்வேறுபட்ட, இயற்கையாக அமைந்த பாடப்பகுதிகளை வாசிக்க வேண்டும்: இவை இலக்கியம் சார்ந்தனவும் இலக்கியம் சாராதனவாகவும், புலமைசார்ந்தனவும் புலமை சாராதனவாகவும் முறை சார்ந்தனவும், முறை சாராதனவாகவும் இருத்தல் வேண்டும். எனவே, வாசிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று மரபுரீதியான வாசித்தற் பந்திகளை மட்டுமன்றி, தேசப்படங்கள், நேர அட்டவணைகள், உணவுப் பட்டியல்கள், குறியீடுகள் என்பன போன்றவற்றையும் உள்ளடக்க வேண்டும். இறுதியாக, வாசிப்பு நெறியொன்று செறிவான வாசிப்பை உள்ளடக்க வேண்டும். இது வகுப்பறை நிலமைகளில் இடம்பெறுவதுடன், குறிப்பான வாசிப்புத் திறன்களை வலியுறுத்துகின்றது. வகுப்பிற்கு வெளியில் மாணாக்கர் மேற்கொள்ளும் மேலும் பரந்த வாசிப்பு, மேலதிகமான வாசிப்பு வாய்ப்புக்களை வழங்குகின்றது.

**வகுப்பறையில்**

இவ்வாராய்ச்சிகளின் பெறுபேறுகளிலிருந்து, பொதுவான பல கற்பித்தல் மூலோபாயங்களை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்:

1. பொதுவான சொற்றொடர்கள் என்பவற்றைத் துரிதமாக ஒழுங்கமைத்தல் 'எனினும்', 'ஆகவே' என்ற பேச்சுத் திறன்சார்ந்த விஷயங்களில் கவனஞ் செலுத்துதல், என்பன போன்ற கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் வாசிப்புத் திறமைகளைக் கற்பியுங்கள்.

2. ஒரு பந்தியை வாசிப்பதற்கு முன், அது பற்றிய பின்னணி அறிவை மீள ஞாபகப்படுத்திக்கொள் வதற்கு உதவுங்கள்.

3. இயல்பான மொழியிலமைந்த பாடநூற் பகுதிகளைப் பயன்படுத்துங்கள். மாணாக்கர் எதிர் நோக்க வேண்டியிருக்கும் பல்வேறு வகையான வாசிப்புக களுக்கும் பொருந்தக்கூடிய விஷயங்களைத் தெரிவு செய்யுங்கள்.

4. வாசிப்புப் பாடப் பகுதிகளுக்குப் பொருந்துவனவும் யதார்த்த வாழ்க்கைப் பணிகளுக்குப் பொருந்து வனவுமான தகுந்த வாசிப்பு மூலோபாயங்களைக் கற்பியுங்கள்: பொதுவான அர்த்தத்தை அறிந்து கொள்வதற்காக வாசித்தல் குறிப்பானதகவல்களை மீள ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்காக வாசித்தல் அநுமானங்கள் (ஊகங்கள்), உட்கிடைகள் என்பனவற்றை விளங்கிக் கொள்வதற்காக வாசித்தல் முக்கிய அம்சங்களை மட்டும் கவனத்திற்கெடுத்து விரைவாக வாசித்தல் நுணுகி ஆராய்ந்து வாசித்தல்.

5. வகுப்பிற்குள்ளும் வகுப்பிற்கு வெளியிலும் வாசிப்பதற்குப் பற்பல சந்தர்ப்பங்களை வழங்குங்கள்.

**உசாத்துணைகள்**


1. ப்ரம்.ஃபிட், 1984; நூனன், 1991; சவிக்னன், 1991.
2. ப்ரௌன், 1992 மென்டல் ஸொன், 1994 ரஸ்ட், 1990.
3. ப்ரௌனும் யூலும், 1983 பைகேட் 1987 மக்கார்த்தியும் கார்ட்டரும், 1994.
4. ஏபர்ஸோல்ட்டும் ஃயீல்ட்டும், 1997 அன்டர்ஸன் 1999 டேயும் பம்.ஃபோர்ட்டும், 1998.


தொடரும்.....

# கல்வியின் மாறுபாடுகள்

## அனைத்துலக மனிதனை நோக்கி

ரவீந்திரநாத் தாகூர்

**தொடர்ச்சி.....**

கல்வியையும் வாழ்க்கையையும் எவ்வாறு ஒன்றுபடுத்துவது என்பதே இன்று நம்மிடையே காணப்படும் முக்கியமான பிரச்சினையாகும். இந்த ஒற்றுமையை, வங்காளி மொழியும் இலக்கியமுமே உண்டாக்க முடியும். பக்கிம் சந்திர சட்டர்ஜியின் இதழாகிய 'பங்கதர்சன்' வங்காள இலக்கிய ஆகாயத்தில் ஒரு புதிய நாள் தோன்றுவது போலத் தோன்றியதை நாம் அறிவோம். கற்றறிவுடையவர்கள் அனைவர்க்கும் அது ஏன் திருப்தியை அளித்தது? ஐரோப்பியத் தத்துவம், சரித்திரம், அல்லது விஞ்ஞானம் ஆகியவற்றில் இதுவரைக் காணப்படாத உண்மை எதையேனும் அந்த இதழ் வெளியிட்டதா? 'பங்கதர்சன்' என்ற கருவியின் மூலமாக ஒரு பேரறிஞர் நம்முடைய கல்விக்கும் வாழ்வுக்கும் இடையே இருந்த குறுக்குச் சுவரை உடைத்தெறிந்து, நம் அறிவுக்கும், இருதயத்திற்கும் இடையே உறவை உண்டாக்கினார். அதுவரை ஐரோப்பியப் பண்பாடு நமக்கு அந்நியமாகவே இருந்து வந்தது. இந்தப் பொருளைத் தான் பங்கதர்சன் நம்முடைய வீட்டிற்குள் கொண்டு வந்தது. அதனால் நாம் நம்மையே ஒரு புதிய ஒளியில் காண முடிந்தது. 'சூர்யமுகி', 'கமலமணி' ஆகிய பாத்திரங்களின் மூலம் நம்முடைய பெண்கள் எவ்வாறு உள்ளனர் என்பதைப் பங்கதர்சன் காட்டிற்று. 'சந்திரசேகா', 'பிரதாப்' ஆகிய பாத்திரங்களின் மூலம் வங்காளி ஆண்மையின் இலட்சியத்தை உயர்த்திற்று. நமது அன்றாட வாழ்க்கையின் சிறு சிறு அலுவல்களில் புகழ் ஒளியைப் பாய்ச்சிற்று.

'பங்கதர்சன்' மூலம் நாம் பெற்ற மகிழ்ச்சி அன்றுள்ள கற்றறிவுடைய வங்காளிகளைத் தம் தாய்மொழியில் எழுதுமாறு தூண்டிற்று. ஆங்கிலம் அவர்களுடைய தொழில் முறைக்கு உதவுமே தவிர, இலக்கிய காரியங்கட்கு உதவாது என்பதை உணர்த்திற்று. இந்த நாட்டில், எவ்வளவு கவலை எடுத்துக் கொண்டு ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டாலும், நீண்ட காலம் வாழ வேண்டிய நூல்கள் வங்காளி மொழியில் தான் எழுதப்பெற வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்தனர். இதற்குரிய முக்கிய காரணம் என்ன வென்றால், ஒரு வங்காளி தன் மனத்தில் தோன்றிய கருத்தை வெளியிடும் கருவியாகப் பயன்படு முறையில், ஆழ்ந்த அந்தரங்கமான அறிவை வெளியிடு முறையில், ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாது. ஆங்கில மொழியைத் தெள்ளத் தெளியக் கற்றிருப்பினும், வங்காளி ஒருவனின் எண்ணத்தையும் உணர்ச்சிகளையும் வெளியிடும் உயிருள்ள கருவியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாது. எந்த அரிய அழகும், நினைவும் ஆக்க வேலைகளில் நம்மை ஈடுபடுத்துகின்றனவோ, அவை வேற்றுமொழி மூலம் தம் உண்மை ஈடுபடுத்துகின்றனவோ, அவை வேற்றுமொழி மூலம் தம் உண்மை வடிவத்தை அடைய முடிவதில்லை. அல்லாமலும் பரம்பரையாகப் பெற்ற குணங்கள், பல தலைமுறைகளாக நம்முடைய மனத்தை ஓர் அச்சில் வார்த்துவிட்டமையின், அவைகளும் அந்த உண்மை வடிவத்தைப் பிற மொழி மூலம் அடைய முடியாது.

நம்முடைய குழந்தைப் பருவமும் இளமைப் பருவமும் எண்ண உள்ளோட்டத்தை விளங்கிக் கொள்ள முடியாத ஒரு மொழியைக் கற்பதிலேயே கழிந்து விடுகின்றன என்று முன்னரே கூறியுள்ளேன். வயது முதிர்ந்தவுடன் இந்நிலை தலைகீழாக மாறி விடுகிறது. அப்பொழுது நம் எண்ணத்தை வெளியிடுவதற்குரிய ஒரு மொழி கிடைக்காமல் திண்டாடுகிறோம். வாழ்க்கையின் முற்பகுதியில் நாம் கற்கும் மொழிக்கும் நமது எண்ணங்கட்கும் தொடர்பில்லாமை யாலேயே ஆங்கில இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடிவதில்லை என்பதையும் முன்னரே குறித்துள்ளேன். பிற்காலத்தில் இருந்த அறிவாளிகள் பலரும் ஆங்கில இலக்கியத்தில் திருப்தி காணாமற் போனதற்கும் காரணம் இதுவேயாகும். இந்த அறிவாளிகளை எடுத்துக் கொண்டால், அவர்களுடைய எண்ணங்கள் ஆங்கிலத்திலிருந்து மட்டுமல்லாமல் வங்காளி மொழியிலிருந்தும் விடுபட்டு நிற்கக் காண்கிறோம். உண்மையைக் கூறுமிடத்து, வங்காளி மொழிக்குக் கூட அவர்கள் அந்நியர்களாக ஆகி, அதனிடம் ஒரு வெறுப்பையும் பழகி விட்டார்கள். அந்த மொழி தங்கட்குத் தெரியாது என்பதை அவர்கள் பிறர் அறியக் கூற மறுக்கிறார்கள். அதற்குப் பதிலாக, சிந்தனைக்குரிய வேலை செய்வதற்கு அம் மொழி ஏற்றதில்லை என்றும் கூறுகிறார்கள். 'சீ! இந்தப் பழம் புளிக்கும்' என்ற நரியின் கதைதான் இவர்கள் கதையும்.

இந்த விஷயத்தை எந்தக் கோணத்தலிருந்து ஆராய்ந்தாலும், நம்முடைய வாழ்க்கை, நம்முடைய எண்ணங்கள், நம்முடைய மொழி என்பவற்றினிடையே ஓர் ஒன்றல் தன்மை இல்லை. அடிப்படையான இந்த ஒன்றல் தன்மை இல்லாத காரணத்தால் நம்முடைய கால்களை ஊன்றி நிற்க முடியாமலும், நாம் விரும்பியதைப் பெற முடியாமலும், நம்முடைய முயற்சிகளில் வெற்றி பெற முடியாமலும் அவதிப்படுகிறோம். குளிர் கால உடையைக் குளிர் காலத்திலும், கோடைகால உடையைக் கோடைக்காலத்திலும் வாங்க விரும்பிய ஓர் ஏழையின் கதையை ஒரு காலத்தில் படித்தேன். அவ்வாறு விரும்பிய அந்த ஏழை, பிச்சை எடுத்த காசை எல்லாம் சேமித்து வைத்தான். கோடைக்காலம் முடிகின்ற வரை கோடைக்கால உடை வாங்குவதற்குத் தேவையான பணத்தை அவன் சேமித்து வைத்தான். கோடைக்காலம் முடிகின்ற வரை கோடைக்கால உடை வாங்குவதற்குத் தேவையான பணத்தை அவன் சேமிக்க முடியவில்லை. ஒவ்வொர் ஆண்டும் இதே நிலை நீடித்து வந்தது. இறுதியாகக் கடவுளே அவன்மேல் இரக்கப்பட்டு அவனுக்கு ஒரே ஒரு வரம் தருவதாகக் கூறினார். அதற்கு அந்த மனிதன் கீழ்வருமாறு கூறினான். 'ஆண்டவனே! குளிர்கால உடையைக் கோடைக் காலத்திலும், கோடைக் கால உடையைக் குளிர் காலத்திலும் வாங்கும்படியாக உள்ள என் அதிர்ஷ்டத்திலுள்ள மாறுபாடுகள் ஒழிவதாக'.

நாமும் ஆண்டவனை நோக்கிக் கல்வியிலுள்ள மாறுபாடுகள் நீங்கி, குளிர் காலத்தில் அதற்கேற்ற உடையும், கோடைக் காலத்தில் அதற்கேற்ற உடையும் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்வோமாக. நமக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் ஆண்டவன் நம் எதிரே வைத்திருக் கின்றான். ஆனால், எந்த நேரத்தில் நமக்கு எது தேவை என்று தெரிந்து எடுத்துக்கொள்ள முடியாமல் நாம் அவதிப்படுகின்றோம். ஆகையால்தான் கதையில் வரும் பிச்சைக்காரனைப் போலவே வாழ்கிறோம். எனவே, நமக்குப் பசிக்கும் பொழுது உணவு தரும் படியும் கடவுளைப் பிரார்த்திப்போமாக. நம்முடைய மொழியை நம் எண்ணங்களுடனும், நம்முடைய கல்வியை வாழ்க்கையுடனும் இணைக்கும்படியும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**கலைத்திட்ட மெய்யியல்**

கலைத்திட்டம் என்பது கல்வி நோக்கம் பாடப்பொருள் கற்பித்தல் முறை, கற்பித்ததற்கான காலம், இடம், சூழல், கற்போனின் இயல்பு, தேவை என்பவற்றுக்கு அமையத் திட்டமிடும் ஒரு கருமத்தின் ஆக்கம் எனலாம். கலைத்திட்ட நோக்கின் அடிப்படையிலே கல்வி திட்டமிடப்படும். தனி மனிதன், சமூகம் என்ற இரண்டையும் மையப்படுத்தி நோக்கங்கள் வரையறை செய்யப்படும். ஒரு நாடு தனது மக்களை எந்த அடிப்படையில் வளர்க்க வேண்டும் என்று கருதுகிறதோ அந்த அடிப்படையில் நோக்கங்கள் உருவாக்கப்படும். கல்வி கல்விக்காக அல்ல, அது சமூக, பொருளாதார, ஒழுக்க நலன் அடிப்படையிலான வழியில் வாழும் வகையைக் குறிக்கோளாக கொள்ளும் சிந்தனையில் திட்டமிடப்பட வேண்டும்.

எவ்வாறு கற்பிப்பது என்று கற்பித்தல் நுண்முறைகள் பற்றிச் சிந்திக்கும் போது, கற்போனது இயல்பு, வளர்ச்சிப் பருவம், உளவியலடிப்படையில் நோக்கப்படுகிறது. கற்போனின் முதிர்ச்சி நிலைக்கு ஏற்பப் பொருளும், கற்பித்தல் முறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. கற்போனது சூழல் உற்றுநோக்கப்படுகிறது. கலைதிட்டம் மாறும் இயல்புடையது. மாறும் உலகத்தின் இயல்பை கலைத்திட்டம் உள்வாங்கிக் கொள்கிறது. கலைத்திட்டம் ஒருமைப்பாடுடையதாக இருக்க வேண்டும். ஒருமைப்பாடு, குறுக்கு ஒருமைப்பாடு (Vertical & Horizontal) நெடுக்கு ஒருமைப்பாடு என இரு வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். கல்வி வழி நடத்தல், கல்விக் கருமம் என்பது முற்றிலும் கலைதிட்டத்திலேயே தங்கியுள்ளது.

கலைதிட்ட ஆக்கத்தில் முற்றிலும் தக்கவார்த்த அடிப்படையிலேயே கருத்தூன்றப்படுகிறது. வில்லியம் ஹெகல் என்பவரது இயக்கவியல் தத்துவமே, கார்ல்ஸ் மார்க்ஸால் கருத்திற் கொள்ளப்பட்டது. ஆனால் வில்லியம் ஹெகலின் கருத்துக்களிற்கு புதுவடிவம் கொடுக்கப்பட்ட மார்க்ஸின் இயக்கவியல் பொருள் முதல் வாதம் என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது. பொருட்களிடையே முரண்பாடு உண்டென்றார் ஹெகல். எல்லாப் பொருள்களும் தம்முள்ளே முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. அதனாலேயே இயங்குகிறது. இயற்கை, சமூகம் என்பவற்றிற்கிடையிலான சிந்தனைகளின் அடிப்படையியே மெய்யியல் என மார்க்ஸ் கருதுகிறார். உருவமற்ற கருத்து இயற்கையின் ஊடாக கருத்து வடிவம் பெறுகிறது என ஹெகல் விளக்கினார். கருத்துக்கள் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாது என்றார் மார்க்ஸ். இவர் இயற்கையுடன் இயக்கவியலின் படிமுறைகளை இணைத்தார். அறிவு என்பது கருத்து அடிப்படையில் எழும் உணர்வாகும். பொருள் முதல் வாதிக்கு புலன் அனுபவத்தின் அடிப்படையில் எழுவது அறிவு என்றார் மார்க்ஸ். மார்க்ஸின் பொருள் வாதம் இவ்விளக்கத்தினால் அனுபவவாதம் என்ற பொருளைத் தந்தது. இதனாலேயே மார்க்ஸ் தனது பொருள்முதல் வாதத்தை இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்றார்.

இயற்கை தனக்கு உதவவேண்டும் என்று மனிதன் செயல்படுகிறான். சமூக வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும் மார்க்ஸ் சமூகம் மனிதர்களின் வாழ்க்கை நடைமுறை களிலிருந்து பிரிக்க முடியாது என்று கருதினார். சமூக வளர்ச்சிப் போக்கில் மனிதர்களின் உணர்வு சம்பந்தப்

பட்டிருப்பதை மார்ஸிசம் ஏற்றுக்கொள்கிறது. வரலாற்றுப் போக்கு மனித நடவடிக்கையின் விளைவு. மனித செயற்பாடே சமூக வளர்ச்சிக்கு அடித்தளம். ஆனால் மனிதன் சிந்திப்பதற்கு முன்னர் தனது பொருளாதார தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும். 'பசி வந்தாற் பத்தும் பறந்திடும்' என்பது மார்ஸியக் கண்ணோட்டம். வயிற்றில் பசிக்கு உணவளிப்பதே கற்பித்தல் முறை என்ற சத்தியசாயியின் கருத்து மார்சுடன் ஒன்றுபடுகிறது. உணவுப் பொருள், உற்பத்தி, உறைவிடம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட சீர்படுத்தப்பட்ட உற்பத்தியே வரலாற்று வளர்ச்சியின் அடித்தளம் என்றார் மார்க்ஸ்.

ஹெகலின் இயக்கவியல், மார்ஸின் இயக்கவியல் பொருள் முதல் வாதம் இந்த இரண்டுமே கலைதிட்டம் பற்றிய மெய்யிலின் அடிப்படையாகும். கொள்கை, எதிர்க்கொள்கை, இணைந்த கொள்கை என மனித வளர்ச்சி பற்றிய இயக்கவியல் மூன்று கட்டங்களை ஹெகல் முன்வைத்தார். முதற் கட்டம் ஆரம்ப நிகழ்வு - அது (Thesis) கொள்கை எனப்படும். இரண்டாம் கட்டம் கொள்கை முரண் (Unti Thesis), மூன்றாவது கட்டம் (Synthesis) முரண்கள் இணைந்த கொள்கை, இயற்கை, சமூகம் என்பன மாறுந்தன்மையது. மாற்றங்களை மனிதன் அனுபவிக்கின்றான். அவன் வாழ்வது மாறும் உலகிலேயே. உற்பத்தி, வாழ்க்கை முறை, சமயம், கலை, விஞ்ஞானம், கருத்துக்கள் அறிவு யாவும், மாற்றமடைகின்றன. சிந்தனையும் மாறுகிறது. இயற்கையும் மாறுகிறது. சிந்தனையில் ஏற்படும் மாற்றந்தான் பொருட்களில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்று ஹெகல் வலியுறுத்தினார்.

இம்மாற்றத்தை மனித செயற்பாட்டின் விளைவு என ஹெகல் கருதவில்லை. யதார்த்தத்தை அவர் ஏற்கவில்லை. ஆன்மீகம் இதன் அடித்தளம் என்றார். கீழைத்தேய மெய்யில் எல்லாம் அவன் செயல் மனித நடத்தையும் அவனின்றி அணுவும் அசையாது என்று கருதியதை ஒத்தது ஹெகலின் கருத்து. ஆனால் மார்க்ஸ் மனித நடத்தையை மாற்றுவதன் மூலம் உலகை மாற்ற முடியும் என ஹெகலின் கருத்தை மாற்றியமைத்தார். மெய்யில் உலகை விபரிப்பதாக நிற்காது. உலகை மாற்றியமைக்கத் தக்கதாக இருக்க வேண்டும் என்று சிந்தித்தார். இச் சிந்தனையே இன்று கல்வி, கலைதிட்டம் என்பவற்றில் வலுவான செல்வாக்குச் செலுத்துகிறது.

முதற்கட்டமான ஆரம்ப நிகழ்வு குழந்தை முதன் முதலாக உலகைப் புரிந்து கொள்ளும் கனவுப்பருவமாகும். குழந்தைக்கு விடயங்கள் ஆச்சரியம். உயிர்ப்பு இவற்றைத் தருகிறது. புதிய உலகு நூதனமாகத் தெரிகிறது. இது கனவுப் பருவம் எனலாம். குழந்தையின் அறிவு திட்ட வட்டமான நடைமுறைக்குட்பட்டு இயங்கமுடியாது. ஆனால் உண்மை அறியும் ஆர்வம் தென்படுகிறது. ஆனால் ஆராய்ந்து பார்க்கும் திறன் சிறிதும் கிடையாது. கருத்துக்களைத் தொடர்புபடுத்தி பார்க்க விரும்புகிறது. தாயை அறிகிறது. தந்தையை அறிகிறது. தாய், தந்தை தொடர்பை உணர்கிறது. ஆனால் அது முழுமை அடையப் படிப்படியான வளர்ச்சி தேவைப்படுகிறது. வளரும் போது கனவு கிளர்ந்து எழுகிறது. மொழியின் துணையுடன் சுற்றாடலை அறிகிறது. குழந்தையிடத்தே மொழியின் துணையுடன் கொள்கை உருப்பெறுகிறது. இதனாலேயே ஹெகல் உரை (Thesis) என்கிறார்.

இரண்டாவது பருவத்தில் 12 முதல் 17 வரை அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. ஏற்கனவே உருப்பெற்ற கருத்துக்களை தொடர்புபடுத்தி, ஒரு திட்டமான கருத்துருவம் பெறப்படுகிறது. முரண்பாடுகள் எழுகிறது. எதிர் சக்திகள் சிந்தனையில் குறுக்கிடுகின்றன. துருவி ஆராயும் (Curiosity) திறன் பெருகுகிறது. மனிதனுக்கு இரண்டு கால், விலங்குகளுக்கு ஏன் நாலு கால்? என்றது போன்ற வினாக்களை எழுப்புகிறது. மொழியை ஓரளவு புரிந்து கொள்ள, மொழியின் இலக்கண அசைவுகளின் ஊடாகக் கற்றுக்கொள்கிறது. கருத்துக்களைப் பாகுபடுத்தி கற்கும் நிலை எழுகிறது. இதனாலேயே (Untithesis) 'கொள்கைமுரண்' என்றார் ஹெகல்.

மூன்றாவது கட்டத்தில் முரண்பாடுகளை தீர்க்கும் திறன் வளர்கிறது. முரண்பாடுகள், சிக்கல்கள் தீர்வுக்குள்ளாகிறது. ஒரு புதிய சூழ்நிலையில் நுழைகிறது. புதிய புதிய முரண்பாடுகளைத் தேடிப் பெறுகிறது. முரண்பாடுகளை சுயமாக தீர்க்க முடிகிறது. உயிர்ப்புகள் கருத்துக்களைப் பெறுகிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சிகளைப் பெற்ற ஒரு புதிய மனித நிலைக்கு ஆளாகிறது. ரூஸோவின் 'எமிலி, சோபி' என்ற பெண்ணைச் சந்தித்து மணக்கும் பருவம் இது. பிளட்டோ வகுத்த கல்விப் பருவத்தின் மூன்றாவது கட்டம் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்த பருவம். உயர் இடைநிலைப் பருவம். இங்கே கலைத்திட்ட ஆக்கத்தில் பிளேட்டோவின் பருவ அடிப்படையான கல்விப் பருவம் பங்கு அளிப்பதைக் காணலாம்.

கலைத்திட்ட ஆக்கத்தில் இயக்கவியல்தத்துவம் தரும் வளர்ச்சிப் பருவங்களை அடிப்படையாக வைத்தே பாடப்பொருள், பாட அலகு, பாடத்திட்டம், கற்பித்தல் முறை, நேர அட்டவணை அனைத்தும் தீர்மானிக்கப்படுகிறது. கலைதிதிட்ட ஒருமைப்பாடு என்பது இயக்கவியல் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. இது Intergration ஒருங்கிணைப்பு எனப்படும்.

ஆரம்பப் பிரிவில் பாடங்களாக வகுக்கப்பட்டாலும், பாடங்களாக கற்பித்தல் கூடாது என்பதற்காகவே ஒன்றிணைத்துக் கற்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு அலகும் ஆசிரியரால் தினம் தினம் ஒன்றிணைக்கப்பட்டே

கற்பிக்கப்படுகிறது. கனிஷ்ட இடைநிலையில் எமது நாட்டில் ஒன்றிணைந்த பாடங்கள் நடைமுறையிலுள்ளது. விஞ்ஞானம், உயிரியல், விலங்கியல், தாவரவியல் என்ற பாடங்களின் ஒன்றிணைப்பு, கணிதம், தூய கணிதம், கேத்திர கணிதம், பிரயோக கணிதம், எண் கணிதம் என்பவற்றின் ஒன்றிணைப்பு. இந்திய நாட்டில் ஒன்றிணைந்த பாடநூல் ஆரம்பப் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நமது நாட்டில் ஆசிரியரே ஒன்றிணைக்கிறார். ஒன்றிணைக்கும் திறன் ஆசிரியருக்கு ஊட்டப்பட்டுள்ளது. கனிஷ்ட இடைநிலையில் மட்டுமே ஒன்றிணைந்த பாடத்திட்டமும் பாடநூலும் நடைமுறையிலுள்ளது.

கல்வி ஒரு வாழ்நாள் கருமம். ஒரு கருமத்தில் ஆழ்ந்து அனுபவம் பெற்று, மீண்டும் புதிய அனுபவத்தை நோக்கி ஆரம்பிக்கும் அனுபவத் தொடர்ச்சியே மிக அவசியம். இது பாட அலகிலும் கலைத்திட்ட அமைப்பிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. மாணவர் ஆர்வம், மன வளர்ச்சி, வளர்ச்சி நோக்கிய சுழற்சி, மாணவரது விருப்பங்களை நிறைவு செய்தலில் வெற்றியடைதலே கலைத்திட்டத்தின் முழுமையான, நிறைவான செயற்பாடாகும்.

உருவங்களுடன் பிள்ளையின் சிந்தனை தொடர்பு படுத்தப்படுவதால், உருவங்களைக் காணுதல், அது பற்றிய உணர்வு விழிப்படைதல் குழந்தையின் முதல் வளர்ச்சித்தரம், தனது உணர்வு, உடல் உறுப்பு அனைத்தையும், அதன் அசைவுகளையும் ஒருமுகப்படுத்தி குழந்தையை ஈடுபட வைத்தல், அதன் உணர்ச்சியின் வெளித்தோற்றமாகும். உருவங்களைப் புரிந்து கொள்ளல், பாகுபாடுகளை அறிய வைக்கும் கருவியாகும். உருவங்களை உணர்வதன் மூலம் பெறும் அகக்காட்சி, பிறருடன் பிற உயிரினங்களுடன் உணர்வுபூர்வமான, ஊடாட்டத்தை ஏற்படுத்தி பேசும் மொழியைச் செம்மை பெறச் செய்கிறது. சாதாரணமாக ஆரம்பப் பிரிவில் முதலாம் வகுப்பில் 'சில்லு' என்ற பாட அலகினை கற்பிக்கும் போது ஆசிரியர் குழந்தையை தெருவீதிக்கு அழைத்துச் சென்று, வீதியில் செல்லும் வாகனங்களின் சில்லுகளை அவதானிக்க வைப்பதன் மூலம் பல்வேறு வடிவமான பல்வேறு பொருளிலான பல்வேறு எண்ணிக்கைகள் கொண்ட சில்லுகளை அறிகிறது. இங்கு உருவங்களை அறிதல், சிக்கல் இல்லாத பாகுபாட்டை உணர்தல், சிறிய அளவிலான 'எண்' பற்றிய விழிப்பு பெறப்படுகிறது. இரண்டு சில்லு, நாலு சில்லு, மூன்று சில்லு என எண் அடிப்படைப் பாகுபாட்டை தானே சுயமாக அறிகிறது. ஆசிரிய வழிகாட்டியில் இதனை நடைமுறைப் படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

பொருட்களைப் பாகுபாடு செய்து உணர தனது சொந்த மொழியை குழந்தை பயன்படுத்துகிறது. பொருளை உணர்வதிலிருந்து மொழியைக் கற்கிறது. எண்ணங்களைப் பாகுபடுத்துகிறது. உணர்வை வளர்க்கிறது. இது மனித வளர்ச்சியின்முதலாவது சுழற்சி (Cycling) ஆகும். ரூசோவின் கற்றலுடன் தொடர்புபடுத்தி அனுபவம் பெறவைக்க வேண்டும். சூழல், பொருட்கள், மனிதன் இங்கு மூன்றும் அனுபவங்களின் ஊடகம் என்ற மெய்யில் இங்கு கலைத்திட்டத்தில் வலுப்பெற்றுள்ளது. மாணவனுக்கு ஏற்றது என நாம் கருதும் கல்வியை விட, மாணவனது நடைமுறையே அவனைப் பெரிதாகப் பாதிக்கிறது. சுற்றுப்புறச் சூழல் உள வளர்ச்சியின் தீர்மானிக்கும் அம்சம். ரூசோ சொன்ன இயற்கை வாதச் சிந்தனையே இது. பிள்ளையை அனுபவங்களோடு தொடர்புபடுத்தி கற்பிக்க முயலாதே. கற்க வழிகாட்டு, குழந்தையின் உள்ளமும் உடலும் இணைய வேண்டும். வகுப்பறை குழந்தையின் சிறை. அவனை வெளியுலகுடன் சுற்றாடலுடன் தொடர்பு பெறவை. அவன் சுயமாக அனுபவங்களைப் பெறுவான். என்ற தத்துவார்த்தம் புலனாகும்.

இரண்டாவது கட்டமான கனவுப் பருவ நிறைவின் போது, கட்டிளமைப்பருவத்தில நுழையும் போது, எதிர்ப்பாலாருடன் தன்னையொத்த பாலாருடன் தொடர்பாடத்தக்க நிலையில் மொழி அவனுக்கு உதவுகிறது. சகாக்களுடனும் எதிர்ப்பாலருடனும் இணையவும் இயல்பிற்கேற்ற மொழி, கவிதை நாட்டம், பிறநாகரிகங்களை வேறுபட்ட மக்களின் வாழ்க்கை முறையை அறிய விரும்பும் நிலையை தோற்றுவிக்கிறது. மொழியறிவு வரன்முறையாக, திடமாக வளருகிறது. இப்பருவ உணர்வு சுழல்களாக மாறி, மூன்றாம் கட்டமான இணைந்த கொள்கை அல்லது வரையறைப் பருவத்தினை நோக்கி நீடிக்கின்றது. எழுத்தாற்றல், கணிதத்தின் நுழைவாயில், வரலாற்று விடயம் போன்றவற்றில் கற்றல் தேர்ச்சி (Learing Skill) வேண்டப்படுகிறது. உள்ளுணர்வு பொருந்திய வாழ்க்கையை நோக்கி பிரவேசிக்க கனவு உணர்ச்சிகள் காரணமாகும்.

கற்பனை உணர்வு கனவுணர்ச்சியின் பிறப்பு, சுறுசுறுப்பான தெளிவு நோக்கிய கல்விப் பயணம் இங்குதான் ஏற்படும். தாய் மொழியையும், கைவினைத் திறனையும் மாணவன் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலின் முதலாவது சந்தர்ப்பம் இங்குதான் கிட்டுகிறது.

குழந்தை கைவினையில் ஈடுபட எதிர்பார்க்கக் கூடாது. கூர்ந்து கவனிக்க முடியாது. வார்த்தைகளால் எண்ணங் களை ஞாபகத்தில் இருத்தி வைக்க முடியாது. சிறுவரான போது புதிய உலகில் நுழையும் இயல்பு வாய்க்கப் பெறுகிறது. வாலிபப் பருவம், கனவுக் காட்சிப் பருவத்தின் தொடர்ச்சி, கல்வி இந்தத் தொடர்ச்சியை முறையாகப் பேணுவோமேயானால் அவன் வாழ்க்கை நல்ல குறிக்கோளுடையதாக உருவாக்குகிறார்.

தொடரும்.....

# இது ஆசிரியர்களுடையது அல்ல... நம் தலைமுறைகளின் பிரச்சினை

சமஸ்

**ஐம்பதாயிரம் ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய இருப்பதாக கல்வியமைச்சர் தெரிவித்திருப்பதை அடுத்து இக்கட்டுரையில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எமது கல்வி புலத்திலும் காணப்படுவதாய் இருக்குமோ என எழுப்பப்பட்ட ஐயத்தின் பெயரில் அகவிழியில் பிரசுரிக்கப்படுகிறது.**

ஏம்பா, உலகத்துலேயே உங்களுக்கு ரொம்பப் பிடிச்சுது யாரை? என்கிட்ட எதையும் மறைக்க வேண்டியதில்லை. வெளிப்படையா உண்மையப் பேசலாம்...

புது வகுப்புக்குப் போன முதல் நாளில், வகுப்பாசிரியர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால், மாணவர்கள் சொல்லும் பதில்களுக்கு எல்லையும் இருக்குமா என்ன? அம்மா, அப்பாவில் தொடங்கி முறைப்பெண், கடவுள் வரை பதில்கள் கொட்டுகின்றன.

எல்லோருடைய பதில்களையும் அமைதியாகக் கேட்டுவிட்டு, பின் நிதானமாக அந்த ஆசிரியர் கேட்டார்: அப்போ உங்கள்ல ஒருத்தருக்கும் உங்களை ரொம்பப் பிடிக்காதா? உங்களை உங்களுக்கே பிடிக்கலைன்னா, வேற யாருக்குப்பா ரொம்பப் பிடிக்கும்?

கண்கள் விரிய அவரைப் பார்க்கிறார்கள் மாணவர்கள். வகுப்பறையில் துணியால் மூடப்பட்ட கரும்பலகையின் ஒரு பகுதியை அவர் திறக்கிறார். பள்ளிக்கூடத்தைத் தாண்டாத காமராஜர் தமிழ்நாட்டின் கல்விக் கண்ணைத் திறந்தவர், படிப்பைப் பாதியில் விட்ட கருணாநிதி தமிழ்நாட்டின் சாதுர்யமான முதல்வர். மழைக்கு மட்டுமே பள்ளிக்கூடத்துக்கு ஒதுங்கிய கி. ராஜநாரா யணன் பின்னாளில், பல்கலைக்கழகக் கவுரவப் பேராசிரியர். எதற்கும் கலங்காதே... உலகிலேயே முக்கியமானவன் நீ... உன்னால் முடியும்!

அடுத்த சில நிமிடங்களில் மாணவர்கள் தங்களை மீறி கைதட்டுகிறார்கள். ஆசிரியரும் கைதட்டிக் கொள்கிறார். பல ஆண்டுகளுக்கு முன் நடந்த கதை இது. இடம்: தமிழ்நாட்டின் பழமையான பள்ளிக் கூடங்களில் ஒன்றான மன்னார்குடி பின்லே பள்ளி (வயது 169). ஆசிரியர்: வீ. ஜெகதீசன்.

ஒரு மனிதனுக்கு சுயத்தின் மீதான நேசத்தையும் தன்னம்பிக் கையையும் ஆசிரியர்களால் எவ்வளவு அருமையாக உருவாக்க முடியும் என்பதற்கான உதாரணங்களில் ஒருவர் ஜெகதீசன். அரசு ஆசிரியர் பணியிடத்துக்கான தேர்வு முறையைக் கண்டித்து விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்ற சென்னை கபிலன், ராதா நல்லூர் சந்தோஷ்குமார், வீரகனூர் செல்லத்துரை, திருவிடை மருதூர் கார்த்திக் இவர்களையெல்லாம் எதற்கான உதாரணங்களாகச் சொல்வது? நாளைக்கு இவர் களெல்லாம் ஆசிரியர் களானால், இவர்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு எதைச் சொல்லிக் கொடுப்பார்கள்? ஒரு காரியத்தைச் சாதிக்க எந்த எல்லை வரை சென்று மிரட்டக் கற்றுக்கொடுப்பார்கள்? அந்தப் பிள்ளைகள் வாழ்க்கையையும் போராட்டங்களையும் என்ன மாதிரியான மதிப்பீடுகளோடு பார்ப்பார்கள்? கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இப்படிப் பட்டவர்களையெல்லாம் வடிகட்ட நம்முடைய ஆசிரியர் தேர்வு முறையில் சல்லடை இல்லை. இங்குள்ள ஒரே சல்லடை மதிப்பெண், மதிப்பெண், மதிப்பெண்...

### தகுதித்தேர்வு முறைதானா?

ஒருகாலம் இருந்தது. நானும் எங்க டீச்சர் மாதிரி அரசாங்கப் பள்ளி டீச்சர் ஆவேன், கிராமத்து ஏழைப் பிள்ளைகளுக்கெல்லாம் பாடம் சொல்லிக்கொடுப்பேன் என்று அரசுப் பள்ளி ஆசிரியர் தொழிலை ஒரு கனவுபோலப்



பார்த்துத் தயாரான காலம். இன்றைக்கு அது ஒரு வரம். காசு கொட்டும் மரம். இதைப் பயன்படுத்தி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், கல்வியியல் நிறுவனங்களும் பணம் இருந்தால், வகுப்புக்கு வராமலேயே ஆசிரியர் பயிற்சியை முடிக்கலாம் என்கிற சூழலையெல்லாம் உருவாக்கிவிட்ட நிலையில், அரசுப் பள்ளி ஆசிரியர் களைத் தேர்ந்தெடுக்க ஒரு புதிய தேர்வுமுறை அவசியம் தேவைப்பட்டது. அந்த வகையில், பள்ளிக் கல்வி, ஆசிரியப் பயிற்சி சான்றிதழ்கள், வேலைவாய்ப்பு அலு வலகப் பதிவு மூப்பைத் தாண்டி ஒரு தகுதித் தேர்வை அரசு யோசித்தது ஆக்க பூர்வமான விஷயம். ஆனால், அந்தத் தகுதித் தேர்வும் நம்முடைய பழைய பத்தாயத்தைத் தாண்டவில்லை என்பது சாபத் துயரம்.

ஆசிரியர் பணிக்கென அரசு ஒரு தேர்வை நடத்துகிறது. அந்தத் தேர்வு முழுக்க முழுக்க அவர்கள் அதுவரை படித்த பள்ளி - கல்லூரி பாடங்களையே சுற்றுகிறது. அந்தத் தேர்வில் தேறியவர் களிடம் நீ இந்தத் தேர்வில் எடுத்த மதிப் பெண்கள் மட்டும் செல்லாது பள்ளி இறுதிப் படிப்பிலும், ஆசிரியப் பயிற்சியிலும் பெற்ற மதிப் பெண்களையும் கணக்கில் எடுத்துத் தேர்ந்தெடுப்போம் என்று சொல்வது பெரிய கேலிக்கூத்து. ஆனால், தமிழகக் கல்வித் துறை அதைத்தான் சொல்கிறது. புதிய தேர்வு முறை தகுதித்தேர்வில் பெறும் மதிப்பெண்களில் 60, பள்ளி - ஆசிரியர் பயிற்சித் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களில் 40 என்று கணக்கிட்டு ஆட்களைத் தேர்ந்தெடுப்போம் என்று சொல்கிறது.

ஒருவரை வேலைக்குத் தேர்தெடுக்கும்போது, இன்றைக்கு அவருக்கு இருக்கும் தொழில்சார் அறிவையும் திறமையையும் வைத்துத் தேர்ந்தெடுப்பதுதான் உலகெங்கும் உள்ள முறை. நம்முடைய கல்வித் துறை அதிகாரிகள் எந்த ஊரில் அறை எடுத்துத் தங்கி இப்படியெல்லாம் புதிது புதிதாக யோசிக்கப் பழகுகிறார்கள் என்று புரியவில்லை.

### உடையும் முட்டைகள்

இந்த விவகாரம் தமிழகக் கல்வித் துறையில் நடக்கும் - ஆசிரியர்கள் இதுவரை பேசாத - இன்னொரு கேலிக்கூத்தை அதிகாரபூர்வமாக அம்பலமாக்கியிருக்கிறது. தங்கள் ஆட்சியில்தான் கல்வித் துறை முன்னேறுவதாகக் காட்டிக்கொள்ளப் போட்டிபோட்டுக்கொண்டு மதிப் பெண்களை வாரி வழங்கும் கலாச்சாரத்தின் விளை வாகப் புதிய தலைமுறையினர் பள்ளித் தேர்வில் மதிப் பெண்களை அள்ளிக் குவிக்கிறார்கள். பத்து இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலை வேறு. நாங்கள் எப்படி இப்போது படித்து முடிப்பவர்களுடன் பள்ளிக் கூட மதிப்பெண்களில் போட்டி போட முடியும்? என்று கேட்கிறார்கள் பல ஆண்டு காலமாக ஆசிரியர் பணிக்காகக் காத்திருப்பவர்கள். தகுதித் தேர்வில் 102 மதிப்பெண் பெற்ற நான் தேர்ந்தெடுக்கப்படவில்லை 82 மதிப்பெண் பெற்றவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். என்ன நியாயம் இது? என்று கேட்கிறார் ஓர் ஆசிரியை. நியாயமான கேள்வி இது.

இதற்குக் கல்வித் துறையினர் சொல்லும் விளக்கம் என்ன தெரியுமா: தகுதிக்கான வரையறை மதிப்பெண்ணை எல்லோரும் வாங்கிவிட்டால் எப்படி எல்லோருக்கும் வாய்ப்பளிப்பது?

மொத்தப் பணியிடங்கள் 100 என்றால், இடஒதுக்கீட்டின் அடிப்படையில், அந்தந்தப் பிரிவுக்கான முதல் நூறு இடங்களில் வருபவர்களுக்குப் பணியாணையை வழங்க வேண்டியதுதானே? இதில் என்ன சிக்கல்?

### பாடப் புத்தகங்களைத் தாண்டி சிந்திப்பது எப்போது?

அடிப்படையில் இவையெல்லாமே நம்முடைய தேர்வு முறைகள் பாடப் புத்தகங்களையே சுற்றிக் கொண்டிருப்பதால் எழும் சிக்கல்கள். பாடப் புத்தகங்களைத் தாண்டி சிந்திப் பவர்கள் இந்த அமைப்புக்கு உள்ளே வர நம்முடைய கல்வித் துறை என்ன வழியை வைத்திருக்கிறது? நல்ல கதைசொல்லிகள், வளமான பாரம்பரிய அறிவைப் பெற்றிருப்பவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் இவர்களுடைய திறமைக்கெல்லாம் நம்முடைய கல்வித் துறை என்ன மதிப்பு அளிக்கிறது? நிஜமாகவே நமக்குத் தேவை திறமைசாலிகள் என்றால், வடிகட்ட ஆயிரம் வழிகள் உண்டு. நிச்சயம் இப்போதைய முறை அந்த வழிகளில் ஒன்று அல்ல.


ஆசிரியர் ஜெகதீசன்தான் இதையும் சொல்வார். ஒரு சமூகத்துல ஆசிரியர்கள்தான் எல்லா விதத்துலேயும் உயர்ந்தபட்சபீடத்துல வைக்கப்படணும். உயர்ந்த பட்ச தகுதிகளோட உள்ளவங்களை அரசாங்கம் தேடித் தேடி ஆசிரியப் பணிக்கு எடுக்கணும். ஏன்னா, ஒரு தப்பான ஆள் மருத்துவரா தேர்ந்தெடுக்கப்பட்டா, சில உயிர்கள் காலியாகும். ஒரு தப்பான ஆள் பொறியாளரா தேர்ந் தெடுக்கப்பட்டா, பல கட்டிடங்கள் காலியாகும். ஆனா, ஒரு தப்பான ஆள் ஆசிரியராகிட்டா பல தலைமுறைகள் பாதிக்கப்படும்.

ஆசிரியர் தேர்வுமுறை தொடர்பான போராட்டங்களை நாம் அமைதியாக வேடிக்கை பார்த்திருக்கலாகாது. இது அவர்களுடைய பிரச்சினை மட்டும் அல்ல நம் தலைமுறைகளின் பிரச்சினை!

# ஆசிரியர்களே, என்ன செய்யப்போகிறீர்கள்

பி.ஏ. கிருஷ்ணன்

**இந்தியாவின் எதிர்காலம் ஆசிரியர்கள் கையில்தான் இருக்கிறது. அவர்கள் அதை உணர்ந்திருக்கிறார்களா?**



சில மாதங்களுக்கு முன்னால் வாஷிங்டன் நகரில் ஒரு பேராசிரியையைச் சந்தித்தேன். அறிவுசார் உளவியலில் (காக்னிடிவ் சைகாலஜி) ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்றவர். வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அவர், என்னிடம் பட்டப் படிப்பு மாணவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது, அவர்களில் பெரும்பாலானோருக்குச் சாதாரணப் பெருக்கல் வகுத்தல்கள்கூடத் தெரியவில்லை என்று சொன்னார். ஒரு வரைவத்தைப் (க்ரா∴ப்) பார்த்து விளக்கவும் தெரியவில்லை என்றார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன செய்யப்போ கிறீர்கள் என்றேன். அவர்களுக்குத் தனி வகுப்பு எடுப்பேன். ஆனால், பிரச்சினை மாணவர்களுடையது அல்ல. அவர்களைக் குறைகூற முடியாது. கோளாறு பள்ளிப் பாடத்திட்டத்தில் இருக்கிறது. நாங்கள் அரசோடு தொடர்புகொண்டு பாடத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யப் பரிந்துரைக்கப்போகிறோம்.

இதற்கு நேர்மாறான அனுபவம் எனக்குச் சமீபத்தில் ஏற்பட்டது. சென்ற மாதம் நான் தமிழ்நாட்டின் பெருநகர் ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டேன். அதில் பேசிய கல்லூரி முதல்வர், மாணவர்கள் புத்தகங்களைப் படிப்பதே இல்லை என்று உரத்த குரலில் வருத்தப்பட்டார். தனது கடந்த காலத்தைப் பற்றிப் பேசிய அவர், எங்கள் காலத்தில் நாங்கள் ஹோட்டலில் அறை போட்டுப் புத்தக விமர்சனம் செய்வோம் என்றார். மறுநாள் திரும்ப வந்து மாணவர்கள் கல்லூரி நூலகங்களுக்குச் செல்வதே இல்லை என்றார். திரும்பத் திரும்பக் குறை கூறிக்கொண்டிருந்த அவர், மாணவர்கள் படிக்காமல் இருப்பதில், நூலகங்களுக்குச் செல்லாதிருப்பதில் ஆசிரியர்களின் பங்கு என்ன என்பதைப் பற்றிச் சற்றேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இவ்வளவுக்கும் அன்று கருத்தரங்கில் கேள்விகள் கேட்ட சில மாணவர்கள், நன்றாகப் படித்தவர்களாகத்தான் தெரிந்தார்கள். மிகுந்த ஊக்கத்தோடு எதிர்வினை செய்தார்கள்.

**புனைகதை**

நான் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து 40 ஆண்டு களாகிவிட்டன. நான் மாணவனாக இருந்தது அதற்கும் முன்னால். என்னுடைய காலத்திலேயே மாணவர்களில் புத்தகங்கள் படிப்பவர்கள் மிகக் குறைவு. நூலகங்களுக்குச் செல்பவர்கள் அதைவிடக் குறைவு. ஆசிரியர்களில் புத்தகங்கள் படித்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். எங்கள் கல்லூரி நூலகத்தில் புதிய பளபளப்போடு இருந்த புத்தகங்களின் எண்ணிக்கை ஒன்றிரண்டு தடவை பிரித்துப் பார்க்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையைவிட மிகமிக அதிகம். ஆசிரியர்களில் கணிசமானவர்கள் வட்டிக்குப் பணம் கொடுப்பதிலும், வீடு, மனைகள் விற்பனை செய்வதிலும் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். எனவே, பழைய காலம் பொற்காலம் என்று சொல்வதைப் போல பெரிய புனைகதை ஏதும் இருக்க முடியாது. சில கல்லூ ரிகளில் புத்தகங்களில் நாட்டம் கொண்ட ஆசிரியர்களும் மாணவர்களும் இருந்தார்கள் என்பது உண்மை. இன்றும் அவ்வாறு பல ஆசிரியர்களும் மாணவர்களும் இருப்பார்கள். ஆனால், மொத்தமாகப் பார்த்தால் நிலைமை சரியில்லை. அன்று நிலைமை மோசம் என்றால், இன்று மாற்றம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, நிலை இன்னும் சீரழிந்திருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். இதற்கு முதல் காரணம், ஆசிரியர்களாகத்தான் இருக்க முடியும். ஆசிரியர்கள் புத்தகங்களை வாங்குபவர்களாக இருந்தால், குறைந்தபட்சம் நூலகத்துக்குச் சென்று

புத்தகங்களைப் படிப்பவர்களாக இருந்தால், மாணவர்களுக்கு இன்னின்ன புத்தகங்களைப் படியுங்கள் என்று பரிந்துரை செய்பவர்களாக இருந்தால், மாணவர்களிடம் படிக்கும் பழக்கம் நிச்சயம் ஏற்படும்.

### இது ஏன் நடப்பதில்லை?

கலந்துரையாடல் முடிந்ததும் பல ஆசிரியர்களிடம் நான் பேசினேன். டெல்லி திரும்பி வந்ததும் புலமையும் எழுத்துத் திறமையும் மிக்க சில ஆசிரியர்களுடன் தொலைபேசியில் உரையாடினேன். ஆசிரியர் களிடம் இவற்றையெல்லாம் எதிர்பார்ப்பது ஏமாற்றத்தில் முடியும் என்கிறார்கள் அவர்கள். வரவேற்பறையில் உட்கார்ந்திருக்கும் யானையைக் கவனிக்காமல் வளையில் ஓடும் எலியைப் பற்றிக் கவலைப்படுவதுபோல இருக்கிறது என்கிறார்கள். சொல்வது புரியவில்லை என்றேன். பதவியில் இருப்பவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே எழுதாத, எல்லோருக்கும் தெரிந்த, ஆனால் வெளியே சொல்ல விருப்பப்படாத உடன்பாடு ஒன்று இருக்கிறது. அது பணக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியது. ஆசிரியர்களைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டால், சீர்திருத்தம் என்று புறப்பட்டால் அதன் சீரான இயக்கத்துக்குத் தடை ஏற்படும் என்றார் ஓர் ஆசிரியர். கல்லூரி ஆசிரியராக நியமனம் செய்யப்பட வேண்டும் என்றால், குறிப்பிட்ட கல்லூரிக்கு மாற்றம் பெற வேண்டுமென்றால், யாருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பதற்கு ஒரு வழிமுறையே இருக்கிறது. அந்த வழிமுறையைப் பின்பற்றாத ஆசிரியர்கள் மிகச் சிலரே என்றார்.

**பதவியில் இருப்பவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே எழுதாத, எல்லோருக்கும் தெரிந்த, ஆனால் வெளியே சொல்ல விருப்பப்படாத உடன்பாடு ஒன்று இருக்கிறது. அது பணக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியது. ஆசிரியர்களைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டால், சீர்திருத்தம் என்று புறப்பட்டால் அதன் சீரான இயக்கத்துக்குத் தடை ஏற்படும் என்றார் ஓர் ஆசிரியர். கல்லூரி ஆசிரியராக நியமனம் செய்யப்பட வேண்டும் என்றால், குறிப்பிட்ட கல்லூரிக்கு மாற்றம் பெற வேண்டுமென்றால், யாருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பதற்கு ஒரு வழிமுறையே இருக்கிறது. அந்த வழிமுறையைப் பின்பற்றாத ஆசிரியர்கள் மிகச் சிலரே என்றார்.**

மாணவர்களும் மாணவிகளும் உண்மையாகவே படித்துக் கூர்மையடைந்துவிட்டால் அவர்கள் பாடு திண்டாட்டம் ஆகிவிடும் என்ற காரணத்தினாலேயே மாணவர்களைப் புத்தகங்களிலிருந்து ஆசிரியர்கள் விலக்கி வைத்திருக்கிறார்கள் என்றார் நண்பர்.

அவர் சொன்ன உதாரணம். முதுநிலை பட்டப்படிப்பு மாணவி ஒருத்தி வில்லிபாரதத்தைப் பற்றிய அருமையான கட்டுரையைக் கருத்தரங்கு ஒன்றில் படித்தாள். அவளது ஆசிரியருக்கு ஒரே கோபம். நீ எங்கிருந்தோ திருடியிருக்கிறாய், நீ எழுதியது அல்ல என்றார். மாணவி இது நான் எழுதியதுதான், நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்கிறேன் என்றாள். ஆசிரியர் கேட்கக் கேட்க, பதில்கள் மிகச் சரியாக வந்தன. கருத்தரங்கு முடிந்தபின் ஆசிரியர் மாணவியைத் தனியாக அழைத்து, நீ இது போன்று பொதுக் கூட்டங்களில் கட்டுரை படிப்பதற்கு முன் என்னிடம் அனுமதி பெற வேண்டும் என்று கடுமையாகச் சொல்லிவிட்டார். மாணவி கட்டுரைகள் எழுதுவதையே நிறுத்திவிட்டாள்.

### ஜாலியாக நேரத்தைக் கழிப்போம்

மற்றொரு ஆசிரியர், நிலைமையின் காரணம் பொருளாதாரம், சமூகம், சார்ந்தது என்றார். இன்று கலை, அறிவியல் பயிற்றுவிக்கும் கல்லூரிகளில் சேர்பவர்களில் பெரும்பாலானவர்கள் வசதி யற்றவர்கள். அவர்கள் குடும்பங்களிலிருந்து முதன்முதலாகக் கல்லூரிக்குச் செல்பவர்கள். இவர்களுக்கு மொழியைச் சரியாக எழுத, கொஞ்சம் சிக்கலான கோட்பாடு களைப் புரிந்துகொள்ள, பயிற்சி தேவை. இந்தப் பயிற்சி எந்தக் கல்லூரிகளிலும் கிடைக்காது. மாணவர்களும் இத்தகைய பயிற்சியின் தேவைகளை உணர்ந்துகொள்ளும் பக்குவம் பெறாதவர்கள். எனவே, அவர்கள் மூன்று அல்லது ஐந்து வருடங்களை ஜாலியாகக் கழிக்க நினைக்கிறார்கள். விளைவு என்ன ஆகும் என்பதுபற்றிய புரிதல் இல்லாமலே.

ஏதோ போகிறபோக்கில் ஒன்றிரண்டு உதாரணங்களை வைத்துக்கொண்டு ஆசிரிய சமூகத்தின் மீது கரி பூசுவது சரியல்ல என்று சிலர் நினைக்கலாம். ஆனால், இந்தியத் தொழில் கூட்டமைப்பு போன ஆண்டு ஒரு கணிப்பு நடத்தியது. இந்தக் கணிப்பின் படி 66% பட்டதாரிகள் எந்த வேலைக்கும் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது. இவர்களில் பொறியியல் பட்டதாரிகளை எடுத்துவிட்டால் நிலைமை இன்னும் மோசம். மற்றைய பட்டதாரிகளில் 85-லிருந்து 90% எந்த வேலைக்கும் தகுதியற்றவர்கள்.

### எதிர்காலம் மன்னிக்காது

இந்தியா உலக உற்பத்தி மையங்களில் ஒன்றாக இருக்கப்போகிறது என்ற கனவை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். கனவு நனவாக வேண்டு மென்றால், நமது இளைய தலைமுறை கூர்மையாக, திறமையுடையவர்களாக இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அவர்களை அவ்வாறு ஆக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்கள் கைகளில் இருக்கிறது. பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் எதிர்காலம் அவர்களை மன்னிக்காது.

**இந்நிலைமை இலங்கை பட்டதாரிகளிடம் காணப்படுவதாக கல்வி உயர்கல்வியமைச்சர் குறிப்பிடப்பட்டது. குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரை தொடர்பான கருப்பொருள் இலங்கை கல்வியமைப்பு முறையிலும் தொடருமானால் எம்மையும் எதிர்காலம் மக்கிக்காது.**

# பாடப்புத்தக ஆக்கத்தில் தமிழ்

பேராசிரியர் ச. மாடசாமி

எளிய தமிழ் அலங்காரமற்ற இயற்கையான தமிழ் சகமனிதனோடு நாம் தினசரி பேசிப் பழகும் தமிழ் மதிப்பிழந்து நிற்பது நமது பண்பாட்டின் நேர்மை குறித்த பிரச்சினைகளில் ஒன்று. பாராட்டு மேடைப் பக்கம் திரும்பினால், கொண்டாட்டத் தமிழ்..! கூஜாத் தமிழ் தொலைக்காட்சியில், சிதைவுண்ட தமிழ்..! தீவிர இலக்கிய உலகில், முடிச்சு விழுந்து சிக்குண்ட தமிழ்..! பிள்ளைகளின் பாடப்புத்த உலகில் - ஓர் அகங்காரத் தமிழ்..! தமிழின் மீது உண்மையாகப் பற்று கொண்டவரிடம் இருந்து பல கேள்விகள் பிறக்கின்றன. கோடிக்கணக்கான சாதாரண மனிதனின் தமிழ் எது? அவனைத் தூக்கி நிறுத்தும் தமிழ் எது ? விரிவான உலகை அவனுக்குப் பிரியமாய் அறிமுகம் செய்யும் தமிழ் எது ? உலகில் கவனத்தை நம் பக்கம் திரும்ப வைக்கும் ஆய்வுத் தமிழ் ஏன் வளரவில்லை..? ஆய்வுத் தமிழைப் பின்னுக்குத் தள்ளி ஆர்ப்பாட்டத் தமிழ் ஏனிப்படி வெளிச்சமும் சத்தமுமாய்த் திரிகிறது..? ஓர் அரசாங்கத்துக்கு இதிலென்ன இவ்வளவு ருசி..? நானொரு தமிழாசிரியன், பாடப்புத்தகங்களின் வழியே மாணவர்களைச் சந்தித்து வந்தவன். பாடப்புத்தகங்கள் இரு பிழையான அளவு கோல்கள் கொண்டே உருவாக்கப்பட்டு வந்துள்ளன

*ஒன்று - திணிப்பதுதான் கல்வி..*
*இரண்டு - கடினமாக இருப்பது தான் தரம்*

பாடப்புத்தகக் குழுவில் இருப்பவருக்குத் தெரிந்ததை அல்லது அவர் விரும்பியதைக் கொட்டத்தான் பாடப் புத்தகம்..! மாணவரின் மொழி - மாணவரின் விருப்பம் - மாணவரின் உலகம் குறித்துப் பாடப்புத்தகம் கவலைப் பட்டதே இல்லை. பாடப் புத்தகம் -அகங்காரத்தின் வடிவம்..! ஆசிரிய அகங்காரம், மொழி அகங்காரம், அதிகார அகங்காரம் மூன்றும் இணைந்த வடிவம். இந்த அகங்காரம், தமிழின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு விடாதபடி காலமெல்லாம் பிள்ளைகளைப் பிரம்பேடுத்துக் துரத்தியிருக்கிறது. 'பல்லுக்கு மெதுவாய்ப் பணியாரம் கொடுப்போம்' என்று தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பாட்டாக வைத்த கோரிக்கை சாதாரணமானது அல்ல, அது கல்வி உலகில் உயிர்த்துடிப்பு..! செயல்வழிக் கற்றல் வந்த பின்னர் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளுக்கான பாடப்புத்தகங்கள் ஒழிக்கப்பட்டன. அதற்கு முன்னால் இருந்த பாடப்புத்தகங்களைப் பார்க்க வேண்டுமே..! கொடுமை..!

முதல் வகுப்புத் தமிழ்ப்பாடத்தில் அகவை, ஞாலம், நெய்தல், நன்னூல் போன்ற பல சொற்கள் அறிமுகம். முதல்வகுப்பு மாணவனுக்குக் கற்பிக்கிற சொற்களா? இவை? 'ஞாலம்' என்ற சொல்லுக்கு அறிவு என்று ஓர் ஆசிரியர் வகுப்பில் பொருள் சொன்னதை நானே கண்கூடாகப் பார்த்தேன்! அகவை என்பது வயதைக் குறிக்கும் சொல் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? இந்தச் சொற்களை அறிமுகப்படுத்திய பாடத்திட்டக் குழுவினரே வீட்டிலும் வீதியிலும் பேசாத சொற்கள் இவை. இந்தச் சொற்களைத் திணிப்பதற்குச் சின்னஞ்சிறு பிள்ளைகளின் பிஞ்சு மூளைகள் தானா கிடைத்தன? திணிப்பது அகங்காரம் அல்லவா? முதல் வகுப்பு புத்தகத்தில் இருந்த மற்றொரு அநீதி 'ஆத்திசூடி!' முதல்வகுப்பு மாணவனுக்கான உபதேசம்- அறஞ் செய விரும்பு! குழந்தைக் கல்வியாளர்கள் இதை ஒரு வன்முறை என்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன் மதுரையில் பள்ளி ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசினேன். அப்போது முதல் வகுப்பு மாணவனுக்கு ஆத்திசூடி தேவையா என்று கேட்டேன். தேவை! தேவை!

ஆசிரியர்கள் உரத்த குரல் எழுப்பினார்கள். காரணம் கேட்டேன். ரொம்ப எளிமையான முறையில் சொல்லப்பட்ட அறம் என்றார்.ஓர் ஆசிரியை அவரிடம் இயல்வது கரவேல் என்றால் என்ன பொருள்? என்றேன். சொல்லச் சிரமப்பட்டார்.

'கரவேல்' என்ற சொல்லுக்கான பொருள் அந்தக் கூட்டத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கே தெரிந்திருக்கிறது. உடையது விளம்பேல் என்ற வரிக்கு ஓர் ஒருமித்த பொருளை அன்று ஆசிரியர் கூட்டம் தரவில்லை. வீண் குழப்பமே மிகுந்தது. 'ஙப்போல் வளை'யும் அப்படித்தான்.! ஆத்திசூடி எளிமையானதும் அல்ல. ஞானத்தின் தொகுதியும் அல்ல தையல் சொல் கேளேல்.! (பெண் பேச்சைக் கேட்காதே) என்று சொன்ன நூல் தான் ஆத்திசூடி. நியூசிலாந்தில் மாவோரி ஆதிவாசிக் குழந்தைகளுக்குத் தொடக்கக்கல்வி தந்த ஸில்வியா என்ற ஆசிரியையின் அனுபவம் (teacher என்ற நூல்)

இங்கு குறிப்பிடத்தக்கது. தன் விருப்பப்படி கல்வியைத் தொடங்காமல் ஒவ்வொரு மாணவரிடமும் தனித்தனியே உரையாடி ஒவ்வொருவருக்கும் உரிய ஆரம்பச் சொற்களைத் தேடியவர் அவர். ஒரு மாணவிக்கு 'அம்மா' ஒரு மாணவனுக்கு 'துப்பாக்கி' ஒரு மாணவனுக்கு -'கார்' அவர்களுக்குள் வட்டமிடும் சொற்களைக் கொண்டே அவர்களுக்கான கல்வியைத் தொடங்கினார் ஸில்வியா மிகவும் பொறுமையும் அக்கறையும் இருந்தால் மட்டுமே கல்வியில் இப்படிப்பட்ட தொடக்கத்தைப் தரமுடியும்.

இன்றைக்கு முதல் முறையாகச் சமச்சீர்க் கல்வி முதல் வகுப்புத் தமிழ் பாடநூல் பிற்போக்கான பல தடைகளைத் தாண்டி கொஞ்சம் முன்னேறியிருப்பது மகிழ்ச்சியை தருகிறது. சமச்சீர்க்கல்வி ஆறாம் வகுப்புத் தமிழ்ப்பாட நூல் உருவாக்கத்தில் பங்கேற்றவர்களுள் நானும் ஒருவன் ஆசிரியர்கள் மட்டுமல்ல, எழுத்தாளர்கள், சமூக சிந்தனையாளர்கள் எனப் பல தரப்பினரும் பாட நூல் உருவாக்கத்தில் பங்கேற்றிருந்தார்கள். பாடநூல் இது முதல் அனுபவம்.

ஆசிரியரின் பிடியைக் கொஞ்சம் தளர்த்தி மாணவரை நோக்கிப் பாடப்புத்தகத்தை நகர்த்துவது புத்தகத் தயாரிப்பின் அடிப்படை நோக்கமாக இருந்தது. பாடப் பொருள், மொழி, இலக்கணம், திறன் என எல்லாமே வகுப்பறையில் ஆசிரியரின் இடம் குறைந்து மாணவரின் இடம் அதிகரிக்க வேண்டும் என்பது புத்தக தயாரிப்பில் உழைத்தவர்களின் விருப்பமாக இருந்தது. புத்தக உருவாக்கம் கமுக்கமாக நடைபெறவில்லை. அது ஒரு திறந்த மேடையாக இருந்தது. படிக்கவும் கருத்து தெரிவிக்கவும் ஒரு பொது அழைப்பு இருந்தது. பலரும் வந்து படித்துப் பார்த்துத் தட்டிக் கொடுத்துச் சென்றார்கள் ஆனால், ஒரு சில ஆசிரியர்களின் இருந்து மனத்தாங்கலான ஒரு கருத்து வந்தது. பாடப் புத்தகம் இத்தனை எளிமையாக இருந்தால் ஆசிரியர் எதற்கு? என்று அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். இன்று புத்தகம் முடிந்து வெளிவந்த பிறகு நோட்ஸ் போடும் நிறுவனத்தார் ஒருவர் என் வீடு தேடி வந்து கேட்டார். ''புத்தகம் இவ்வளவு எளிமையாக இருந்தால் எப்படி நோட்ஸ் போடுவது? இரண்டு கேள்விகளுக்கும் இடையே ஓரங்குல தூரமும் இல்லை. சமீபத்தில் ஒரு நாளிதழில் ஆறாம் வகுப்புத் தமிழ்ப்பாட நூல் குறித்து மதிப்பிட்டிருந்தவர். நூல் மிக எளிமையாக இருக்கிறது எனக் குறைப்பட்டிருந்தார். 'மலிவு விலையில் கூறு கட்டி விற்கப்படும் வாழைப்பழம்' என அவர் அங்கலாய்த்திருந்தார். ஆசிரியரின் தேவையும், இருந்தால்தான் அது கனமான - தரமான கல்வி என்பது இவர்கள் அபிப்பிராயம்.

தமிழ்நாட்டு வகுப்பறைகளில் மாணவரின் வாசிப்புத் திறன் பலவீனமாக இருக்கிறது என்பதுவே, சில மாதங்களுக்கு முன் வெளியான 'அஸர் அறிக்கை' யில் கிடைக்கும் உண்மை. சில ஆண்டுகளுக்கு முன் நடந்த அறிவொளியின் போதும் இதே அனுபவம் தான். ஆறாம் வகுப்பில் படித்த மாணவனுக்கு அறிவொளிப் பாடத்தை வாசிப்பது சிரமமாக இருந்தது. அவன்தான் கிராமங்களில் எங்களுக்குக் கிடைத்த தொண்டன்! எளிமை என்பது எவருடைய தனிப்பட்ட விருப்பமும் அன்று, அது காந்தத்துண்டாய் ஈர்க்கப்படவும், இது அத்தியாவசியத் தேவை. ஆறாம் வகுப்புப் பாடநூல் உருவாக்கத்தின் இறுதிக் கட்டத்தில் சிறுசிறு தடைகள் முளைக்க ஆரம்பித்தன. பிழைகளைத் திருத்த வந்தோர் திருத்தங்களை வலியச் செய்தனர். அகராதி அகரமுதலி ஆனது. பெரியார் ராமசாமி பெரியார் இராமசாமி ஆனார். ர,ல, இரண்டையும் இன்று மொழி முதல் எழுத்துக்களாக கொள்வதில் தடையே இல்லை என்று மொழியியல் அறிஞர்கள் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகின்றனர். பிழைதிருத்துபவர்கள் நவீன உரையாடல்களைக் காதில் வாங்காதவர்கள்.!

மாணவர்களை வகுப்பறையில் பேசவைக்கும் நோக்கில் துணைப்பாடமாக வைக்கப்பட்டிருந்த நாட்டுப்புறக் கதைகள் ஒவ்வொன்றாய்ப் பறிபோயின. நாட்டுப்புறக் கதை தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் இல்லையா? இல்லையாம்..! வடமொழி கலவாமல் பேசுவதும் எழுவதும் தான் தமிழ்ப்பண்பாடாம்..! கேலிக்கூத்து..! வேரின் துடிப்பு' என்ற அற்புதமான நாட்டுப்புறக் கதையை நீக்கி விட்டு விவேகானந்தரைப் பாடமாக வைத்தார்கள்..! பாடப்புத்தகம் இன்னும் கனமாக வேண்டும் என்பதற்காக 15 ஆக இருந்த திருக்குறள் பாடல்களை 20 ஆக ஆக்கினார்கள். எல்லாவற்றுக்கும் மேலான, 'நாட்டுப்புறம்' என்று வருகிற இடத்தில் எல்லாம்,

நாட்டுப்புரம் எனத் திருத்தி, கடுமையான உழைத்து உருவாக்கப்பட்ட இப்பாடப்புத்தகத்துக்குத் தீராத களங்கத்தை உண்டு பண்ணினார்கள். இத்தனைக்குப் பிறகும் மாணவர்கள் விரும்பிக் கையிலெடுக்கும் விதத்தில் - ஆர்வமுடன் வாசிக்கும்படி - சமச்சீர்க்கல்வி ஆறாம் வகுப்புத் தமிழ்ப் பாடப் புத்தகம் வந்திருக்கிறது. தமிழ்ப்பாடப் புத்தகம் இவ்வளவு அழகான தோற்றத்துடன். இதுவரை வந்ததும் இல்லை. மாணவர்களை நோக்கிய அற்புதமான நகர்வு இது.

ஆனால், நகர்வு தொடருமா? தடுத்து நிறுத்தப்பட்டு, ஆசிரியர் கையிலேயே புத்தகம் அடைக்கலம் ஆகுமா என்பதேல்லாம் அடுத்தடுத்த பாடப்புத்தகங்கள் வரும் போது தெரியும்.

**எமது நாட்டுப் பாட நூல்களும் இந்த நகர்வில் மேம்படுத் தப்படுமா? மேம்படுத்தப்பட வேண்டுமென்பதே அனைவரதும் அவாவாகும்.**

# சிறுவர் மேம்பாடு சார்ந்த சமுதாய ஆய்வு என்னும் எண்ணக்கரு

நன்றி: உரையாடல் மூலம் பிள்ளைகளுடன் உறவாடல்

## அறிமுகம்

சிறுவர் மேம்பாடு சார்ந்த சமுதாய ஆய்வு - உரையாடல் மூலம் பிள்ளைகளுடன் உறவாடுவதற்கான ஒரு மார்க்கம் என்னும் பொருள் எந்த நூலுக்குமே வசப்படாத ஒன்றாகும். ஒரு வேளை, சமுதாய ஆய்வு என்பது பொருத்தமாயிருக் கலாம். இதைக் கூட நாம் சற்று விரிவாக விளக்குதல் அவசியம். இந்தச் சுருக்கமான அறிமுகவுரையிலே இந்தத் தலைப்பை மூன்று கூறுகளாகப் பகுத்துக் காட்டுவோம். சமுதாய ஆய்வு, சிறுவர் மேம்பாடு, சமுதாய உரையாடல் என்பனவே இம் மூன்றுமாம்.

இந்தக் கட்டத்திலே, இந்த நூல் சிறுவர்களின் நிலையைச் சீராக்கும் நோக்கத்தைக் கொண்ட நடைமுறைப் பாவனைக்கானது என்பதையும், அதன் அடிப்படைக் கூறுகளை முறையாக விளங்கிக் கொள்ளாவிட்டால் எண்ணக் கருவைச் செவ்வனே பயன்படுத்துதல் இயலாதென்பதையும் வலியுறுத்திச் சொல்வது அவசியமாகிறது.

## சமுதாய ஆய்வு

ஆங்கிலத்தில் Community Diagnosis என்னும் சொற் றொடரையே இங்கு நாம் சமுதாய ஆய்வு எனக் குறிப்பிடுகிறோம். ஆங்கில மொழி கற்ற சுகாதார ஊழியர் பலர் மேற்படி சொற்றொடரைக் கேள்விப்பட்டிருப்பார்கள். குறிப்பாக, பேராசிரியர் எவ்.ஜே. பென்னெற் என்பாரின் Community Diagnosis and Health Action என்னும் நூலில் இந்தச் சொற்றொடர் காணப்படுகின்றது. அந்த நூல் எனது நூலுடன் சேர்த்துப் படிக்க உகந்த தொன்றாகும்.

இந்த நூலில் சமுதாய ஆய்வு என்னும் சொற்றொடர் சிறுவர் மேம்பாடு தொடர்பான முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுதற்குப் பயன்படுகின்றது. இது வைத்தியத் துறை சார்ந்த விடயமல்ல. எனவே குறுகிய வைத்திய நோக்கு இங்கு கைவிடப்பட்டுள்ளது. ஆகவே சுகாதாரத்துறை ஊழியர்களை விடவும் பரந்து பட்ட வாசகர்களுக்கு இந் நூல் பயன்படும். குறிப்பாக, ஆய்வு என்னும் சொல்லானது, சிறுவர் மேம்பாடு சார்ந்த நேரடி அம்சங்களையும் எதிர்மறை அம்சங்களையும் கண்டறிதல் என்னும் நோக்கில் உபயோகிக்கப்படல் வேண்டும்.

எல்லாச் சமுதாயங்களும் தமது பிள்ளைகள் மீது பெருமளவு முதலீடு செய்கின்றன. ஏனென்றால் செம்மையான எதிர்காலத்தின் நம்பிக்கையாகவும் அத்திவாரமாகவும் அவர்கள் விளங்குகிறார்கள். இந்த முதலீட்டின் தன்மையையும் வீச்சையும் விளங்கிக் கொள்ளுதல் அவசியம்.

இன்று வளர்ச்சி குன்றிய நாடுகள், வளம் பெற்ற நாடுகள் இரண்டிலுமுள்ள பெரும்பாலான சமுதாயங்கள் வெகு துரிதமான மாற்றங்களை எதிர்நோக்குகின்றன. இவற்றிற் பல, சிறுவர்களின் நிலைமைக்குச் சாதகமான வையல்ல. இந்த அம்சங்கள் பற்றிய செம்மையான அறிவும் உணர்வும் ஆய்வின் மற்றுமொரு பகுதியாக விளங்குகிறது.

இறுதியாக, பிள்ளைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் எண்ணப் போக்குகளும் பழக்கவழக்கங்களும் எல்லாப் பண்பாடுகளிலும் பாரம்பரியங்களிலுமே காணப்படுகின்றன. பிள்ளைகளின் நலன்கள் பெரியவர்களின் சமுதாயத்துடைய (அல்லது அதன் ஒரு பகுதியுடைய) உடனடியான தேவைகளிலிருந்து வேறுபடும் போது, அல்லது விருத்தியுறும் பிள்ளையின் முக்கிய தேவை தொடர்பான சில அம்சங்களைச் சரிவர உணர்ந்து கொள்ளாத போது, இவ்வாறு ஏற்படுவது உண்டு. சிறுவர் மேம்பாடு சார்ந்த சமுதாய ஆய்வில் இத்தகைய அறிவைப் பெறுதலும் ஒரு பகுதியாக அமைதல் வேண்டும்.

'சமுதாயம்' என்னும் சொல்லும் ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

மக்கள் அனைவரும் தாம் ஒரு பெரிய குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்துள்ளார்கள். இந்தப் பெரிய குழுவானது பூகோள, கலாசார அரசியல், சமய அல்லது வரலாற்று வாரியான வார்த்தைகளால் விவரிக்கப்படுகிறது. இந்தப் பெரிய குழுவே சமுதாயம் எனப்படுகிறது.

ஆரோக்கியம் தொடர்பான ஆராய்ச்சியில் வேறொரு விளக்கம் தரப்படுகிறது.

ஒரு சமுதாயம் என்பது குறிப்பிட்ட ஒரே பகுதியில் வாழ்ந்து, ஒரே அடிப்படை அரசாங்கங்களையும் அமைப்புகளையும் பகிர்ந்து கொள்ளும் மக்கள் குழுவாகும்.

குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் யார் யார் என்பதை நிறுவுதற்கு வெவ்வேறு மக்களுடன் உரையாடுவதன் மூலம் மேலும் தெளிவு பெற்றுக் கொள்ளலாம்.

என்றாலும் சமுதாய ஊழியர்களே இந்த நூலை பெரும்பாலும் பயன்படுத்துவர் என்பதால் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யார் என்பதைப் பற்றி அவர் தெளிவாக அறிந்திருப்பார்.

ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் யார் யார் என்பதைத் தெளிவுபடுத்தியதும் அவர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். இது விடயத்தில் சுகாதார ஊழியர்கள், சமுதாயத் தலைவர்கள், அரசியல் வாதிகள் அல்லது மகளிர் குழுக்கள் போன்ற வெவ்வேறு சமுதாய அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோரின் அறிவு பெரிதும் பயன்படும்.

சிறுவர்கள் நிலைபற்றி தனி ஆள்களும் குடும்பங்களும் விவரங்கள் கொடுத்துதவத் தக்கவர்களாய் இருப்பர். ஒரு சமுதாயம், அது அமைந்துள்ள பிராந்தியம் அல்லது நாட்டின் அம்சங்களுக்கு அமைந்ததாக இருக்கும். இந்த அம்சங்கள் பிள்ளைகளின் நிலையைப் பாதிப்பதுண்டு. பிள்ளைகளின் நிலையை விளங்கிக் கொள்வதற்கு இந்தப் பாதிப்புகள் பற்றிய உணர்வு அவசியம்.

இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ள உதாரணங்கள் தெட் பார்ணா அமைப்பு இயங்கி வரும் சமுதாயங்களிற் சேகரிக்கப்பட்டவை. லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய இடங்களில் இச் சமுதாயங்கள் அமைந்துள்ளன. சமுதாய ஆய்வு பற்றிய நடைமுறை, வளம்பெற்ற நாடுகளிலும் பயன்படுத்தக் கூடியனவே என்பதில் ஐயமில்லை.

**சிறுவர் மேம்பாடு சார்ந்த...**

மனித மேம்பாடு என்பது வளர்ச்சியும் முதிர்ச்சியுமான ஒரு படிமுறையாகும் கருவில் உருவான காலத்திலிருந்து வாழ்க்கைச் சுழல் முடிவடையும் வரை நடைபெறுமொன்று. சிறுவர் மேம்பாடு கருவில் ஆரம்பமாகி சுமார் 17 வயதளவில், உடல் வளர்ச்சி முடிவுறும் வரையான காலப் பகுதியை, விவரிக்கிறது.

இவ்வாறாக, மேம்பாடானது தொடர்ச்சியான மாற்றத்தின் படிமுறையாகும் வயதுடன் தொடர்புடையது; முன்னுரைக்கத் தக்க கிரமமான ஒழுங்கில் நிகழ்வது.

இந்த மாற்றங்கள் முதன் முறை நிகழ்ந்து விட்டால் பெரும்பாலும் பின்னடைவற்றவை. அநேக உள்ளூர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதான நோக்கங்களில் ஒன்று சிறுவர் மேம்பாடாகும். இதற்கு நன்கு நிறுவப்பட்ட பல காரணங்கள் உள:

1. ஒரு சமுதாயத்தின் வருங்கால முன்னேற்றத்தின் அடிப்படை அம்சம் அதன் பிள்ளைகளின் இயல்பான, ஆரோக்கியமான வளர்ச்சியாகும்.
2. எதிர்க்காலத்தின் மூலாதாரமான பிள்ளையின் முன்னேற்றத்தைப் புறக்கணித்தால், மூல வளங் களையும் விருத்தி செய்தல் அர்த்தமற்றதாகிவிடும்.
3. இன்றைய பிள்ளைகளே நாளைய பெற்றோர்; பெற்றோர் என்னும் பாத்திரத்தைத் தாங்குதற்கும் புதிய தலைமுறையினருக்குச் செம்மையான வாய்ப்பினை வழங்குதற்கும் ஆனந்தமும் ஆரோக்கிய முள்ள பிள்ளைப் பருவமே சிறந்த முன்னேற்பாடாகும்.

பிள்ளைப் பருவமென்பது தீவரமான அறிவும் வளர்ச்சியும் செயற்பாடும் கொண்ட காலம். வளர்ச்சிக்கான சாத்தியப்பாடு உச்ச நிலையில் இருக்கும் காலம் அதுவே, ஆகவே, இந்த வாய்ப்பு விரயமாகாமல் அல்லது புறக்கணிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். பிள்ளைப் பருவம் அறிவும் ஆற்றலும் வளரும் காலமாகும்.

1. பிள்ளைகள் முற்று முழுதாகப் பெற்றோரிலேயே தங்கியிருப்பதால் பெரியவர்களின் செயல்கள் அல்லது செயலற்ற போக்குகள் அவர்களைப் பாதிக்கின்றன. பெரியவர்கள் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகளைப் புறக்கணிப்பதன் காரணமாக பிள்ளைகளின் மேம்பாடு பெரிதும் தடைப்படுகிறது. சிறுவர் மேம்பாட்டை ஊக்குவிப் பதானது, தம் பாலப் பருவ வாய்ப்புகளை விருத்தி செய்தற்குப் பிள்ளைகளுக்குள்ள உரிமைகளைப் பேணிக் காப்பதாகவும் அமையும்.
2. முகவரகங்களும் சமுதாய ஊழியர்களும், மேம்பாட்டுக்குப் பெரிதும் இடையூறான அனுபவங் களைப் பெற்ற சிறுவர்களின் நலன்களை பேண முற்படுவது வழக்கம், இதனால், சிறுவர் மேம்பாடு என்னும் விடயத்தில் அதிக கவனஞ் செலுத்துதல் பொருத்தமுடையதாகிறது. தாய்ப்பாலுட்டுதல், தாய்க்கும் பிள்ளைக்கும் பத்திரமான உறவு ஏற்படுதல், ஆரோக்கியமும் ஆனந்தமுமுள்ள தாய், போதிய உணவு போன்ற பல அம்சங்கள், சிறுவர் மேம்பாட்டில் ஆதிக்கஞ் செலுத்துகின்றன.

சிறுவர் மேம்பாட்டின் அடிநாதமாக விளங்குவது உயிர் பிழைத்திருத்தல் அல்லது உய்வு ஆகும். எனவே, வளர்முக நாடுகளின் செயற்திட்டங்கள் இது விடயத்தில் கவனஞ் செலுத்துகின்றன. என்றாலும், உயிர் பிழைக்கும்

பிள்ளை இயல்பான வளர்ச்சிப் பெறும் என்பது நிச்சயமற்றதாகும்; அத்துடன், வளர்ச்சி குன்றினால் பிழைத்திருக்கும் வாய்ப்பும் மோசமடையும்.

தனி ஒரு பிள்ளையின் முன்னேற்றப் பாதையைப் பல அம்சங்கள் நிர்ணயிக்கின்றன. மேலும், இவை வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

மேம்பாடு தொடர்பான பணியில் இந்த அம்சங்கள் உரிய இடத்தைப் பெறுவதில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம்;

1. அநேகமான மேம்மாட்டுப் பணிகள் சிறுவர்களை மையப்படுத்துவதாக அமைவதில்லை. ஆகவே, சிறுவர் மேம்பாடைப் பாதுகாக்கும் அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை.
2. சிறுவர் மேம்பாட்டில் தாக்கம் உண்டாக்கும் அம்சங்கள் பற்றிய விஞ்ஞான அறிவென்பது ஒரு புதிய துறையாகும். இதனால் இந்தத் தாக்கங்கள் சிலவற்றின் முக்கியத்துவம் அறியப்படா திருக்கலாம்.
3. மனித மேம்பாட்டில் முக்கியமான சில அம்சங்கள், உதாரணமாக பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமுள்ள பாசமும், நேசமும் அளந்தறிய முடியாதன. இவை கிடைக்காத போது ஏற்படும் விளைவுகளையே நாம் காணக் கூடும்.
4. வசதி வாய்ப்பற்றும் புறக்கணிக்கப்பட்டும் வளரும் பிள்ளைகள் எத்தகைய பாதிப்புக் குள்ளாகிறார்கள் என்பதை சிறுவர் மேம்பாடு தொடர்பான ஆராய்ச்சிகள் வெகு தெளிவாகக் காட்டுகின்றன. அவர்களின் அறிவாற்றலும் உடல் வளர்ச்சியும் பங்கமடைகின்றன. இதனால் அவர்களின் ஆளுமை, சமூகச் செயற்றிறன்கள் என்பனவற்றில் அழியாத காயங்கள் ஏற்படலாம். வழக்கமாக இத்தகைய விளைவுகள் பல வருட காலமாகத் திரட்சி பெற்று, முதிர்ச்சியடையும். ஆரம்பப்பருவத்தில், சமுதாயத்தில் ஆக்கபூர்வமான முறையில் செயற்படும் ஆற்றலற்றிருக்கும் போதோ, அந்தச் சமூகத்தின் சமூக, ஒழுக்க நியதிகளுக்கு அமைந்துவாழும் இயல்பை இழக்கும் போதோ, வெளிப்படையாகத் தோற்றமளிக்கின்றன. இவ்வாறு காலம் கண்டறிவ தென்பது சிரமமான காரியமாகும்.

சிறுவர் மேம்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் பல அம்சங்கள் உலகப் பொதுவானவை. மேம்பாட்டுத் துறை ஊழியர்கள், சிறுவர்களையும் அவர்களின் தேவைகளையும் விளங்கிக் கொள்வதற்கு இந்த அம்சங்கள் பற்றிய அறிவு கைகொடுத்து உதவுமென நம்புகிறோம். அத்துடன் பிள்ளைப் பிராயத்தின் அறிவையும் ஆற்றலையும் நல்ல முறையில் ஆற்றுப்படுத்துதற்கேற்ற நடவடிக்கைகளைச் சமுதாயத்தில் மேற்கொள்வதற்கும் இந்த அறிவு உதவுமென நம்புகிறோம்.

### சமுதாய உரையாடல்

உரையாடல் என்றால் இருவருக்கிடையிலான அல்லது பலருடனான சம்பாசணை என்று பொருள்படும். சமுதாயங்களில் பணி புரிவோர், அங்குள்ள மக்களுடனான உறவுகளைப் பல்வேறு உரையாடல்கள் மூலமாகக் கட்டி எழுப்புவார்கள். இந்த உரையாடல்கள் சமுாயத்தின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கலாம். அவர்கள் புதிய விடயங்களையும் அறிந்து கொள்ளல் அவசியம். சமுதாயத்தினரோடு தகவல்களைப் பரிமாறிக் கொள்வர்; தனி மணிதர்கள், குடும்பங்கள் ஆகியவற்றின் சுக துக்கங்களிலும் பங்கு கொள்வார்கள்.

பெரும்பாலானோர்க்குப் பிரியமான ஒரு விடயம், தம் குழந்தைகளைப் பற்றிப் பேசுவதாகும். எனவே, மக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்குச் சிறந்த வழி அவர்களின் பின்ளைகளைப் பற்றி உரையாடுதலே என்றால் மிகையாகாது.

சிறுவர் மேம்பாடு தொடர்பான உரையாடல்கள் மூலமாக, பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கு ஊறு விளைக்கும் பல்வேறு அம்சங்களையும், பிள்ளைகள், பெற்றோர், சமுதாயத்தின் ஏனைய உறுப்பினர்கள் ஆகியோரின் நோக்கிலே கண்டறிய விரும்புகிறோம்.

இவ்வாறான உரையாடல், சம்பந்தப்பட்டவர்களுடனான புரிந்துணர்வையும் பிணைப்பையும் வலுப்படுத்தியிருக்கு மானால் அதுவே அதன் பயன் எனக் கொள்ளலாம்.

எமது இறுதி நோக்கம் உரையாடல் மூலமாக அறிவை விருத்தி செய்தலே. அப்போது தான் அனுகூலமானவர்களாக அமையும் வகையில் அவர்களின் எண்ணப் போக்குகள், தீர்மானங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றில் தாக்கம் ஏற்படுத்துதல் சாத்தியமாகும்.

உரையாடலை எப்படி நிலை நாட்டலாம் என்பது 4 ஆம் அத்தியாயத்தில் ஆராயப்படுகிறது.

**உசாத்துணை நூல்கல்:**


1. Bennet F.J. Community Diagnosis and Helth Action. London: Macmillan, 1979.
2. Hubley J.H. Health Related Behavioural Change, Health Education Research, Vol 4, 1986.

# கற்றல் கற்பித்தலுக்கான கணினி அறிவும் அதன் அவசியமும்

**முகவுரை**

இன்றைய சூழலில் உலகமே சிறு கிராமமாக மாறிவிட்டது. வெவ்வேறு நாடுகளில் வாழ்வோரும் இணையமேடையில் ஒன்றாகக் கூடித் தங்கள் கருத்துக்களை மொழிப்பாகு பாடின்றிப் பகிர்ந்து கொள்கிறார்கள். அறிவுக்கு மொழி தடையல்ல என்ற சிந்தனை மேலோங்கியுள்ளது. கணினியும் இணையமும் அடைந்துவரும் வளர்ச்சியை உற்றுநோக்கும்போது, எதிர்காலத்தில் உலகத்தின் ஒரே மொழி கணினியின் குறியீட்டு மொழியாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. அதனால் கணினியின் மொழியைத் தமிழர்கள் கற்றுக்கொள்வதும் தம்மொழியைக் கணினிக்குப் புரியவைப்பதும் தமிழர்களின் அடிப்படைக் கடமையாக அமைகிறது. இன்றைய வழக்கில் உள்ள மொழிமாற்றுத் தொழில்நுட்பங்கள் வழி எந்த மொழியை வேண்டுமானாலும் எந்தமொழியிலும் மாற்றிப் படிக்கமுடியும். அதனால் அவரவர் தாய்மொழியில் தம் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. அந்த அடிப்படையில் இன்று நாம் பயன்படுத்தும் கணினிகள் எந்த அளவுக்குத் தமிழ் பேசுகின்றன என்பதை எடுத்துரைத்து நாம் செய்யவேண்டிய கடமைகளைக் கோடிட்டுக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது,

**இணையத்தில் ஆதிக்கம் செலுத்தும் மொழிகள்**

ஆங்கிலம், சீனம், ஸ்பானியம், ஜப்பானியம், போர்த்துக்கீசியம், ஜெர்மன், அராபிக், பிரெஞ்சு, இரசியன், கொரியன் ஆகிய மொழிகள் இன்றைய இணையத்தில் ஆதிக்கம் செலுத்தும் முதல் பத்து மொழிகளாக உள்ளன. இந்தப் பட்டியல் நமக்கொரு உண்மையைப் புலப்படுத்திச் செல்கிறது. சிவப்பு என்பது அழகல்ல நிறம்,ஆங்கிலம் என்பது அறிவல்ல மொழி என்ற பொன்மொழியே நினைவுக்கு வருகிறது. கணினியின் மொழி ஆங்கிலம் மட்டுமல்ல, கணினியைப் புரிந்துகொண்ட மொழிகளை யெல்லாம் கணினியும் புரிந்துகொள்ளும்என்பது நம் புரிதலாக இருத்தல்வேண்டும். கணினிக்கு 01 என்பதே தாய்மொழி என்பதால் எந்தமொழியையும் சொல்லும் விதத்தில் சொன்னால் கணினி புரிந்துகொள்ளும். நிரல் மொழிகளை அதற்குப்புரியும் விதத்தில் கட்டளையாகக் கொடுத்தால் நம் தமிழ்மொழியைக்கூடக் கணினி அழகாகப் பேசும் என்பது ஒவ்வொரு தமிழரும் உணரவேண்டிய நுட்பமாகும்.

**இயங்கு தளங்களும் தமிழும்**

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தி வந்த காலத்தில் ஒருங்குறி என்னும் எழுத்துரு அதற்கு ஓரளவுக்கு முற்றுப்புள்ளிவைப்பதாக அமைந்தது. இருந்தாலும் பல்வேறு இயங்குதளங்கள் தமிழ் எழுத்துருக்களை ஏற்காத நிலையே நீடித்தது. இப்போது விண்டோசு, லினெக்சு எனப் பல்வேறு இயங்குதளங்களும் தமிழ் எழுத்துருக்களை ஏற்றுக்கொள்கின்றன. கணினியின் இயங்குதளம் குறித்த அடிப்படை அறிவை இளம் தலைமுறையினர் உணர்ந்துகொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

**தமிழ்த் தட்டச்சுப்பலகை**

தமிழ் எழுத்துக்களை ஒருங்குறி முறையில் கணினியில் என்.எச்.எம், அழகி போன்ற மென்பொருள்களின் வழி தட்டச்சு செய்து கொண்டாலும். தட்டச்சுப் பலகைகளெல்லாம் இன்னும் ஆங்கில எழுத்துமுறையில் தான் உள்ளன. தமிழ்த்தட்டச்சுப்பலகை வடிவமைக்கப்பட்டு தமிழர்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டும். இன்று தமிழில் தட்டச்சு செய்வோர் தமிழ்த் தட்டச்சுமுறையிலோ, தமிங்கில முறையிலோ, ஆங்கிலமுறையிலோ தம் கருத்துக்களை வெளியிடுகின்றனர். அதற்கேற்ப தமிழ்த்தட்டச்சுப் பலகைகள் வெளியிட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மென்பொருள்கள்**

இயங்குதளம், உலவி, வேர்டு உள்ளிட்ட ஆபீசு தொகுப்புகள், அடாப் தொகுப்புகள் என நாம் பயன்படுத்தும் பல்வேறு மென்பொருள்களும் இப்போது தமிழ்மொழியை ஏற்றுக்கொள்கின்றன. இருந்தாலும் அதன் கட்டளைகள் யாவும் ஆங்கிலமொழியில் தான் உள்ளன. அதற்குப் பதில் தமிழ்மொழியே கட்டளை மொழியாக இருந்தால் தமிழின் பரவல் இன்னும் அதிகரிக்கும்.

### தமிழ் இணையதளங்கள்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ் இணைய தளங்களைக் காண்பதே அரிதாக இருந்தது. அவையும் தனித்தனி எழுத்துருக்களைப் பயன்படுத்திவந்தன. இப்போது நிறைய தமிழ் இணையதளங்களைக் காணமுடிகிறது. எல்லாம் ஒருங்குறி எழுத்துரு முறையைப் பயன்படுத்துவதால் அவ்வளவு எழுத்துருச்சிக்கல்கள் ஏற்படுவதில்லை. அரசு இணையதளங்கள், பல்கலைக் கழகங்கள் தொடங்கி, நாளிதழ்கள், வாரஇதழ்கள், எழுத்தாளர்கள் என தமிழர்களால் உருவாக்கப்படும் இணையப்பக்கங்கள் யாவும் முழுக்கமுழுக்க தமிழிலேயே வடிவமைக்கப்பட்டுவருகின்றன. தமிழிணையங்களில் தமிழின் செல்வாக்கை எடுத்தியம்ப தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (www.tamilvu.org) விக்கிப்பீடியா (www.ta.wikipedia.org ) என்னும் இரு இணையதளங்களைச் சான்றாகத் தருகிறேன்.

### வலைப்பதிவுகள்

பிளாக்கர், வேர்டுபிரசு உள்ளிட்ட இலவச வலைப்பதிவுகள் வழி இணையதளங்களுக்குப் போட்டியாக நிறைய வலைப்பதிவர்கள் உருவாகியிருக்கிறார்கள. பல்வேறு துறைசார்ந்த இவர்கள் தம் கருத்துக்களை முடிந்தவரை தமிழிலேயே வெளிப்படுத்துகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இன்றைய வலைப்பதிவர்கள் ஒவ்வொருவரும் எவ்விதமான தடையுமின்றித் தம் கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்துவதால் திரைபடத்துறையினர், தொடங்கி அரசியல்வாதிகள் வரை வலைப்பதிவுகளைத் திரும்பிப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

### சமூகத் தளங்கள்

இன்றைய மக்கள் பெரும்பாலான நேரத்தைச் செலவிடும் முகநூல் (www.facebook.com ) டுவைட்டர் (www.twitter.com கூகுள்பிளசு (google), என பல்வேறு சமூகத்தளங்களிலும் தமிழ்ப்பற்றாளர்களால் இப்போது தமிழ் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. அதனால் அந்த தளங்களும் முடிந்தவரை தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் தருகின்றன. இத்தளங்களைப் பயன்படுத்தும் தமிழர்களில் பலரும் ஆங்கிலமொழியிலேயே தம் கருத்துக்களை வெளியிடு கிறார்கள். தமிழர்கள் யாவரும் தம் கருத்துக்களைத் தமிழிலேயே வெளியிட்டால் உலகமே திரும்பிப் பார்க்கக்கூடிய மாபெரும் மொழியாக தமிழ்மொழி திகழும் என்பதைத் தமிழர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

### எழுத்துரு மாற்றிகள்

இத்தனை காலமாக பல்வேறு தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தி வந்ததால் அந்தத் தகவல்களைத் தமிழ் ஒருங்குறி முறைக்கு மாற்றிக்கொள்வதற்காக பொங்குதமிழ் உள்ளிட்ட எழுத்துருமாற்றிகள் பெரிதும் பயன்படுவனவாக விளங்குகின்றன.

### மொழி மாற்றிகள்

தமிழ் எழுத்துருக்களை பிற மொழிகளுக்கு மாற்றவும், பிற மொழியிலுள்ள எழுத்துருக்களைத் தமிழ் எழுத்துருக் களாக மாற்றவும் கூகுள் மொழிமாற்றி உள்ளிட்ட நிறைய தொழில்நுட்பங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. என்றாலும் தொழில்நுட்பமறிந்த தமிழர்களுக்கு அந்த அளவுக்கு இலக்கணம் தெரியவில்லை என்பதால் இன்னும் இவ்வாறு மொழிமாற்றும் போது நிறைய இலக்கணப் பிழைகள் ஏற்படுகின்றன. அதனால் தமிழ் இலக்கணமறிந்தவர்கள் தொழில்நுட்பமும் கற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் இந்த மொழிமாற்றித் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழி தனிச்சிறப்புடையதாக அமையும்.

### அகராதிகள்

தமிழ்ச்சொற்களின் பொருள்களை அறிந்துகொள்ள இன்று நிறைய இணைய அகராதிகள் வழக்கத்துக்கு வந்துவிட்டன. அண்ணா பல்கலை அகராதி, கூகுள் அகராதி, பாப்ரிசிசு அகராதி, கதிர்வேலு அகராதி, மெக்ஆல்பின் அகராதி, தமிழ்டிக் டொட்காம், தமிழ்லெக்சிகன் ஆகியன குறிப்பிடத்தக்க அகராதிகளாகும். சான்றாக விக்சனரி என்னும் இணைய அகராதி 2,58,606 சொற்களைக் கொண்டு விளங்குகிறது.

### சொல் திருத்திகள்

ஆங்கில எழுத்துக்களைத் தட்டச்சுசெய்யும்போது எழுத்துக்கூட்டலைச் சரிபார்த்துப் பரிந்துரைசெய்யும் மேம்பட்ட சொல்திருத்திகள் ஆங்கிலமொழியில் நிறைய உண்டு. அதுபோல இப்போது தமிழ்ச் சொல்திருத்திகளையும் உருவாக்கிவருகின்றனர். அவையெல்லாம் சோதனை முயற்சியிலேயே இருக்கின்றன. இந்தசொல் திருத்திகள் சராசரி மக்களின் பயன்பாட்டுக்கு வரும்போது தமிழின் பரவல் அதிகரிக்கும்.

### மின்னூல்கள்

நிறைய தமிழ்மின்னூல்கள் இணையவெளியில் கிடைக்கின்றன. இபுக் ரீடர் போன்ற தனித்துவமான கண்டு பிடிப்புகளும் சாதாரணமான அலைபேசிகளும் கூட இப்போதெல்லாம் மின்னூல்களை வாசிக்கப்பயன்படுகின்றன. அதனால் எதிர்காலத்தில் இணையவெளியில் நிறைய தமிழ்மின்னூலகங்கள் உருவாகலாம். அதன்வழியே தமிழ் நூல்கள் எல்லாம் கிடைக்க வழிவகைஏற்படலாம். அதனால் நாமும் நம்மாலானவரை நம் துறைசார்ந்த தமிழ் நூல்களை மின்னூலாக்கி இணையத்தில் பதிவேற்றம்

செய்யவேண்டும். சான்றாக சில மின்னூலகங்கள் (http:www.noolaham.org, http:www.chennailibrary.com, http:www.projectmadurai.org )

### ஒலிப் புத்தகங்கள்

இப்போதெல்லாம் புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு யாருக்கும் நேரமிருப்பதில்லை. அதனால் (ஆடியோ புக்) ஒலிப்புத்தகங்கள் நிறையவே பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. தமிழ் இலக்கியங்கள் யாவும் எம்பி3 வடிவில் பதிவு செய்யப்பட்டு குறுவட்டுகளாகவோ, இணையத்தில் பதிவிறக்கம் செய்யும் வசதியுடனோ கிடைக்கின்றன. இதுவரை சங்கஇலக்கியங்கள், தொல்காப்பியம், திருக்குறள் உள்ளிட்ட நீதி நூல்கள் கூட ஒலிப்புத்தகங் களாகக் கிடைக்கின்றன. சான்றாக http:tamilaudiobook. blogspot.in, http:www.itsdiff.com, http:www.tamilvu. orglibrarylibindex.htm ஆகிய இணையதளங்களைக் குறிப்பிடலாம்.

தமிழ்க் காணொளிகள் உள்ளிட்ட காணொளித்தளங்களில் இப்போதெல்லாம் அதிகமாக தமிழ்ப்பதிவுகளைக் காணமுடிகிறது. தமிழ்ச்சொற்பொழிவுகளையும், இலக்கிய மேடைகளையும் இப்போதெல்லாம் காணொளிகளாகப் பதிவேற்றும் பணியையும் தமிழர்கள் செய்துவருகிறார்கள்.

### அலைபேசிகளில் தமிழ்

பெரிய பெரிய கணினி நிறுவனங்களும் இப்போதெல்லாம் கணினி தயாரிப்புகளை ஓரம் கட்டி வைத்துவிட்டு டேப்ளட் பிசி, நோட்புக் பிசி, சிமார்ட் போன் உள்ளிட்ட அலைபேசி தயாரிப்புகளில் இறங்கிவிட்டன. எதிர்காலத்தில் இவைதான் இணையவசதியோடு தகவல்தொடர்புக்கு அதிகமாகப் பயன்படும் என்பது அனைவரின் எதிர்பார்ப்புமாக இருக்கிறது. ஒருகாலத்தில் அலைபேசிகளில் தமிழ்க் குறுந்தகவல் அனுப்புவதே வியப்புக்குரியதாக இருந்தது. இன்று அலைபேசிகளில் தமிழ்ப்புத்தகங்களைப் படிக்க முடிகிறது. தமிழ்வழி இணையதளங்களைப் பார்க்கமுடிகிறது.

### எதிர்காலத்தில் தமிழ்

வானில் உயரத்தில் பறந்துகொண்டிருக்கும் விமானத்தை அதன் ஓட்டுநர், நாம்தான் உயரத்துக்கு வந்துவிட்டோமே பறந்ததுபோதும் என்று ஓட்டுவதை நிறுத்திவிட்டால் என்ன ஆகும்? அதுபோலத்தான் இன்று நம் தமிழின் நிலையும் இருக்கிறது. நாம் இன்று இணையத்தில் அடைந்த வளர்ச்சியே போதும் என்று இருந்தால் நாம் எதிர்காலத்தில் அடையாளம் இழந்தவர்களாகப் போய்விடுவோம். இன்றைய தொழில்நுட்பங்களுக்கு ஏற்புடையதாக நம் தமிழ் மொழியிருக்கிறது என்று நாம் பெருமிதம்கொள்ளும் நிலையில் இவற்றில் பெரும்பகுதி நாம்கடன்பெறும் தொழில்நுட்பங்களாகவே இருக்கிறது என்பதையும் நாம் மறுக்கமுடியாது.

### கலைச்சொல்லாக்கம்

எல்லா அறிவியல்துறைகளையும் தமிழ்மொழியிலேயே படிக்கவேண்டும். அப்போதுதான் புரிதலும், கண்டுபிடிப்புகளும் அதிகரிக்கும் என்பதை உணர்ந்து கடந்த சில ஆண்டுகளாகவே கலைச்சொல்லாக்கங்களை உருவாக்கி வருகிறோம். பிறநாட்டார் கண்டுபிடிப்புகளுக்குத் தமிழில் பெயரிடுவதில் காட்டும் ஆர்வத்தை நாம் கலைச்சொல் உருவாக்கத்தில் காட்டவேண்டும். கணினித்துறையில் அதிகமான கலைச்சொற்களை உருவாக்கி மேற்கண்ட எல்லாத் தொழில்நுட்பங்களையும் தமிழிலேயே வடிவமைக்கும் அளவுக்கு நாம் இன்னும் வளரவேண்டும்.

### தமிழ் எழுத்துக்களை ஒலியாகக் கேட்க

இதுவரை நாம் பார்த்த தொழில்நுட்பக்கூறுகள் யாவும் கணினியில் தமிழ் எந்த அளவுக்கு ஏற்புடைத்தாகவுள்ளது என்றும், தமிழ் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை எடுத்தியம்புவதாக அமைந்தது. இந்த வளர்ச்சியின் மணிமுடியாக ஒரு தொழில்நுட்பம் இப்போது பயன்பாட்டுக்கு வந்திருக்கிறது. http:mile.ee.iisc.ernet.in:8080ttsdemo என்ற இணையதளத்திற்குச் சென்று தமிழ் ஒருங்குறி முறையிலான எழுத்துக்களை நகல் (காப்பி) எடுத்து ஒட்டினால் எம்பி3 என்னும் வேவ் ஒலிக்கோப்பாக அந்த எழுத்துக்களைப் பதிவிறக்கிக் கேட்டுமகிழமுடியும். இந்தநுட்பம் ஆங்கில மொழியில் பயன்பாட்டுக்கு வந்து பல ஆண்டுகளாகி விட்டாலும் இப்போது தமிழுக்கும் ஏற்ப வடிவமைக்கப் பட்டிருக்கிறது என்பது பெருமிதம்கொள்ளத்தக்கதாக அமைகிறது.

### தமிழர்களின் சிந்தனைக்காக.

நம் தமிழ்மொழி தொன்மையானது, தொடர்ச்சியான இலக்கிய, இலக்கண மரபுடையது என்றாலும் அறிவியல் துறையில் கொஞ்சம் பின்தங்கித்தான் இருக்கிறது. சான்றாக, 134 கோடி மக்கள்தொகை கொண்ட சீனர்களில் 38 கோடிபேர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். 120 கோடி மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் இணையத்தைப் பயன்படுத்துவோர் 6 கோடிப் போ்தான் உள்ளனர். அதனால் நம் வீட்டில் இருக்கவேண்டியது தொலைக்காட்சியா? கணினியா? என்பதை ஒவ்வொரு தமிழர்களும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

எதிர்காலத்தில் ஒரு தொழிற்சாலையில் இருவர் மட்டும்தான் வேலைபார்ப்பார்கள். ஒருவர் காவல்காரர், இன்னொன்று நாய். காவலருக்கு வேலை அங்கு இருக்கும் கணினிகளெல்லாம் ஒழுங்காக வேலைசெய்கின்றனவா?

என்று பார்ப்பது. அவர் உள்ளே சென்று எந்தக் கணினியையும் தொடாமல் இருக்கிறாரா? என்று பார்ப்பது நாயின் வேலை என்றொரு கணிப்பு உள்ளது. வள்ளுவர் இன்று இருந்திருந்தால்..

> *சுழன்றும் கணினி பின்னது உலகம் அதனால்*
> *உழந்தும் கணினியே தலை*
>
> *கணினி கற்றுவாழ்வாரே வாழ்வார் மற்லாம்*
> *தொழுது அவர்பின்செல் பவர்*

என்று பாடியிருப்பார்.

**முடிவுரை**

★ இணையத்தில் ஆதிக்கம் செலுத்தும் மொழிகள் வரிசையில் இப்போது தமிழ் இல்லை என்றாலும் அதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ள மொழியாகத் தமிழ் விளங்குகிறது.

★ இப்போதுள்ள இயங்கு தளங்கள் தமிழ் மொழியை ஏற்றுக்கொள்கின்றன. இருந்தாலும் இயங்கு தளங்களுக்கான துறையில் நாம் இன்னும் குழந்தை நிலையில்தான் இருக்கிறோம்.

★ தமிழ்த்தட்டச்சுப் பலகைகள் இதுவரை இல்லை என்பதால் அதனைத் தயாரித்துப் பரவலாக்கவேண்டிய சூழலில்தான் நாம் இருக்கிறொம்.

★ முழுக்க முழுக்க தமிழ்க்கட்டளைகளைக் கொண்ட உலவி, ஆபிசு தொகுப்பு, அடாப்தொகுப்பு ஆகியன தமிழின் பரவலை அதிகரிக்கும். அவற்றை உருவாக்குவது குறித்து கணினிபடித்த தமிழர்கள் சிந்திக்கவேண்டும்.

★ தமிழ் இணையதளங்களைப் பார்க்கும்போது அவை ஆங்கில இணையதளங்களுக்கு இணையாக இருக்கின்றன. இது மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது.

★ தமிழ் வலைப்பதிவுகள் இணையதளங்களுக்கு இணையான மிகப்பெரிய ஆற்றலாக உருவெடுத்துள்ளன.

★ முகநூல், டுவைட்டர், கூகுள் பிளசு, ஆர்குட் உள்ளிட்ட சமூகத்தளங்களில் தமிழர்களின் பங்களிப்பு வரவேற்புக்குரியதாக உள்ளது. தமிழர்கள் எல்லோரும் தம் கருத்துக்களை தமிழ்மொழியிலேயே வெளியிட்டால் உலகநாடுகளெல்லாம் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு தமிழின் ஆதிக்கம் இருக்கும்.

★ எழுத்துருமாற்றிகளும், மொழிமாற்றிகளும், அகராதிகளும் இணையப்பரப்பில் தமிழின் ஆளுமைகளை வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன.

★ தமிழ்ச்சொல் திருத்திகளைத் தமிழுலகம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறது.

★ இணையத்தில் கிடைக்கும் தமிழ் மின்னூல்கள் தமிழரிடம் ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்வை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

★ தமிழ் ஒலிப்புத்தகங்களும், தமிழ்க்காணொளிகளும் தமிழின் காலத்துக்கு ஏற்ற வளர்ச்சிக்குச் சான்றாகின்றன.

★ அலைபேசிகள், டேப்ளட் பிசி, சுமார்ட் பிசி ஆகிய நவீன தொழில்நுட்பக் கருவிகளுக்கு ஏற்ப தமிழ் தன்னைத் தகவமைத்துக்கொண்டு வருகிறது.


★ நாள்தோறும் பெருகிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டிய பெரிய பணி தமிழர்களுக்கு உள்ளது.


★ நிகழ்கால ஆண்ட்ராய்டு, ஈதர் நெட், மேகக்கணினி, சிக்த் சென்சு தொழில்நுட்பங்களை உள்வாங்கி எதிர்காலத் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப தமிழ் மொழியைத் தகவமைக்கவேண்டிய பணி தமிழர்களுக்கு உள்ளது.


★ இன்றைய கணினிகள் தமிழ்மொழியைப் புரிந்து கொள்வதோடு, தமிழ் எழுத்துக்களை உள்ளீடு செய்து அவற்றை ஒலிக்கோப்புகளாகப் பதிவிறக்கிக் கொள்ளும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன. இது சீனமொழியோடு ஒப்பிடும்போது குறைந்தபட்ச வளர்ச்சிதான். அதனால் காலத்தின் தேவையை உணர்ந்து தமிழர்கள் யாவரும் கணினியைத் தமிழிலேயே பயன்படுத்த வேண்டும். இன்றைய சூழலில்,

கணினிகள் தமிழ்பேசும் நிலையில்தான் இருக்கின்றன. ஆனால் பல தமிழர்களுக்குத்தான் கணினியிடம் தமிழ்பேசத் தெரியவில்லை. தான் அறிவாளி என எண்ணிக் கொள்ளும்போது ஒரு அறிவாளி முட்டாளாகிறான் தான் முட்டாள் என்பதை உணரும்போது முட்டாள் அறிவாளியாகிறான் கணினியில், இணையத்தில் நாம் அறிவாளியா? முட்டாளா? என்று தன்மதிப்பீடு செய்து கொள்வோம். நம்மால் முடிந்தவரை கணினியிலும், இணையத்தில் நம் கருத்துக்களை வெளியிடுவோம்.

## வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!






உலகத்தில் அமைதியும் ஆன்மீக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.
* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.
* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.



மனவளக்கலைப் பயிற்சிகள் நாடெங்கிலுமுள்ள தவமையங்களில் நடைபெறுகின்றன.
வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, வத்தளை, யாழ்ப்பாணம், வவுனியா, ஹற்றன்
தொடர்புகளுக்கு


**53/1A,
Ramakrishna Road,
Wellawatta,
Colombo - 06.
T:P 011-5658412, 071-4042300**

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504, 051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**Easwaran Book Depot**
No. 126/1, Colombo Street, Kandy
Tel.: 081-2220820

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**விழுது - மட்டக்களப்பு**
இல 22, கலைமகள் வீதி,
நெச்சிமுனை, மட்டக்களப்பு
தொ.பே.இல - 065 - 2222500

**விழுது - திருகோணமலை**
81யு, ராஜவரோதயம் வீதி,
திருகோணமலை
தொ.பே.இல - 026 2224941

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**அறிவுநதி புத்தகசாலை**
இல 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
தொ.பே.இல.: 077 6737535

**Zeen Baby Care**
121B, Arm Mill Road,
Addalaichenai -01
Tel.: 077 3651138

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**பரணி புத்தகக் கூடம்**
நெல்லியடி ம.ம வீதி, நெல்லியடி
தொ.பே.இல - 077 5991949

**விழுது - புத்தளம்**
இல 24801 கொழும்பு வீதி,
தில்லையடி, புத்தளம்
தொ.பே.இல - 032 - 5740094

**விழுது - யாழ் மாவட்டம்**
இல 23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல - 021 2229866

Printed by
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo 06
kumbhlk@gmail.com

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under QD/26/News/2014